இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32

சுடர் 32 | கதிர் 144 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 06 புதன்கிழமை 19.04.2017

கம நலம்
ගොවි සෙත Govisetha
அதிக கோடீஸ்வரர்களை
உருவாக்கும் கம நலம்
இப்பொழுது
புதன்கிழமைகளிலும்..
திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய தினங்களில்
கம நலம்
NATIONAL LOTTERIES BOARD

மகிந்த அரசின் ஊழல்கள்;

## விசாரணை அறிக்கைகள் விரைவில் மைத்திரிக்கு

கொழும்பு, ஏப்.19
முன்னைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் நடைபெற்ற மிகப்பெரிய ஊழல்மோசடிகள் தொடர்பி >> 28

## கடல்நீரை நன்னீராக்க சாதகமான முடிவில்லை

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள பொது அமைப்புகள் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19
வடமராட்சி கிழக்கில், கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் தொடர்பாக இதுவரை சாதகமான முடிவு எதுவும் >> 28

## அன்னை பூபதி நினைவு இன்று மட்டக்களப்பில்



யாழ்ப்பாணம், ஏப்.19
அன்னை பூபதியின் 29ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு, மட்டக்களப்பு கல்லடியில் உள்ள அவரது கல்லறையில் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் அமைதிப் படை என்ற பெயரில், தமிழர் தாயகத்தில் நிலை கொண்டிருந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுத்ததுடன், பெரிய அளவிலான மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. இதற்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்கு மட்டு - அம்பாறை அன்னையர் முன்னணி முடிவெடுத்தது >> 28

## பாசையூர் கடலில் மீனவர் திடீர் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 18
மீன்பிடித்துக் கொண்டிருந்த குடும்பத்தலைவர் மாரடைப்பால் படகில் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம், பாசையூரைச் சேர்ந்த அந்தோனிப் >> 26

## அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்து ஜப்பானும் கரிசனை

கொழும்பு, ஏப்.19
அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில், ஜப்பானும் கரிசனை வெளியிட்டுள்ளது. >> 28

# சசிகலா குடும்பத்தை கூண்டோடு ஒதுக்கியது அ.தி.மு.க.

இரவோடு இரவாகச் சம்பவம்

சென்னை, ஏப்ரல் 19
அ.தி.மு. கழகத்தில் இருந்து சசிகலாவும் அவர் சார்ந்த குடும்பத்தினரும் நீக்கப்பட்டனர். தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, கட்சியின் மூத்த உறுப்பினர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள முதல்வர் பழனிச்சாமியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இரவோடிரவாக ஆலோசனை நடத்தி இந்த அதிமுக்கிய அறிவிப்பை வெளியிட்டனர். >> 04

யாழ். நகரில் சடலமாக மீட்ட

## குடும்பத்தலைவரின் இறப்பில் சந்தேகம்

அவரது உடற்பாகங்கள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஏப். 18
யாழ்ப்பாண நகர், கொழும்புத்துறை வீதியில் சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பத்தலைவரின் உடற்பாகங்கள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.
போதைப் பொருளை அதிகளவு உட்கொண்டதனால் தான் அவர் உயிரிழந்திருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே அவரின் உடற்பாகங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம், >> 27

காணிகள் விடுவிப்பு;

## யாழ்ப்பாண மாவட்ட பேச்சு வெள்ளியன்றே

யாழ்ப்பாணம், ஏப். 19
பாதுகாப்புத் தரப்பினரின் காணி விடுவிப்புக்கள் தொடர்பிலான, யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை நடை >> 28

## வறட்சியால் வடக்கில் 450,000 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19
வாட்டி வதைக்கும் வறட்சி காரணமாக வடக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 4 >> 28

## நழுவுகிறார் மகிந்த

கொழும்பு, ஏப்.19
ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததற்கு, இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' வே காரணம் என்று குற்றம் சுமத்தி >> 28

பேரன் உயிருடன் கிடைத்திராவிடின்

## அரசியல்தலைமைகளை அழிக்க வெடிகுண்டைச் சுமந்திருப்பேன்

குப்பைமேட்டுக்கு எதிரான இயக்கத்தின் ஏற்பாட்டாளர் கீர்த்திரத்ன கொதிப்பு



கொழும்பு, ஏப். 19
இந்த இடரிலிருந்து எனது பேரன் மட்டும் தப்பவில்லை என்றால், நான் தற்கொலைக் குண்டுதாரியாக மாறி அரசியல்வாதி >> 28

## தமிழ்-சிங்கள மீனவர் கொக்கிளாயில் முறுகல்



யாழ்ப்பாணம், ஏப். 19
முல்லைத்தீவு, கொக்கிளாய் கடற்கரைப் பிரதேசத்தில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகக் காணி அளவீட்டு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப் பட்டபோது தமிழ் -சிங்கள மீனவர்களுக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட் >> 04



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் கருத்துமோதல்கள் நிலவிவந்த நிலையில், இருவரும் நேற்று அன்னியோன்னியமாகக் கதைத்துப் பேசிச் சிரித்தனர். வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற புது வருட விழாவின் பின்னரே இந்தச் சம்பாசணை நடைபெற்றுள்ளது. (த-5)

## குப்பைமேடு சரிய காரணமானோரை ஐ.நா. முன் நிறுத்தி தண்டிக்கவேண்டும்

வலியுறுத்துகிறார் வாசுதேவ

கொழும்பு, ஏப்.19
மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து விழுந்தமைக்குக் காரணமானவர்களை ஐ.நா. முன்பாக நிறுத்தி தண்டனை வாங்கிக் கொடுக்கவேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் >> 28



# பயனாளி வசிக்காவிட்டால் அரசு கொடுத்த வீடு பறிமுதல்

## யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப் 19

யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்டுள்ள வீட்டுத்திட்ட வீடுகளில் பயனாளி வசிக்காவிட்டால் அவற்றை அதிகாரிகள் மீளக் கையகப்படுத்தவேண்டும் என யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்துக்காக வழங்கப்பட்ட வீடுகளில் 20 வீடுகள் பூட்டிய நிலையில் உள்ளதுடன் 5 வீடுகள் வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவின்போது பல முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன. இதில் பிரதேச செயலக அதிகாரிகள் தங்களுக்கு ஏற்ற பயனாளிகளைத் தெரிவு செய்து வீடுகளை வழங்கியுள்ளனர். இதனால் நியாயமாகவே வீடுகள் கிடைக்க வேண்டிய முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



பொதுமக்களுக்கே குடியிருக்க வீடுகள் வழங்கப்படாத நிலையில் கிராம சேவையாளருக்கு வீட்டுத்திட்டம் வழங்கியது சரியா? - என்றார்.

இதற்குப் பதிலளித்த பிரதேச செயலர், நாங்கள் வீட்டுத்திட்டம் வழங்கும்போது கடைப்பிடிக்கவேண்டிய சகல விடயங்களையும் ஆராய்ந்தே அவை வழங்கப்பட்டன. இதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக நீங்கள் எங்களிடம் அறிந்துகொள்ளலாம் - என்றார்.

இறுதியில் அனைத்து வீட்டுத்திட்டப் பயனாளிகளும் வழங்கப்பட்ட வீடுகளில் வசிக்காதுவிட்டால் அதனை மீள்பரிசீலனை செய்து கையகப்படுத்த வேண்டும் எனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதனை யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கும் அனுப்பிவைப்பதாக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்குத் தலைமை வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அறிவித் தார்.

(த-8)

# அனுமதி இல்லாத சுற்றுலா விடுதிகள் கைப்பற்றப்படும்

## யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப் 19

யாழ்ப்பாணத்தில் உள்ள அனுமதியில்லாத சுற்றுலா விடுதிகளை கையகப்படுத்தி மாநகரசபையிடம் ஒப்படைக்கவேண்டும் என யாழ்ப்பாணப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறைச்சாலைக்கு முன்னால் உள்ள கட்டடம் மற்றும் ஜே/65,ஜே/30 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள சுற்றுலா விடுதிகளையே இவ்வாறு கையகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாண சிறைச்சாலையில் கழிவுநீர் அகற்றுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இந்த கட்டடத்துக்கு நகர அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுமதியும் பெறப்படவில்லை. சிறைச்சாலைக் கட்டடம் அமைத்துள்ள காணியைச் சிறைச்சாலை திணைக்களத்துக்கு வழங்கப் பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழு அனுமதி மறுத்துள்ளது.

கழிவு நீர் தொடர்பிலும் டெங்குத் தொற்று தொடர்பிலும் பொதுமக்கள் மீது எவ்வாறான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றதோ அதேபோன்றே யாழ்ப்பாணச் சிறைச்சாலை கட்டடத்துக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

(த-8)

# தாஜுதீன் கொலை; உளவாளி ஒருவர் சி.ஐ.டிக்கு தகவல்

## சட்டமா அதிபர் மன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 19

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பில் தனியார் உளவாளி ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இரகசியத் தகவல்கள் வழங்கியுள்ளார். அவை தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகச் சட்டமா அதிபர் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

இந்த வழக்கு, கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. தனியார் உளவாளிகளின் தகவல்கள் தொடர்பில் சிறப்பு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகச் சட்டமா அதிபர் திணைக்கள மேலதிக மன்றாடியார் நாயகம் டிலான் ரத்நாயக்க மன்றில் தெரிவித்தார்.

"கொலை செய்யப்பட்ட தாஜுதீனின் கடனட்டையை உபயோகித்து யாரேனும் பணம் பெற்றுக்கொண்டுள்ளனரா? என்பது குறித்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அதுபோல் தாஜுதீன் கொலை செய்யப்பட்ட தினத்தில் கோட்டை அரச தலைவர் மாளிகையில் இருந்து புறப்பட்டுச் சென்ற வாகனம் ஒன்று தொடர்பில் தயார் செய்யப்பட்டிருந்த அறிக்கையில் இருந்து சில தாள்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவுள்ளோம்" என்று தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவு, அது தொடர்பில் நீதிமன்றில் நேற்று அறிக்கையைச் சமர்ப்பித்தது.

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் நாரஹேன்பிட்டி ஷாலிகா விளையாட்டரங்குக்கு அருகில் உள்ள வீதியில் கார் ஒன்றுக்குள் இருந்து 2012ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி சடலமாக மீட்கப்பட் டார்.

வாகன விபத்தில் அவர் உயிரிழந்ததாக முதலில் தெரிவிக்கப்பட்ட போதும், அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பது பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்ததாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதனிடையே, இந்தச் சம்பவம் தொடர்பில் சாட்சியை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரது விளக்கமறியல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

இந்தக் கொலையுடன் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வர் ஒருவருக்குத் தொடர்பு உள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-4)

# வர்த்தகரை அறைக்குள் பூட்டி தாக்கினார் மொத்த வியாபாரி

## 85,000 ரூபாவைப் பறித்ததுடன் காசோலையில் கையொப்பமும் பெற்றதாகக் குற்றச்சாட்டு

தென்மராட்சி, ஏப். 19

பொருள்கள் வாங்கச் சென்ற வர்த்தகரை மொத்த வியாபாரியொருவர் உள்ளிட்ட 17 பேர் அறையினுள் இழுத்துச்சென்று 3 மணி நேரம் கதறக் கதறத் தாக்கிவிட்டு அவரிடமிருந்து 85 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்ததுடன் வழங்கிய காசோலையில் 5 லட்சம் ரூபாவை மேலதிகமாகப் பதிவு செய்து கையொப்பம் பெற்றுவிட்டு வெற்றுத் தாள்களிலும் கையொப்பம் பெற்றுள்ளனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான வர்த்தகர் மறுநாள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து தாக்குதலுக்கு இலக்கான வர்த்தகர் தெரிவித்ததாவது:

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நான் பல வருடங்களாக யாழ்ப்பாணத்துக்கு வெளியே உள்ள மொத்த வர்த்தக நிலையத்தில் பணமும் காசோலையும் வழங்கிப் பொருள்களை வாங்கி வந்தேன்.

அவ்வாறு கடந்த சனிக்கிழமை 90 ஆயிரம் ரூபா காசோலையும் 30 ஆயிரம் ரூபா பணமும் கொடுத்து ஒருவரைக் குறித்த வர்த்தக நிலையத்துக்கு வாகனத்துடன் அனுப்பியிருந்தேன். சிறிது நேரத்தில் கணக்குகளைச் சீர் செய்யவேண்டுமென என்னை வருமாறு மொத்த விற்பனை நிலையத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. கடையை மூடிவிட்டு எனது 6 வயது மகனுடன் அங்கு சென்றிருந்தேன். கணக்குகள் சரிபார்க்கவேண்டுமென மாடிக்கு அழைத்துச் சென்ற கடை உரிமையாளரும் அவருடன் சேர்ந்த 16 பேரும் அறையொன்றுக்குள் வைத்து மாறி மாறித் தாக்கினர். காரணம் தெரியாமல் ஏன் தாக்குகிறீர்களெனக் கேட்டபோது, களஞ்சியத்தில் மோசடி செய்துள்ளாய் எனக் கூறி என்னால் அனுப்பப்பட்ட 90 ஆயிரம் ரூபா காசோலையில் 5 என்ற இலக்கத்தை முன்னுக்குப் பதிவு செய்து 5 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவுக்குக் கையொப்பம் பெற்றனர். அத்துடன் வெள்ளைத் தாள்களிலும் கையொப்பம் பெற்ற பின்னர் பொருள்கள் வாங்கி வரச் சென்றவரையும் எனது மகனையும் விடுவித்தனர்.

ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள் கொள்வனவுக்குப் பற்றுச்சீட்டு போடப்பட்ட போதிலும் பொருள்கள் வழங்கப்படவில்லை. நீ எந்தப் பொலிஸில் சென்று முறையிட்டாலும் எமக்குப் பயமில்லை எனக் கூறினர். அங்கிருந்து வீடு சென்று நேற்றுமுன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன். வைத்தியசாலைப் பொலிஸார் என்னிடம் விவரம் பெற்று கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிப்பதாகக் கூறிச் சென்றனர். நேற்று மாலைவரை கோப்பாய் பொலிஸார் வந்து முறைப்பாடு பெறவில்லை - என்றார்.

(த-9)

# போரில் உயிர்நீத்த படையினர் நினைவு யாழ்ப்பாணத்திலும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 19

போரில் உயிர்நீத்த இராணுவத்தினரின் நினைவு நிகழ்வை யாழ்ப்பாணத்திலும் நடத்த ஏற்பாடாகியுள்ளது. இதன்போது யாழ்ப்பாணத்தில் உள்ள நீர் நிலைகளைத் துப்புரவு செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

வடக்கு ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற புதுவருட நிகழ்வில் மாகாணத் திணைக்களங்களின் அதிகாரிகள், அரசியல்வாதிகள், இந்தியத் துணைத் தூதுவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதன்போது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 500 சிறுவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர் நீத்த இராணுவத்தினரின் நினைவு தினமான மே 7ஆம், 8 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது படையினர் மூலம் யாழ்ப்பாணத்தில் உள்ள நீர் நிலைகளைச் சீர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இராணுவத்தினருடன் இணைந்து கடற்படையினரும் செயற்படுவர். கடற்படையினர் தமது பணியின்போது படகுகளையும் பயன்படுத்தவுள்ளனர். இந்தப் பணிகள் இடம்பெறும் காலத்தில் படையினரின் கடமையால் வீதித் தடை ஏற்படாதிருக்க வீதிப் பாதுகாப்பில் பாடசாலைச் சாரணியர்களையும் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

துப்பரவு செய்வதற்காகக் குடாநாட்டில் 3 நீர் நிலைகள் இனம் காணப்பட்டுள்ளன. அவற்றில் முதலாவதாக ஆரியகுளத்தில் பணிகள் இடம்பெறும். இதனையடுத்து நல்லூர் றியோ கடை அருகில் உள்ள குளத்தையும் யாழ். நகரில் உள்ள புல்லுக்குளத்தையும் சீர்செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு மேற்கொள்ளும் பணிகளால் நகர் அழகுபடுத்தப்படுவதோடு டெங்கு நோயும் கட்டுப்படுத்தப்படும். குறித்த பணிகளுக்கான செலவை ஆளுநர் செயலகம் ஏற்றுள்ளது - என்றார்.

(த-101)

# இன்புளுவன்சா மருந்துக்கு தட்டுப்பாடு எதுவுமில்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

இன்புளுவன்சா நோயாளிகளுக்கு வழங்கும் டெம்ப்லு மருந்துக்கு எந்தவொரு பற்றாக்குறையும் இல்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜெயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

டெங்கு, வைரஸ் காய்ச்சல் மற்றும் இன்புளுவன்சா போன்ற நோய்களுக்கு வழங்கும் குறித்த மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியிருந்தது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுத் தவறானது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜெயசுந்தர பண்டார தெரிவித்தார்.

டெம்ப்லு மருந்துகள் இன்புளுவன்சா நோயாளிகளுக்கு மட்டுமே பாவிக்கப்படுகின்றன. அவை டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சலுக்கு பயன்படுத்துவதில்லை என்று அவர் மேலும் கூறினார்.

(த-4)

# இந்து சமய பாடத்தில் விரைவில் மாற்றங்கள்

## நிபுணத்துவக் குழு அமைக்க முடிவு



யாழ்ப்பாணம், ஏப். 19
இந்து சமய பாடத்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள், சுட்டிக்காட்டப்படும் விடயங்கள் என்பவற்றை ஆராய்ந்து மாணவர்கள் விரும்பிக் கற்கும் விதத்தில் மாற்றங்களைச் செய்வதற்காக நிபுணத்துவக் குழு உருவாக்கப்படவுள்ளது.

இந்து சமய பாடத்திட்டத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தலைமையில் கல்வி அமைச்சின் கேட்போர் கூட மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இவ்வாறான முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் குழுவில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றின் மேலதிகாரிகள், பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைசார் நிபுணர்கள், மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் உள்வாங்கப்படவுள்ளனர்.

கடந்த காலங்களில் அரசு இந்து சமய பாடநெறி தொடர்பாகவும் பாடத்திட்டம் தொடர்பாகவும் உரிய முறையில் கவனம் செலுத்தாமை காரணமாக பல்வேறு குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமல் உள்ளன. இதனால் இந்து சமயத்தைக் கற்பதில் மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இந்து சமய பாடத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளை இனங் கண்டு திருத்தங்களை மேற்கொள்வதற்காகவே இந்த நிபுணர்குழு அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்ததாவது:

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 11 வரையான இந்து சமய பாடத்திட்டத்தில் மாணவர்களின் தகுதிக்கு அப்பாற்பட்ட பல விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக நிபுணத்துவம் பெற்ற பலர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். இதற்கான ஒரு முறையான ஏற்பாட்டை மேற்கொள்ளும் வகையில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதன்போது பல்வேறு கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன. இந்து சமய பாடத்திட்டத்தில் மாணவர்களின் தகுதிக்கு அப்பாற்பட்ட பல விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளமையால் இந்து சமயத்தைக் கற்பதில் மாணவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்த நிலைமை தொடருமானால் மாணவர்கள் எதிர்காலத்தில் இந்து சமயம் தொடர்பான கற்கைக்கு முக்கியத்துவம் வழங்கமாட்டார்கள். அவர்களுக்கு இந்த பாடத்திட்டம் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டுவிடும். அதற்கு இடமளிக்க முடியாது. இந்து சமய பாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்கும் வகையில் அமைப்பதற்காக நிபுணத்துவம் வாய்ந்த குழு அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவால் இந்து சமய பாடப் புத்தகத்தில் காணப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்படுவதோடு, எதிர்காலத்தில் நிபுணத்துவக்குழுவின் பரிந்துரைக்கு அமையவே பாடத்திட்டம், பாடப் புத்தக வெளியீடு அனைத்தும் நடைபெறும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சின் வெளியீட்டுத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பாளர் லெனின் மதிவாணன், தேசிய கல்வி நிறுவகத்தின் இந்து சமய பாடத்துக்குப் பொறுப்பான விரிவுரையாளர் பொன் ஜெயரூபன், பேராசிரியர்களான சி.பத்மநாதன், ஏ.என்.கிருஸ்ணவேணி, மருத்துவர் க.இரகுவரன் உட்பட ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (த-10)

## மீதொட்டமுல்ல இடரில் உயிர்நீத்தோருக்கு அஞ்சலி

கொக்கட்டிச்சோலை, ஏப்.19
மீதொட்டமுல்ல பகுதியில் குப்பைமேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்த மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

தமக்கு வேலை வழங்குமாறு கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்பாக 57ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வேலை தேடும் பட்டதாரிகளே இவ்வாறு அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது உயிர்நீத்தவர்களுக்குச் சுடரேற்றி, மலரஞ்சலியுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டது. (த-ய)

## கிண்ணியாவில் மீண்டும் டெங்கு

பொலிஸ் கான்ஸ்டபிள் சாவு

திருகோணமலை, ஏப்.19
திருகோணமலை கிண்ணியா தள வைத்தியசாலையில் கடந்த 13ஆம் திகதி காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள் >>04

## கைதாகி விடுதலையானார் தொழிலதிபர் மல்லையா



லண்டன், ஏப். 19
பாரத ஸ்டேட் வங்கி உட்பட 17 வங்கிகளிடம் வாங்கிய 9 ஆயிரம் கோடி ரூபா (இந்திய மதிப்பில்) கடனைத் திருப்பிச் செலுத்தாமல் பிரிட்டனுக்குத் தப்பிச் >>28

## யானையை சுட்டுக் கொன்ற வன அதிகாரி இடைநிறுத்தம்

வவுனியா, ஏப்.19
வவுனியா கொம்பு வைத்தகுளம் பகுதியில் உள்ள குழிக்குள் வீழ்ந்த யானையை சுட்டுக்கொன்ற வனவளத் துறை அதிகாரி தற்காலிகமாக சேவையில் இருந்து இடைநிறுத் >>08

60 வயதுக்கு மேல் சகலருக்கும் ஓய்வூதியம்:

## சைக்கிள் பயணத்தை நேற்று நிறைவு செய்தார் பிரதாபன்



கொழும்பு, ஏப். 19
60 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனக் கோரி வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட சைக்கிள் பயணம், 11 நாள்களின் பின்னர் மீண்டும் >>28

## முன்னாள் போராளிகளான 35 பட்டதாரிகளுக்கு வேலை

### அமைச்சரவை அனுமதி கிடைத்தது

யாழ்ப்பாணம், ஏப். 19
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளாக இருந்து பட்டதாரிகளான 35 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குவது குறித்து தனியான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச வேலை கோரிப் போராடும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பை வழங்கும் கடமை மாகாண சபைக்கு உண்டு. அதற்கு அடுத்தபடியாக மத்திய அரசுக்கும் உண்டு. இருப்பினும் குறித்த பட்டதாரிகள் விடயம் 2 மாதமாகவே எனது கவனத்துக்கு வந்தது. அப்போது எத்தனை பட்டதாரிகள் உள்ளனர் என்ற விவரங்கள் தெரியாமல் இருந்தனர். குறித்த விவரங்களைப் பெறுவதற்காக இரு வார காலம் அவகாசம் கோரியிருந்தனர். தற்போது குறித்த விவரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உடனடியாக வேலைவாய்ப்பை வழங்க நான் அமைச்சர் கிடையாது. இருப்பினும் வேலைகோரும் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கத் திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையும் கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 1,300 தொண்டராசிரியர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிட்டவுள்ளது. இதேபோன்று முன்னர் புலிகள் அமைப்பில் இருந்த 35 பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புத் தொடர்பிலும் தனியான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. அவர்களுக்கும் வேலை வாய்ப்புக் கிட்டும் - என்றார். (த-101)

## சாரதியைத் தாக்கிவிட்டு ஓட்டோவுக்கு தீ வைப்பு

பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 19
சாலையில் பயணித்த முச்சக்கர வண்டியை வழிமறித்த 2 பேர் சாரதியைத் தாக்கிவிட்டு முச்சக்கர வண்டிக்குத் தீ வைத்தனர் என்று முறைப்பாடு கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை கற்கோவளத்தில் நேற்றிரவு இடம்பெற்றது.

"முச்சக்கர வண்டி சாரதிக்கும் தாக்குதல் நடத்திய நபர்களுக்கும் இடையே ஏற்கனவே முரண்பாடு உள்ளது. அவர்கள் ஏற்கனவே இணக்க சபைக்கு விடப்பட்டிருந்தனர். இந்த நிலையிலேயே நேற்று இவ்வாறான சம்பவம் தொடர்பில் முறைப்பாடு கிடைத்தது. அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-26)

## கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஏப். 19
உள்ளூர் கைக்குண்டு ஒன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வடமராட்சி அல்வாய் மகாத்மாகாந்தி சாலையில் வைத்து ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"பல திருட்டு, கொள்ளை, வாள்வெட்டுக் குற்றச்சாட்டில் அவர் தேடப்பட்டு வந்தவர். நீதிமன்றால் அவர் மீது 5 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அல்வாயைச் சேர்ந்த 21 வயதுடைய குறித்த நபர் பல மாதங்களாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர். எனினும் அவர் தலைமறைவாகி இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் நேற்றுக் கையும் மெய்யுமாக அவர் பிடிபட்டார். அவரைச் சோதனைக்கு உட்படுத்தியபோது அவரிடம் உள்ளூர் தயாரிப்பான கைக்குண்டு ஒன்று இருந்தமை கண்டறியப்பட்டு மீட்கப்பட்டது. பல இடங்களில் இடம்பெற்ற திருட்டு மற்றும் கொள்ளைச்சம்பவங்களில் அவர் தொடர்புபட்டுள்ளார். வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பிலும் அவருக்கு எதிராக முறைப்பாடுகள் உள்ளன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-26)

வடமராட்சி கிழக்கில்

# வயிற்றுவலியால் அவதிப்பட்டவர் வைத்தியசாலையில் உயிரிழப்பு

வயிற்றுவலியால் அவதிப்பட்ட ஒருவர் குடல் முறுகி - குடல் அடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வடமராட்சி கிழக்கு மணற்காட்டைச் சேர்ந்த ஜோன்சன் பெனடிக்ற் (வயது - 44) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த நபர் வயிற்றுவலியால் அவதிப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை 2.30மணியளவில்சேர்க்கப்பட்டார். சுமார் 5மணித்தியாலங்களின் பின்னர் அவர் உயிரிழந்தார்.

"குறித்த இறப்புத் தொடர்பில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வைத்தியசாலை நிர்வாகம் மீது குற்றஞ்சாட்டுகின்றனர். அவரை வயிற்றுவலியால் துடிதுடிக்கச் சேர்க்கப்பட்டபோதும் மருத்துவர் எவரும் பார்வையிட்டிருக்கவில்லை. மருந்து மாத்திரை வழங்கப்பட்டிருக்கவில்லை. அவர் வேதனையால் மருந்து மாத்திரை கேட்டிருந்தபோதும் அவர்களால் வழங்கப்படவில்லை. நேற்றுக் காலை (நேற்றுமுன்தினம்காலை) 7.30 மணியளவில் அவர் உயிரிழந்து விட்டார்" என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

"சம்பவம் தொடர்பில் உரிய தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. எனினும் அது தொடர்பில் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்" என்று மந்திகை வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (வ-4-26)

# மயிலிட்டியில் ஆயுதக் கிடங்கு முழுப் பொய்

அப்படி ஒன்றுமே இல்லை என்கிறார் ராணுவத் தளபதி

மயிலிட்டியில் ஆயுதக் கிடங்கு இருப்பதாகச் சொல்லப்படுவது முழுப் பொய். அப்படி ஒன்றும் அங்கே இல்லை.

இவ்வாறு இராணுவத் தளபதி கிரிசாந்த டி சில்வா, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பாதுகாப்புஅமைச்சில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இந்தத்தகவலைவெளிப்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணம் மயிலிட்டித் துறைமுகத்துக்குத் தனியார் வர்த்தக கப்பல்கள் வந்து செல்கின்றன. ஆனால் பொதுமக்களின் பாவனைக்கு அதனை ஏன் கையளிக்க மறுக்கின்றீர்கள் என்று கடற்படையினரிடம், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்குக் கடற்படையின் தேசிய திட்டமிடல் பணிப்பாளர் குருகுலசீரிய, அவ்வாறு நடைபெறவில்லை என்று பதில் வழங்கியுள்ளார். இதற்குக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை, இப்போதும் அப்படி நடைபெறுகின்றது என்று அடித்துக் கூறி யுள்ளனர். அதற்கு குருகுலசீரிய, ஆராய்வதாகப் பதில் வழங்கியுள்ளார். இதன் பின்னர், மயிலிட்டியில் ஆயுதக் கிடங்கு உள்ளது. அதனை இடமாற்றவேண்டியிருப்பதால் அந்தப் பகுதியை விடுவிப்பதற்கு தாமதிப்பதாகச் சொல்லப்படுகின்றதே என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்கேள்விஎழுப்பினர். இதற்கு இராணுவத் தளபதி, அது பொய்யான கதை. அப்படி ஒன்றும் இல்லை என்று கூறியுள்ளார். இதற்குக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இல்லை. அது உண்மையான தகவல் என்று பதில் கொடுத்துள்ளனர். அதற்கு மீண்டும் இராணுவத் தளபதி அது பொய்யான தகவல் என்று குறிப்பிட்டுள்ளார். இதன் போது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கேள்விப்பட்ட தகவலைச் கூறியுள்ளனர் என்று விடயத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். (த-5)

## தமிழ்...

டது. இதன் பின்னர் அங்கு வந்த கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலக காணிப் பகுதியினர், நீதிமன்ற உத்தரவுக்கு முரணாக நில அளவை செய்யப்படுவதாகக் கூறி அங்கிருந்து வெளியேறினர். இதனால் நில அளவை நடவடிக்கை நேற்றுக் குழப்பத்தின் மத்தியிலேயே முன்னெடுக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் கடற்கரையில் உள்ளூர் மீனவர்களின் வாடி அமைப்புக்கெனப் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட நிலம் தென்னிலங்கை மீனவர்களுக்கான கரைவலைப்பாட்டுப் பகுதிக்குள் உள்ளடங்குவதால் குறித்த வாடியைத் தடை செய்யவேண்டும் எனக் கோரி 3 தென்னிலங்கை மீனவர்களின் சார்பில் நீரியல் வளத் திணைக்களம் கடந்த ஆண்டு முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இதன்படி கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி நடந்த வழக்கின்போது வாடி அமைப்புக்காக வழங்கப்பட்ட பிரதேசம் தென்னிலங்கை மீனவர்களின் கரைவலைப்பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் அடங்கவில்லை எனப் பிரதேச செயலாளரினால் அரச நில அளவையாளரின் அளவீட்டு ஆவணம் ஊடாக முல்லைத்தீவு நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

நில அளவைத் திணைக்களம் மேற்கொண்ட அளவீட்டை ஏற்கமுடியாது எனவும், அதனை இரத்துச் செய்யுமாறும் நீரியல் வளத் திணைக்களம் மன்றில் கோரியிருந்தது. இதனை ஏற்க மறுத்த நீதிமன்றம், சகல தரப்பினர் முன்பாகவும் மீண்டும் அளவீடு செய்து அதன் விவரத்தை மன்றில் சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டிருந்த்து.

இதன்பிரகாரம் நேற்று அளவீட்டை மேற்கொள்ள அனைவரும் அங்கு கூடியவேளை சிங்கள மீனவர்களுக்கும் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமையக் கரைவலைப்பாட்டுக்குரிய பகுதியை அளவிடும் பணிகள் மேற்கொள்வதற்காகக் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகக் காணிப் பகுதி அதிகாரிகள், முல்லைத்தீவு கிராம சேவகர்கள், நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், கொழும்பில் இருந்து வந்த நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், நில அளவைத் திணைக்களஅதிகாரிகள்என அனைவரும்கூடியிருந்தனர்.

இதன்போது, கொழும்பில் இருந்து வந்த நீரியவளத் திணைக்கள அதிகாரிகள், சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பில் உள்ள முகத்துவாரம் தலைப்பாடு என்ற பகுதியில் இருந்து 300 மீற்றருக்கு அப்பாலேயே அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்படவேண்டும் எனக் கூறிப் பணிகளை ஆரம்பித்தனர். இந்த அளவீட்டு நடவடிக்கை நீதிமன்ற உத்தரவுக்கு முரணானது என்றும், நீரியல்வளத் திணைக்களம் பக்கச்சார்பாகச் செயற்படுவதாகவும் கூறிய கரைதுறைப்பற்று காணிப்பகுதி அதிகாரிகள் அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதனால் தமது வசமுள்ள தலைப்பாடு என்ற பகுதியில் இருந்து அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கச் சிங்கள மீனவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். எனினும் தலைப்பாடு என்ற பகுதியில் இருந்தே அளவீட்டை மேற்கொள்ளவேண்டும் எனத் தமிழ் மீனவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இதனால் சிங்களதமிழ் மீனவர்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதோடு பெரும் பதற்றமும் நிலவியது.

இதனையடுத்து பொலிசார் சம்பவ இடத்துக்கு வந்தனர். அவர்கள் அங்கு நின்ற தமிழ் மீனவர்களை அகற்ற முயன்றதால் பதற்றம் மேலும் அதிகரித்தது. உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு தகவல் பறக்க அவர்களும் அங்கு கூடினர்.

இறுதியில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் மட்டும் சமூகமளித்த நிலையில் நில அளவை உத்தியோகத்தர்களால் காணி அளவீடு மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 24ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-101)

## சசிகலா...

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் அவர் வகித்து வந்த அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் பதவி சசிகலாவுக்கும் முதல்வர் பதவி ஓ. பன்னீர்செல்வத்துக்கும் வழங்கப்பட்டன. கட்சியும் ஆட்சியும் ஒருவரிடத்தில் இருக்க வேண்டும் என்று தெரிவித்து ஓ.பன்னீர்செல்வத்திடம் இருந்து முதல்வர் பதவியை எடுத்துக்கொள்ள சசிகலா முடிவுசெய்தார். இதனால் கட்சி இரண்டாக உடைந்தது. சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா சிறைக்குச் செல்லுவதற்கு முன்னர் தனது அண்ணன் மகன் டி.டி.வி. தினகரனை துணைப் பொதுச்செயலாளராக நியமித்தார். தினகரன் ஜெயாவால் நீக்கப்பட்டவர். எனவே அவரது நியமனத்தை கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஏற்கவில்லை. குறிப்பாக ஓ. பன்னீர்ச்செல்வம் இது குடும்ப ஆட்சி என்று விமர்சித்தார்.

ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆர்.கே. நகரின் இடைத் தேர்தலில் வேட்பாளராக தினகரன் நிறுத்தப்பட்டார். அவரை முதல்வராக்கவே சசிகலா திட்மிடுகிறார் என்று குற்றம்சாட்டப்பட்டது. இடைத்தேர்தலில் வாக்குகளுக்கு பணம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு தினகரனின் மீது சுமத்தப்பட்டது. இதையடுத்து இடைத் தேர்தலை நடத்தாது கைவிட்டது இந்தியத் தேர்தல் ஆணையகம். இரட்டை இலைச்சின்னத்தை மீட்பதற்காக அவர் இந்தியத் தேர்தல் ஆணையத்தக்கு லஞ்சம் கொடுத்தார் என்று புதுடில்லி பொலிஸார் ஆதாரத்துடன் வழக்குப் பதிவுசெய்துள்ளனர். இன்னும் சில தினங்களில் தினகரன் கைதுசெய்யப்படலாம் என்று இந்திய ஊடகங்கள் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பின்னணியில் தினகரனை கட்சியில் இருந்து நீக்கினால் இணைந்து செயற்படலாம் என்று ஓ.பன்னீர்ச்செல்வம் அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் இரவும் நேற்று இரவும் ஆலோசனை நடத்திய தமிழக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சசிகலா குடும்பத்தை அடியோடு நீக்கிவிட்டு கட்சியை நடத்துவது என்று முடிவெடுத்து நேற்றிரவு அறிவித்தனர்.

தமிழக நிதி அமைச்சர் ஜெயக்குமார், இந்த அறிவிப்பை முதன்முதலாக வெளியிட்டார்.

"தினகரன், சசிகலா ஆகிய இருவரும் அவர்கள் சார்ந்த குடும்பத்தையும் கட்சியிலிருந்தும் ஆட்சியிலிருந்தும் முழுமையாக ஒதுக்கி வைக்கிறோம். அவர்களின் தலையீடு கட்சியில் எள்ளளவும் இருக்கக்கூடாது. நீண்டநாள் பரிசீலனையின் பின்னரேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஓ.பன்னீர்செல்வம் தரப்பினருடன் விரைவில் நிபந்தனையற்ற பேச்சு நடத்தப்படும். கட்சியை நிர்வகிக்க குழு அமைக்கப்படும்" என்று நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இதற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியலிங்கம், தேவைப்பட்டால் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடத்தப்படும் என்றும் சசிகலா குடும்பத்தை இனி ஏற்கப்போவதில்லையென 100 சதவீதம் முடிவெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இருந்தபோதும் அமைச்சர்கள் கூடி முடிவெடுத்திருப்பதை ஏற்க முடியாது என அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினரான வெற்றிவேல் தெரிவித்திருக்கிறார்.

தமிழக சட்டமன்றத்தில் ஆளும் அ.தி.மு.க அம்மா அணிக்கு 123 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அறுதிப் பெரும்பான்மைக்கு 118 உறுப்பினர்கள் தேவை என்ற நிலையில், சில சட்டமன்ற உறுப்பினர்கள், மாறுபட்ட நிலைப்பாட்டை எடுத்தாலும் ஆட்சி கவிழக்கூடிய நிலை ஏற்படும்.

டி.டி.வி தினகரன் தரப்புக்கு 5சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே ஆதரவாக இருக்கின்றனர் என்று நேற்று நள்ளிரவில் தெரிவிக்கப்பட்டது. (வ-ம)

## கிண்ணியாவில்...

ளார். கிண்ணியா குறிஞ்சாங்கேணி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அபூ ஹனீபா நயீம் (வயது44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாகக் கடந்த 13ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட இவர் டெங்குநோயால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டதையடுத்து கவுமேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் எனத் தெரியவருகின்றது. கிண்ணியாவில் மீண்டும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை அதிகாரியொருவர் தெரிவித்தார். ஜனவரி முதல் இன்றுவரை திருகோணமலை மாவட்டத்தில் டெங்குநோய் காரணமாக 17 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ய-45)


# Immediate Vacancy

## IT EXECUTIVE

**The Main Responsibilities of the Job Role**

- Installing & Maintaining of Computer Hardware and Network.
- Maintaining Wi-Fi Network and LAN Network.
- End User Support.
- Graphic Designing and other special activities would be an advantage.
- Purchasing computer items and maintaining records.

**Qualifications & Requirements**

- Academic & Professional Qualification in Computer Hardware & Networking
- One Year Experience in Similar Capacity

Salary negotiable

Send us a CV inculding two non related referees to
Jaffnavacancy@gmail.com


## மரண அறிவித்தல்



பிறப்பு 07 . 08 . 1927

இறப்பு 15 . 04 . 2017

### திருமதி மரியம்மா அல்பிறட் இராசநாயகம்

சில்லாலையைப்பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா அல்பிறட் இராசநாயகம் 15.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - வெரோணிக்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிலிப்பையா - எலிசபெத் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற அல்பிறட் இராசநாயகத்தின் அன்பு மனைவியும், சசாங்கன் (நோர்வே), சுதர்மினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், டெய்சியின்(நோர்வே) அன்பு மாமியாரும், தஷிலா, பல்றினா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், செலினா (நோர்வே), சறோமி (நோர்வே), பியான்ஷா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்றதிரேசம்மா, அன்னம்மா(சில்லாலை), மாகிறட்(சில்லாலை), காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, வேதநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.04.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணிவரை பொரல்லையிலுள்ள A.F. றேமன்ட் மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு நல்லடக்க ஆராதனை நாளை (20.04.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பொரல்லையிலுள்ள A.F. றேமன்ட் மலர்ச்சாலையில் இடம்பெற்று பூதவுடல் கனத்தை கத்தோலிக்கசேமக்காலையில்நல்லடக்கம்செய்யப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி :-
25.6/2.E.S. பெர்னாந்து மாவத்தை,
கொழும்பு - 06

தகவல்:
குடும்பத்தினர்.

சுதர்மினி (கொழும்பு - +9411 255 4652),
சசாங்கன் (நோர்வே - +4722 722 962)

# பூர்வீகக் கிராமங்களை விட்டு வெளியேறும் மக்கள்

## அடிப்படை வசதிகள் இன்மையால் மன்னாரில் அவலம்

மன்னார்,ஏப்.19
மன்னார் மாவட்டம் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆத்திமோட்டை, கூராய் , சீதுவிநாயகபுரம் கிராமங்களில் முன்பு 400 குடும்பங்கள் வாழ்ந்தனர். இன்றுவெறும் 150 குடும்பங்கள் மட்டுமே வாழும் அவலம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறுவதற்கு அங்கு போதிய அடிப்படை வசதிகள்இல்லாமையே காரணம் எனவும் கூறப்படுகிறது.

ஏ-32 சாலையில் இலுப்பையடிச் சந்தியின் கிழக்குத் திசையில் 5 கிலோ மீற்றர் தொலைவில் ஆத்திமோட்டைக் கிராமமும், 8 கிலோ மீற்றர் தொலைவில் கூராய் கிராமமும் உள்ளன. 13கிலோ மீற்றர் தொலைவில் சீது விநாயகபுரம் கிராமம் உள்ளது. இந்தக் கிராமங்களின் மக்கள் விவசாய நடவடிக்கைகளிலும், கால்நடைவளர்ப்பிலும் ஈடுபட்டனர். பல சைவ ஆலயங்கள், கத்தோலிக்க ஆலயங்கள் மிகப் பெரிய அளவில் கட்டப்பட்டுள்ளதுடன், இருபாடசாலைகளின் கட்டடங்களும் உள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட கல் வீடுகள் இருந்த அடையாளங்களும் உள்ளன. ஆனால் இன்று வீடுகளும் இல்லை. அதில் குடியிருந்தவர்களும் இல்லை.

ஆத்திமோட்டையில் இருந்த பாடசாலையில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்ற நிலையில், இன்று 10 மாணவர்கள் அற்ற நிலையில் அந்தப் பாடசாலை கள்ளியடியுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. கூராயில் இயங்கிய பாடசாலை மட்டும் தற்போதும் இயங்கும் நிலையில் அங்கும் போதிய மாணவர்கள் கிடையாது.

80 குடும்பங்கள் வாழ்ந்த ஆத்திமோட்டையில் இன்று 10 குடும்பங்களும் , 120 குடும்பங்கள் வாழ்ந்த சீது விநாயகர்புரத்தில் 30 குடும்பங்களுமே வாழ்கின்றனர். கூராயில் 200 குடும்பங்கள் வாழ்ந்த நிலையில் தற்போது 100 குடும்பம் வரையில் வாழ்கின்றனர்.

இந்தக் கிராமங்களுக்குச் செல்லும் 13 கிலோ மீற்றர் தூர வீதி, தற்போது வரையில் மணல் வீதியாகவே காட்சியளிப்பதோடு குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றது.

எஞ்சியவர்கள் உயிர்வாழவும், இருப்பிடத்தை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் சொந்த இடம் திரும்பவும் இந்த வீதியைச் சீரமைத்துத் தரவேண்டும்" என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-101


# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

## பெறுகைக்கான அழைப்பு

## மருத்துவ உபகரண பொருள்கள் வழங்கல் - 2017/18

வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழு தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த மருத்துவ உபகரண பொருள்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருள்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| HSDP/MEP/2017/01 | Exercise bands (05 Different Sizes) | 05 | 10,000.00 |
| | IR Lamp | 01 | |
| | Power web | 06 | |
| | Knee role | 02 | |
| | Bouncing putty set | 02 | |
| HSDP/MEP/2017/02 | Little junior 4 pack | 01 | 30,000.00 |
| | AED training system | 01 | |
| | Paediatric intubation trainer | 01 | |
| | Cardiac rhythm simulator | 01 | |
| | Bag valve mask(adult &pae) | 05 | |
| | Hard cervical collar (adult) | 15 | |
| | Spinal board | 10 | |
| | Protective helmet | 30 | |
| | Hard cervical collar(pae) | 15 | |
| | Large fixed Oxygen cylinder | 15 | |
| | Portable oxygen cylinder | 15 | |
| HSDP/MEP/2017/03 | Featus Cope | 04 | 15,000.00 |
| | Digital thermo meter | 24 | |
| | Auroscope | 04 | |
| | Laryngoscope(pae& neonatal) | 01 | |
| | Laryngoscope (adult & pae) | 02 | |
| | BP Apparatus(LCD) | 10 | |
| | BP Apparatus(anroid) | 12 | |
| | Stethoscope | 14 | |
| | ophthalmoscope | 03 | |
| HSDP/MEP/2017/04 | Bar beds | 02 | 15,000.00 |
| | Adjustable chair (back rest) | 01 | |
| | ETU Beds | 03 | |
| | Air mattress | 04 | |
| | Sponge mattress with rexine cover | 20 | |
| | Reflective vest for each crew person | 45 | |
| | Examination bed | 06 | |
| | ICU Beds | 02 | |
| | Lab chair | 01 | |
| | Lithotomy bed | 01 | |
| | | | |
| | | | |

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| HSDP/MEP/2017/05 | Diet trolley | 02 | |
| | Dressing trolley | 01 | 10,000.00 |
| | Emergency trolley | 01 | |
| | Folding screen | 11 | |
| | IV Stand | 14 | |
| | Medicine trolley | 03 | |
| | Over bed trolley | 01 | |
| | Patient trolley | 03 | |
| | Wheel chair | 03 | |
| HSDP/MEP/2017/06 | Height measuring board | 13 | 13,000.00 |
| | Infant beam balance | 05 | |
| | Hanging scale | 07 | |
| | Weighing scale(bathroom) | 04 | |
| | Calibrate set | 05 | |
| | Delivery set | 30 | |
| | Vision chart | 06 | |
| HSDP/MEP/2017/07 | Autoclave | 01 | 10,000.00 |
| | Light microscope | 01 | |
| | Spot lamp | 03 | |
| | X-Ray illuminator | 04 | |
| | Fluid warmer | 01 | |
| | Lab refrigerator | 02 | |
| HSDP/MEP/2017/08 | Peak flow meter | 02 | 15,000.00 |
| | Syringe pump | 02 | |
| | ECG Machine | 01 | |
| | Multi para monitor | 02 | |
| | Infusion pump | 04 | |
| | Pulse oxymeter | 02 | |
| HSDP/MEP/2017/09 | Nebulizer | 02 | 13,000.00 |
| | Suction device | 01 | |
| | Transport suction device | 05 | |
| | Ultrasonic nebulizer | 03 | |
| | defibrillator | 01 | |
| HSDP/MEP/2017/10 | Dental X-Ray | 01 | 10,000.00 |
| | Light cure machine | 05 | |
| | Micro motor hand piece | 02 | |
| | Scalar machine | 02 | |

* விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருள்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
* ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
* நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப்பணிமனையில் கிடைக்கும் "Application for Bid Documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 19.04.2017 தொடக்கம் 09.05.2017 வரையான காலப்பகுதியில் 9.00 மணி தொடக்க15.00 மணி வரை(12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
* விலைக்கேள்விகள் 09.05.2017 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 09.05.2017 ஆம் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
* தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (T.P: 021 229 0111, 021 229 0105, Fax: 021 229 0104) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
* கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்ளுவதற்கு இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி த.பூங்கோதை**
தலைவர்
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு.

## மரண அறிவித்தல்



### திருமதி சிவபாலாம்பிகை பரமசிவம்பிள்ளை

**(பொன்னாவளை, களபூமி, காரைநகர்)**

பாலாவோடை, காரைநகரைப் பிறப்பிடமாகவும், பொன்னாவளை, களபூமி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாலாம்பிகை பரமசிவம்பிள்ளை 16.04.2017 ஞாயிற்றுக் கிழமை காரைநகரில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை பரமசிவம்பிள்ளையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகளும், AR.வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும், சோதிலிங்கம் (பிரான்ஸ்), சிவராஜினி, கண்ணதாசன் (கணக்காளர், வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய்), கரன் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயந்தி மற்றும் சுபமூர்த்தி (SVM வர்த்தக நிலையம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிறிதரன் (விநாயகர் களஞ்சியம் - யாழ்ப்பாணம்), நாகநந்தினி (பிரான்ஸ்), அனுஷா, றஞ்சினி (லண்டன்), சோபனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆரூரன், சிவாஜினி, சிவதாரணி, அபிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், தேவராசா மற்றும் இராசமலர் (டென்மார்க்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், ARV சோமசுந்தரம், கனகம்மா (லண்டன்), தவமணிதேவி (யாழ்ப்பாணம்), யோகேஸ்வரி (வவுனியா), சரஸ்வதி (வவுனியா), சபாநாதன் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனியும், கமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், குலரத்தினம், ஆறுமுகதிலகர் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2017) வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**0718561327, 0775707683**

## மரண அறிவித்தல்

**மலர்வு**
**15 . 07 . 1956**



**உதிர்வு**
**17 . 04 . 2017**

**"தேசபந்து, தேசமான்ய, சாமமான்ய"**

### பெரியதம்பி நடராஜா சுகுமார் (J.P) MSI

**(இளைப்பாறிய நில அளவை உத்தியோகத்தர் மற்றும் மட்டம் பார்ப்பவரும், நீதிமன்ற ஆணையாளரும்)**

ஆத்தியடி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, வெளிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி நடராஜா சுகுமார் 17.04.2017 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி நடராஜா - சௌந்தர்யநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அனுசுயாவின் அன்புக் கணவரும், அமுதா, சிவகுமார் (ஜேர்மனி), சந்திரகுமார் (லண்டன்), ரவீந்திரகுமார் (லண்டன்), சந்திரமோகன் (கனடா), சுகிர்தமலர் (பிரான்ஸ்), இளங்குமரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சுஜன் (Vastec Computer, வவுனியா), கேதீசன் (Ocean பல்கலைக்கழக மாணவன்), சுகந் (உப பொலிஸ் பரிசோதகர் - மன்னார்), டுசாந்திகா (ஆசிரியர் - சிதம்பரபுரம் மகாவித்தியாலயம் - வவுனியா), டுஷாந் (யாழ். பல்கலைக்கழக வர்த்தக பீட மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகிந்துஷா (நிர்வாக உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நெடுங்கேணி), நிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வெளிக்குளத்தில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"மாருதி மஹால்"**
**வெளிக்குளம், வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 087 8235, 0711037370**

## மரண அறிவித்தல்

### திருமதி
### மனோன்மணி தங்கராஜா



நவாலி வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, முருகமூர்த்தி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி தங்கராஜா நேற்று (18.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் தங்கராஜாவின் அன்பு மனைவியும் இந்திராணி, விக்னராஜா, காலஞ்சென்ற சிவராஜா, புஸ்பம், சுவேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிஜினோல்ராஜ், ரூபேஜ்ராஜ், நிஜிதாஜினி ஆகியோரின் அன்புத் தாயும் தாரணி, சிவாஜினி, நிர்மலன் ஆகியோரின் அன்பு மாமியும் மதுரிகா, அஷ்மிகா, லினோஜ்ராஜ், அனிஷ், கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2017) புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை. 021 222 1764**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## 11 ஆம் ஆண்டு நினைவினில்



அமரர்
**நவரத்தினம் பிரகாஸ்**

மண்ணில் 24.02.1988
விண்ணில் 19.04.2006

பாரினிலே பல புதுமைகள்
படைப்பாயென்றிருந்தோம்
பாதியிலே எமை விட்டுச் சென்று
பதினொரு ஆண்டுகள்
பறந்தோடியதோ...

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## அலங்கார திருவிழா

நல்லூர், ஏப். 19
நல்லூர் பண்டாரக் குளம் ஸ்ரீ கௌரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்தனர். (வ-ரி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி **பராசக்தி நந்தகுமார்**

தோற்றம் 15.08.1961
மறைவு 20.03.2017



கடந்த 20.03.2017 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி பராசக்தி நந்தகுமார் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (19.04.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 26 . 01 . 1938



இறப்பு 20 . 03 . 2017

திருமதி **பூமணி ஞானராஜா**

அன்பின் திருவுருவே அம்மா - நீங்கள்
பத்து மாதங்கள் கருவினில் எமைச்சுமந்தீர்
பல வருடங்கள் தோளில் சுமந்தீரே...
சுமைகள் உமக்குச் சுகமானாலும் எமக்குச் சோகமானதே
கண்ணிமைக்கும் நேரத்தில் உமை காலனவன் கவர்ந்து
சென்ற மாயமென்ன?

உன் மடிதவழ்ந்த மழலைகள்
மனந்தளர்ந்து போனதம்மா காலங்கள் உருண்டது போல்
எம் கண்களில் உன் நினைவின் துளி கன்னத்தில் உருளுதம்மா
ஆண்டவன் திருவிளக்கில் ஓர் சுடராய் நீருருக்க
இறைவனை மன்றாடுவோம்.

கனத்த இதயத்துடன்

432/ 6, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 6228

## யோகா தியான பயிற்சி நெறி நல்லூரில் சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 19
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இலவசமாக நடத்தப்பட்டுவரும் யோகா தியான பயிற்சி நெறியின் புதிய பிரிவு எதிர்வரும் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

"நல்லூர் ஆலயத்தின் முன்றிலில் அமைந்துள்ள ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் வார இறுதி நாள்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். ஆண்கள் பெண்களுக்குத் தனித்தனிப் பிரிவுகளாக நடத்தப்படவிருக்கின்றன. ஆண்களுக்கான பிரிவு சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரையிலும், பெண்களுக்கான பிரிவு அதே நாள்களில் காலை 7.30 மணிமுதல் 8.30 மணி வரையிலும் நடைபெறவுள்ளது டன் நோயாளர்களுக்கும் சிறப்புக் கவனமெடுத்துக் கற்பிக்கப்படும்.

சுமார் 3மாத காலங்களை உள்ளடக்கிய இந்தக் பயிற்சிநெறியைப் முழுமைசெய்பவர்களுக்கு திணைக்களத்தால் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

யோகா தியான வகுப்புக்களில் இணைந்து பயன்பெற விரும்பும் இருபாலாரும் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் தமது பதிவுகளை கற்கை நெறி ஆரம்பமாகும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ மேற்கொண்டு இணைந்து கொள்ள முடியும். மேலதிக தகவல்களை அலுவலக நேரத்தில் மேற்படி மண்டபத்தில் பெற்றுக் கொள்ள முடியும்" என்று இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 15 . 01 . 1944



இறைவன் அடியில் 19 . 04 . 2003

அமரர் **கந்தசாமி சிவநாயகி** (கிளி)
(திருநெல்வேலி கிழக்கு)
திதி : திருதியை 14-05-2017

அன்போடு அரவணைத்து பண்போடு எம்மை வளர்த்த
அன்புத் தெய்வமே!
உணரவில்லை உணரவில்லை உங்களை இழந்து
பதினான்கு ஆண்டுகள் ஓடியும் ஒரு நொடியும்
உங்கள் பிரிவை நாங்கள் உணரவில்லை இன்னும்
நீங்கள் எங்களுடன் தான் வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வெள்ளைபிள்ளையாரை வணங்குகின்றோம்.

இல.20, முதலாம் ஒழுங்கை,
சின்னப்புதுக்குளம்,
வவுனியா.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும்
பேரப்பிள்ளைகளான
சாம்பவி, சாகித்தியன், பானுஷா

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 02 . 1953



உதிர்வு 30 . 04 . 2016

அமரர் **வேலுப்பிள்ளை சிவலோகம்**

குடும்பப் பற்றும், மண்பற்றும், மதப்பற்றும்
மாசிலாக் குணமும் கொண்டு இப்புவியில்
வாழ்ந்தீர்கள்! போனதிசை தேடுகின்றோம்
எழில் முகத்தைக் காணவில்லையே.......
ஓராண்டு சென்றாலும் ஓயாது எம் கவலை
எம் குலதெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பொன்பதி
பழுவத்தை சமரபாகு,
வல்வெட்டித்துறை.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 22.03.2017 அன்று இறைபதம்
அடைந்த எமது குடும்பத்தலைவி

திருமதி **கற்பகதேவி நவரத்தினம்**

தோற்றம் 28.04.1945
மறைவு 22.03.2017

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (20.04.2017) வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் எமது அம்பன் இல்லத்தில் நடைபெறும். மறுநாள் 21.04.2017 மு.ப 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அம்பன், குடத்தனை.

குடும்பத்தினர்.

# சாவகச்சேரி இந்துவின் முகப்பில்பழைய மாணவன் நினைவாக நிழற்குடை

தென்மராட்சி,ஏப்.19

பாடசாலைக் கால நண்பனின் நினைவாக பயணிகள் நிழற்குடை அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வழங்கினர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1998ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ சாதாரணதர வகுப்பில் கற்ற மாணவர்கள் வகுப்பாசிரியர் விநாயகமூர்த்தியின் போதனைக்கு அமைவாக பிறருக்கு உதவுவோம் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக நிழற்குடையை அமைத்து வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை முடியும் நேரம் பி.ப 1.30 மணி என்பதால் அந்தப் பகுதியில் நிழல் மரம் இல்லாத நிலையில் மாணவர்கள் மற்றும் பயணிகள் பேருந்துகள் வரும்வரை வெயிலில் நிற்கின்றனர். இதனை அவதானித்த கல்லூரி பழைய மாணவர்கள் தமது நண்பண் சிவயோகநாதன் ஸ்ரீசங்கரின் நினைவாக சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிழற்குடை அமைத்து வழங்கியுள்ளனர். நிழற்குடையை அமரர் ஸ்ரீசங்கரின் பெற்றோர் திறந்து வைத்தனர்.

(வ-9)

# குடிதண்ணீர் சுத்திகரிப்பு ஆலை ஊர்காவற்றுறையில் அமைப்பு





ஊர்காவற்றுறை, ஏப். 19

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் 13 ஆயிரத்து 500 பொதுமக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரைப் பெறக்கூடிய வசதியை மரியாள் ஆலய வளாகத்தில் கடற்படையினர் ஏற்படுத்தி வழங்கினர்.

உவர் நீரை நன்னீராக சுத்திகரிக்கும் பொறிமுறைத் தொகுதி ஆலை ஊடாக மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் அடிகளாரால் ஊர்காவற்றுறை மரியாள் ஆலய வளாகத்தில் கடந்த 16ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண கடற்படை அதிகாரி ரியல் அட்மிரல் கே.கே.ஜெ.டி.சில்வா நீர் சுத்திகரிப்பு ஆலை பம்ஹவஸ் மற்றும் இணைப்புக்களுக்காக 4 மில்லியன் ரூபா நிதி பங்களிப்பை வழங்கியதுடன் திறப்பு விழாவிலும் கலந்து சிறப்பித்தார்.

பொதுமக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் ஆரம்ப நிகழ்வுக்கு ஊர்காவற்றுறை பங்குத்தந்தை அருட் திரு பி.எவ்.இராஜசிங்கம் தலைமை தாங்கினார். நிகழ்வில் காரைநகர் கடற்படை அதிகாரி கப்டன் கெட்டியாராச்சி மற்றும் அருட்தந்தையர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(வ-50)

## தேவை

கண்ணாடி வில்லைகள் (Opticles) விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுவதனால் முன் அனுபவமுள்ள பெண் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தகுதியுடையவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**பணிப்பாளர்**

**077 313 9988**

**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**
**பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்**

| | |
|---|---|
| தலைமை | : திரு.ச.வேலழகன் (கல்லூரி முதல்வர்) |
| காலம் | : 07.05.2017 ஞாயிறு |
| | மாலை 3.00 மணி |
| இடம் | : கல்லூரி மண்டபம் |

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தலைவர்**
**பழைய மாணவர் சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
**மு.கதிர்காமலிங்கம்**
அவர்களின் தாயார்
**முத்துகிருஸ்ணன் தங்கம்மா**
கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**பாடசாலை சமூகம்**
**யா/குடத்தனைக் கரையூர் அ.மி.த.க பாடசாலை**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டிக்கிரியை அழைப்பும்



கடந்த 20.03.2017 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்
**அமரர் சின்னத்துரை கேசவலிங்கம்**

மலர்வு
01.11.1950

உதிர்வு
20.03.2017

அன்னாரின் சபிண்டீகரணக்கிரியைகள் இன்று (19.04.2017) புதன் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகவிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**
**குடும்பத்தினர்.**

## Bio Centre - Jaffna

பிறவுண் வீதி, நீராவியடி
பிள்ளையார் கோயில் முன்பாக
077 665 5290
நீங்கள் கற்கும் உயிரியல் பாடநெறிக்கு மேலதிகமாக
Tamil Medium / English Medium
2019 - செவ்வாய்க்கிழமைகளில்
2018 - புதன்கிழமைகளில்
2017 - வியாழக்கிழமைகளில்
நேரம்: 3 Pm - 5 Pm
பாடமாக்குவதால் பல்கலைக்கழகம்
Senior Lecturer **நரேந்திரன்**

## காணி விற்பனைக்குண்டு

இல.820. ஆஸ்பத்திரிவீதி. யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள 4பரப்பு 1 ½ குளி விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்கு உண்டு.

**தரகர்கள் தேவையில்லை**
**நேரில் வரவும்.**

**தொடர்பு: 071 707 3631**

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் எமது New Sun Ceramic (pvt)Ltd நிறுவனமானது புதிய கிளையினை கிளிநொச்சி நகரில் ஆரம்பிக்கவுள்ளது. எனவே நிறுவனத்தில் பணியாற்ற தகுதியான ஆண் / பெண் இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கிளி நகருக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாக**

**021 228 3872, 071 792 3721**

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

## சன்றைஸ் மெடி கிளினிக்

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

## றோயல் மெடிக்கல் சென்ரர்

454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

# வாழ்வாதாரத் திட்டத்துக்காக பாவித்த சேலைகள் சேகரிப்பு

கரணவாய், ஏப். 19

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வருமானம் குறைந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பாவித்த சேலைகளிலிருந்து மாற்றுடைகள் தயாரிக்கும் செயற்திட்டம் பாசிக் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

“3 ஆண்டு காலத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தின் இறுதி ஆண்டுக்கான செயற்திட்டம் தற்போது முன்னெடுக்கப்படுகிறது. திட்டத்தின் பயனாளிகள் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ளவும், அவர்கள் தமது வருமானத்தைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்கும் பாவனையில் இல்லாத பயன்படுத்தக்கூடிய சேலைகள் பொது மக்களிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்படுகின்றன.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான சேலைகளை அன்பளிப்பாக வழங்க விரும்புபவர்கள் இல. 28 கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள பாசிக் நிறுவன யாழ்ப்பாண அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு வழங்க முடியும். அத்துடன, 021 2221699 என்ற தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும்” என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளில் இந்தத் திட்டத்துக்குச் சேலைகளை அன்பளிப்பாக வழங்கியோருக்கு இந்தத் திட்டச் செயற்பாடு தொடர்பான கைநூல் வழங்கப்பட்டுள்ளது.

(வ-173)

# மானிப்பாயில் சனியன்று அனைத்து மத விழா

மானிப்பாய், ஏப். 19

மதங்களுக்குள் ஒற்றுமையை உருவாக்கும் இலட்சியத்தை நோக்கிய அனைத்து மத விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணி முதல் 1 மணிவரை மானிப்பாய் சத்யசாயி பாடசாலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மானிப்பாய் சத்யசாயி பாடசாலையின் தலைவர் ஓய்வுநிலை நீதிபதி இ.வசந்தசேனன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக சத்தியசாயி உலக நிறுவன தலைவர் வி.மனோகரனும் கலந்துகொள்வர்.

யாழ். பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் மருத்துவர் எம்.பாலகைலாசநாத சர்மா, நாகவிகாரை உலக பௌத்த நிலையத் தலைவர் மீகஹ ஐந்துர சிறிவிமல தேரர், யாழ்.மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் அடிகளார், வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை ஆயர் கலாநிதி டி.எஸ் தியாகராஜா அடிகளார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட உலமா சபைத் தலைவர் அல்ஹாச மௌலவி ஏ.எம்.ஏ காசினி, சத்தியசாயி தேசிய மனித மேம்பாட்டு கல்வி தலைவர் என். புவனேந்திரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-50)

*யானையை...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தப்பட்டுள்ளளார் என தெரிவிக்கப்படுகிறது.

யானை சுடப்பட்ட சம்பவம் தொடர்பில்முழுமையான விசாரணைகள் நடத்தப்படும்என்று வனவிலங்கு மற்றும் நிலை யான அபிவிருத்தி அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

வவுனியா கொம்புவைத்தகுளம் பகுதியில் உள்ள குழியில் நான்கு யானைகள் தவறி விழுந்துள்ளன. குட்டி யானைகள் இரண்டும் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டன. பெரிய யானை இரண்டும் நேற்று முன்தினம் மீட்கப்பட் டன. மீட்கப்பட்ட யானையில் ஒன்று, மீட்கப்பட்டவர்களைத் தாக்க முயற்சித்ததாகத் தெரிவிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா நீதிவான் மன்றில் முழுமையான அறிக்கை, வனஜீவராசிகள் திணைக்களத்தால் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்படும் என்று அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

# தட்டான்குளம் கிராமத்தில் சிறுநீரக நோய் பாதிப்பு அதிகம்

## அரச தலைவர் செயலாக்கச் செயலணி தொடர்பில் எவரும் அறியாமல் தவிக்கும் கிராமத்தினர்

வவுனியா, ஏப்.19



வவுனியா மாவட்ட செயலகத்தில் சிறுநீரக நோய்த் தடுப்பு அரச தலைவர் செயலாக்கச் செயலணியின் ஒருங்கிணைப்பு அலுவலகம் நிறுவப்பட்டமை தொடர்பாக எமக்கு எதுவுமே தெரியாது என்று கூறுகின்றனர் வவுனியா தட்டான்குளம் மக்கள்.

சிறுநீரக நோயால் தட்டான்குளம் மக்கள் அதிகம் பாதிக்கப்படும் நிலையில் அந்தச் செயலணி தொடர்பாக அதிகாரிகள் இதுவரை எதுவுமே தெரியப்படுத்தவில்லை என்று அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

வவுனியா, வெண்கலச் செட்டிக்குளம் பிரதே செயர் பிரிவில் செட்டிக்குளம் செல்லும் பிரதான வீதியில் தட்டான்குளம் கிராமம் உள்ளது. 2006 ஆம் ஆண்டு அந்தக் கிராமத்தில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டது. 50 பேர் அப்போது மீள்குடியமர்ந்தனர். தற்போது உப குடும்பங்கள் உட்பட 225 குடும்பங்கள் வசிக்கின்றன. விவசாயம், கூலித் தொழிலே அவர்களது பிரதான வாழ்வாதாரத் தொழிலாக உள்ளது.

இந்தப் பகுதி மக்கள் சிறுநீரக நோயால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். 40க்கும் அதிகமானவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். பிரதேச செயலகத்தால் அவர்களுக்கு மாதாந்த உதவிப் பணமாக 3 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்கும் சிறுநீரக நோய் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு சிறுநீரக நோயால் இந்தக் கிராமத்தில் 5 முதல் 6 பேர் வரையானோர் இறந்துள்ளனர். குடி தண்ணீர் பிரச்சினையே இதற்கான முக்கிய காரணமாக இனங்காணப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு தனியார் நிறுவனம் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதியை அங்கு பொருத்தியது. பணம் கொடுத்து தண்ணீர் பெறுவதற்கு கிராமத்தவர்கள் ஆர்வம் காட்டவில்லை. இயந்திரத் தொகுதிக்கான மின் கட்டணப் பட்டியலைச் செலுத்துவதற்குக் கூடப் பணம் சேகரிக்க முடியவில்லை என்று தெரிவித்து சிறிது காலத்தில் தனியார் நிறுவனம் இயந்திரத் தொகுதியைத் திரும்பப் பெற்றது. தண்ணீர் சுத்திகரிக்கப்பட்ட கட்டடத் தொகுதியில் தற்போது அறநெறிப் பாடசாலை இயங்குகின்றது.

தற்போது தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதியின் தேவை அதிகமாக உணரப்படுகின்றது. இங்கு தண்ணீர் சுத்திகரிப்புத் தொகுதி அமைக்கப்படும் பட்சத்தில் சண்முகநாதபுரம், கந்தசாமி நகர், வாரிக்குட்டியூர், மணியர்குளம், றங்கடகம கிராமத்தவர்களும் பயனடைய முடியும் என்று தட்டான்குளம் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அரச தலைவர் செயலாகச் செயலணி சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சேகரித்து உதவிகள் வழங்குகின்றது. சிறுநீரகத் தொற்று அதிகம் உள்ள இடங்கள் இனங்காணப்பட்டு அங்கு தண்ணீர் வடிகட்டும் இயந்திரங்களைப் பொருத்தும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றது.

"எமது கிராமத்தில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பலர். எமக்கு அரச தலைவர் செயலாக்கச் செயலணியின் ஒருங்கிணைப்பு அலுவலகம் இருப்பது தெரியாது. எங்களுக்கு இது தொடர்பாக எவரும் தெரியப்படுத்தவில்லை. எமது கிராமத்தில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தவும் உதவிகள் தேவையாகவுள்ளது. எமக்கு ஒருங்கிணைப்பு அலுவலகம் பற்றித் தெரியப்படுத்தப்படாததால் நாம் பதிவுகளை மேற்கொள்ளவில்லை" என்று தட்டான்குளம் கிராமத்தவர்கள் கூறுகின்றனர்.

"வவுனியா மாவட்ட செயலகத்திலுள்ள சிறுநீரக நோய்த் தடுப்புப் பிரிவில் தட்டான்குளம் கிராம மக்கள் பதிவு செய்யவில்லை. பதிவுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அவர்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று அரச தலைவர் செயலாக்கச் செயலணியைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (ற-10)

# கிராமப்புறப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ஆவன செய்க

## மன்னார் மக்கள் கோரிக்கை

மன்னார், ஏப்.19

மடுக் கல்வி வலயத்துக்குட்பட்ட கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளது. கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பாக உரியவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"மன்னார் நகரப்புறம் அபிவிருத்தியடைந்துவரும் நிலையில் கிராமங்கள் மோசமடைந்தே செல்கின்றன. மடுக் கல்வி வலயத்தில் 53 பாடசாலைகள் உள்ளன. 5 ஆயிரத்து 932 மாணவர்களே கல்வி கற்கின்றனர். 437 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 20 பாடசாலைகளில் 20க்கும் குறைவான மாணவர்களே உள்ளனர்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் வலயப் பணிமனை ஒன்றில் இருந்து அதி கூடிய தூரம் தொலைவிலும் பாடசாலை ஒன்று இருக்குமானால் அது மடுக் கல்வி வலயத்திலேயே உள்ளது. பெரிய முறிப்பு, காக்கையன்குளம் பாடசாலைகள் ஆகிய இரு பாடசாலைகளும் 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளன.

மடுக் கல்வி வலயத்தில் காணப்படும் 53 பாடசாலைகளில் வண் ஏ.பி தரத்தில் 3 பாடசாலைகளும், வண் சீ தரத்தில் 8 பாடசாலைகளும் உள்ளன. ஆரம்ப பிரிவு பாடசாலைகள் 25 உள்ளன. இடைநிலை மற்றும் வகை 2 டைச் சேர்ந்த பாடசாலைகளாக 17 பாடசாலைகள் உள்ளன.

முக்கிய பிரச்சினையாக போக்குவரத்துச் சீரின்மை காணப்படுகின்றது. பல பாடசாலைகளுக்கான வீதிகள் தற்போது வரை மணல் வீதிகளாகவே காணப்படுகின்றன. அதிக கிராமங்களுக்கு பேருந்துச் சேவைகளே கிடையாது. வீதிகள் பாதைகள் பலவற்றில் மழைக்காலம் எனில் வெள்ளம் வீதிகளை ஊடறுத்துப் பாயும் நிலை உள்ளது.

இலுப்பைக் கடவை, காக்கையன்குளம், பண்டிவிரிச்சான், கள்ளியடி, பெரியடு, சன்னார் பகுதிகளில் மின்சாரம் இருந்தாலும் மாலை 7 மணிக்குப் பின்பு வீதிகளில் நடமாடுவதே அச்சமாகவுள்ளது. காட்டு விலங்குகளின் தாக்கம் அதிகமாகவுள்ளது. யானைகள் மட்டுமன்றி சிறுத்தை, பாம்பு போன்றவையும் நகரை நோக்கி படையெடுக்கின்றன.

கால் நடைகளை வளர்ப்போரும் விவசாயம் செய்ய எண்ணுபவர்களும், பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளவர்கள் மட்டுமே தற்போது இங்கு வாழ்கின்றனர்.

இந்தப் பகுதிகள் 'அபிவிருத்தி செய்யப்பட்டு, பொருளாதார மேம்பாட்டை ஈட்டும் வழிவகைகளை மேற்கொள்ளாமல் விட்டால், எஞ்சிய மக்களின் வாழ்வாதாரமும் கல்வியும் மிகவும் மோசமடையும். இந்தப் பகுதிகளுக்கான போக்குவரத்து பாதைகளையும் உட்கட்டுமான அபிவிருத்திகளையும் மேற்கொள்ள அதிகாரிகள் முன்வர வேண்டும்" என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"பாடசாலை மாணவர்களின் கல்வித் தரத்தில் மடுவைப் பொறுத்தவரையில் போக்குவரத்து முக்கிய பங்கை வகிப்பது உண்மையே. மாணவர்கள் அதிகதூரம் பயணிப்பதைத் தடுப்பதற்காகவே நாம் 10க்கும் மேற்பட்ட பாடசாலைகளை சில மாணவர்களுடன் தொடர்ந்து நடத்துகின்றோம். மற்றுமோர் முயற்சியாக பாடசாலைகளிலேயே விடுதி வசதிகளை ஏற்படுத்தி வருகின்றோம். தேவையின் அடிப்படையில் 30 பாடசாலைகளில் விடுதி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய வளங்களையும் பெறுவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெற்ற வண்ணமே உள்ளது. மாணவர்களின் கல்வித் தரத்தில் அகச் சூழலான பாடசாலைகளோடு புறச் சூழலான வதிவிட நிலைமையும் தாக்கம் செலுத்துகின்றது" என்று இங்குள்ள பாடசாலைகள் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ற-10, 101)

# ஜெயபுரம் தெற்கில் மூடப்பட்ட நிலையில் அரைக்கும் ஆலை



கிளிநொச்சி, ஏப்.19

கிளிநொச்சி, ஜெயபுரம் தெற்கில் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து மாதர் அமைப்புக்கு அமைத்துக் கொடுத்த அரைக்கும் ஆலை செயற்படுத்தப்படாது மூடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியமைத்தலும், உணவுப் பாதுகாப்பை அதிகரித்தலும் என்ற திட்டத்தின் கீழ் ஜெயபுரம் தெற்கு கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத்துக்கு அரைக்கும் ஆலை 2013ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டது. சிறிது காலத்தின் பின்னர் அது இயங்கவில்லை.

"இந்த அரைக்கும் ஆலை பெண்கள் அமைப்புக்கு வழங்கப்பட்டது. மா உற்பத்தி செய்து பொதியிடப்பட்டு விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. வருமானம் குறைவாகக் காணப்பட்டதால் சிறிது காலத்தின் பின்னர் மூடப்பட்டது" என்று ஜெயபுரம் கிராம அலுவலர் தெரிவித்தார். (ற-6)

# மதுவரித் திணைக்கள கிளை மன்னாரில் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.19

இலங்கை மது வரித்திணைக்களத்தின் மன்னார் கிளை அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது என்று வரித்திணைக்களத்தின் வடமாகாண பொறுப்பதிகாரி சோதிநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அலுவலகத்தை மது வரித்திணைக்களத்தின் ஆணையாளர் குணவர்த்தன கடந்த மாதம் 30 ஆம் திகதி திறந்தார். இந்த மாத ஆரம்பத்திலிருந்து அங்கு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

நிகழ்வில் மது வரித்திணைக்களத்தின் மன்னார் மாவட்ட செயலாளர் தேசப்பிரிய, மது வரித்திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் வண்டாரகம ஆகியோர் பங்கேற்றனர்.

மன்னார் மாவட்ட மதுவரித்திணைக்களத்தின் பொறுப்பதிகாரியாக எஸ்.ரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார் என்றார். (ற-ரி1)

பூநகரி பிரதேச வைத்தியசாலையில் அவலம்

# கிணற்று நீர் மஞ்சள் நிறத்தில்: பவுசர் மூலமே நீர் விநியோகம்

கிளிநொச்சி, பூநகரி பிரதேச வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட கிணற்றின் நீர் மஞ்சள் நிறமாகக் காணப்படுகின்றது. அதைப் பயன்படுத்த முடியாதுள்ளது.

பூநகரி பிரதேச வைத்தியசாலை ஆரம்பத்தில் இயங்கிய இடத்தில் தற்போது இராணுவம் நிலைகொண்டுள்ளது. தற்போது வேறொரு இடத்தில் வைத்தியசாலை இயங்குகின்றது. அங்கு புதிதாகக் கிணறு அமைக்கப்பட்டபோதும், அதிலுள்ள நீர் மஞ்சள் நிறமாகக் காணப்படுகின்றது என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

தற்போது பவுசர்கள் மூலம் நீர் கொண்டுவரப்பட்டே வைத்தியசாலை தண்ணீர்த் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது. இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்தத் தண்ணீரே வடிகட்டப்பட்டு குடிதண்ணீராக உபயோகப்படுத்தப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப் படுகின்றது.

"பூநகரி பிரதேசத்தில் குடி தண்ணீர் பிரச்சினை நீண்ட காலமாகக் காணப்படுகின்றது. இராணுவம் வைத்தியசாலை முன்னர் இயங்கிய இடத்தை விடுவித்தால் தண்ணீர் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களும், திணைக்களத் தலைவர்களும் கவனம் எடுக்க வேண்டும்" என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ற-6)

# இராணுவம் அமைத்த வீடுகளில் வசிக்கமுடியாது அல்லாடும் மக்கள்

## ஆரோக்கியபுரத்தில் தொடர்கிறது அவலம்

கிளிநொச்சி, ஏப்.19

கிளிநொச்சி, ஆரோக்கியபுரம் கிராமத்தில் இராணுவத்தால் அமைக்கப்பட்டு வழங்கப்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. அவை இன்னமும் சீரமைத்துத் தரப்படவில்லை.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.



போர் முடிந்த பின்னர் முகாம்களில் தங்கியிருந்த மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். அவர்கள் தற்காலிகக் கொட்டகைகளில் அமர்த்தப்பட்டனர். ஆரோக்கியபுரத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இராணுவத்தால் 20 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அந்த வீடுகள் சிறிது காலத்தின் பின்னர் சேதமடைய ஆரம்பித்தன. சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டதுடன், மழை, காற்றில் கூரைகளும் சேதமடைந்தன என்று மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அதன்பின்னர் கடந்த ஆண்டு முற்பகுதியில் ஏற்பட்ட கடும் மழையால் அந்த வீடுகள் பெரிதும் சேதமடைந்தன.

அந்த வீடுகள் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டன என்று இராணுவத்தினர் அறிக்கையிட்டுள்ளனர்.

"எங்களுக்கு இந்த வீடுகள் நிரந்தர வீடுகள் என்று கூறி வழங்கப்படவில்லை. 10 லட்சத்துக்குரிய நிதிக் கணக்கும் காட்டப்படவில்லை. இந்த வீடுகள் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன என்பதை ஏற்கவே முடியாது." என்று அந்த வீடுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் கூறுகின்றனர்.

"பாதிப்படைந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகளை வழங்க முடியாதுள்ளது. 10 லட்சம் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என்று இராணுவம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. வீடுகள் இல்லாதவர்களுக்கே தற்போது வீட்டுத் திட்டங்கள் மூலம் வீடுகள் வழங்குகின்றோம்." என்று துணுக்காய் பிரதேச செயலர் தெரிவித்தார். (ற - 6)

## தொழில் வாய்ப்புக்கு நேர்முகத் தேர்வு

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் , யுவதிகளுக்குத் தொழிற் கல்வி மற்றும் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் வியாழக்கிழமை மு.ப.9 மணி முதல் பி.ப. 4.30மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள நேர்முகத் தேர்வில் தகைமைக்கேற்ப விரும்பிய துறையில் விரும்பிய தொழில் ஒன்றைத் தெரிவு செய்யலாம் என்று பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி அலுவலர் அறிவித்துள்ளார்.

தேசிய அ.அ., கல்விச்சான்றிதழ்கள் மற்றும் சுயவிவரக்கோவையுடன் வர வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். (ற - 9)

## நீரிழிவுப் பரிசோதனைக்கான கட்டண அறவீடுகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 19

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் நோயாளர்களின் நீரிழிவுக்கான குருதிப் பரிசோதனைகளுக்கு கட்டணம் அறவிடுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் போ.திவாகர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

அரசால் வழங்கப்படும் குருதியில் சீனி அளவிடும் கருவிகளுக்கு காணப்பட்ட தட்டுப்பாடு வனிக்கா சேஜிக்கல்ஸ் நிறுவனத்தினரின் நன்கொடை மூலமாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குத் தேவையான குருதியில் சீனி அளவிடும் பட்டிகள், யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்பட்டு வந்தன. இதனால் விடுதி களில் சேர்க்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு மாத்திரமே இலவச நீரிழிவுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. வெளிநோயாளர்கள் மற்றும் கிளினிக் நோயாளர்களுக்கான நீரிழிவுப் பரிசோதனைகள் மருத்துவமனையின் சொந்த முயற்சியின் பேரில் கட்டண அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன.

வறிய நோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் விநியோகம் அதிகரிக்கப்படவில்லை. கடந்த வாரத்திலிருந்து கட்டணம் அறவிடும் முறைமை இடைநிறுத்தப்பட்டுள்ளது. எமக்குத் தேவையான மேலதிக பட்டிகளையும் வழங்குமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரத் திணைக்களம் போதுமானளவு பட்டிகளை தொடர்ச்சியாக வழங்குமிடத்து எம்மால் இலவச பரிசோதனைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லமுடியும் - என்றுள்ளது. (ற - 10)




### பொதுமக்களுக்குச் சொந்தமான

## 318 ஏக்கர் காணிகளை முதலில் விடுவியுங்கள்

### கேப்பாபிலவு மக்கள் வலியுறுத்து



முல்லைத்தீவு, ஏப்.19

கேப்பாபிலவில் பொதுமக்களுக்குச் சொந்தமான 310 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். அதன்பின்னரே மத்திய வகுப்புக் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு கேப்பாபிலவு மக்கள் தெரிவித்தனர். கடற்படை கையகப்படுத்தியுள்ள 138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி காணி உரிமையாளர்கள் அமைதிவழித் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையே நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது. பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினர் கால அவகாசம் கோரினர். இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினருக்கும், கேப்பாபிலவு மக்களுக்கும் இடையே கலந்துரையாடல் நடத்துவதற்கும் ஏற்பாடாகியுள்ளது.

"10 ஆண்டுகளாக அகதிகளாக அலைகின்றோம். எங்கள் சொந்த நிலங்களில் குடியமர எமக்கு உரிமை உண்டு. காணிகள் விடுவிப்புத் தொடர்பாகக் கலந்துரையாடல்கள் நடைபெற்றன என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். கேப்பாபிலவில் மத்திய வகுப்புக் காணிகளும் உள்ளன. ஏற்கனவே விடுவிக்கப்பட்ட காணிகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவை மத்திய வகுப்புக் காணிகளே. கேப்பாபிலவில் மக்களுக்குச் சொந்தமான 318 ஏக்கர் காணி கடற்படை வசமுள்ளது. முதற்கட்டமாக அதனை விடுவிக்க வெண்டும். அதன்பின்னரே ஏனைய மத்திய வகுப்புக் காணிகளை விடுவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியும். எம்மை ஏமாற்றும் விதமாக பொதுமக்களின் காணிகள் அல்லாத பகுதியை விடுவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது போராட்டம் முடிவுறுத்தப்பட வேண்டும் என்று அரசு நினைத்தால் எமது குடியிருப்புக் காணிகளையே விடுவிக்க வேண்டும்." என்று கேப்பாபிலவில் தொடர் போராட்டம் நடத்திவரும் மக்கள் தெரிவித்தனர்.

கடற்படையினர் கையகப்படுத்தியுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கேப்பாபிலவு மக்கள் நடத்திவரும் போராட்டம் நேற்று 49 ஆவது நாளாகத் தொடர்ந்தது. (ற – 7)



கிராமிய வளர்ச்சியே உயர்ச்சி எனும் தொனிப் பொருளில் வடக்குமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணக் கண்காட்சி நேற்று வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் ஆரம்பமானது. கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சி. பெலி சியன் தலைமையில் நடைபெற்ற கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். (ற -10)

# தமிழர்களின் இன்னல்களைத் தீர்க்கவே கூட்டமைப்புக்கு மக்கள் ஆதரவளித்தனர்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எடுத்துரைப்பு



மட்டக்களப்பு,ஏப்.19

கடந்த காலத்தில் எமது மக்கள் அபிவிருத்திக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவில்லை. தமிழினத்தின் இன்னல்களைத் தீர்க்க வேண்டும். தமது பிரச்சினை களுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்துடனேயே அநேகமான மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தார்கள்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா தெரிவித்தார்.

அபிவிருத்தியடையாத கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் கிழக்கு மாகாண சபையால் வாகரை ஆண்டான்குளம் தெரிவு செய்யப்பட்டு 85 இலட்ச ரூபா செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களின் உன்னதமான நோக்கத்தை அடைவதற்காக, எமது தலைவர்கள் இன்றும் இந்த அரசுடன் சில சில நடவடிக்கைகளில் ஒத்துழைக்கின்றனர். சில சில நடவடிக்கைகளில் எமது நிலைப்பாடு இது தான் என்பதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றனர்.

கிழக்கு மாகாணம் பெரும்பான்மையாகத் தமிழ் மக்களைக் கொண்ட மாகாணம். ஆனாலும் நாங்கள் முதலமைச்சர் பதவியை நழுவ விட்டமைக்குக் காரணம் எமது மக்களில் பெரும்பாலானோர் வாக்களிக்கத் தவறியமையே. மட்டக்களப்பு மாவட்டத்தில் 45 வீதமானவர்களே கடந்த தேர்தலில் வாக்களித்திருந்தார்கள். இதே போன்று திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் மக்கள் கணிசமாக வாக்களிக்காமையாலேயே நாங்கள் இந்த மாகாண சபை அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாமல் போனது.

எதிர்வரும் காலங்களில்நாம் இந்தத் தவறைத்திருத்த வேண்டும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவேண்டும். எமது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் தான் நிற்கின்றார்கள் என்கின்ற செய்தி தான் தற்போது எமக்குத் தேவைப்பாடான ஒன்றாக இருக்கின்றது. எமது மக்கள் எம்முடன் இருந்த காரணத்தால் எமது பல பிரதேசங்கள் பிற்படுத்தப்பட்டன.

கல்குடாத் தொகுதியில் பல பிரதேசங்கள் பிற்படுத்தப்பட்டு இருந்தாலும், தற்போது இந்தக் கிராமத்தை நாங்கள் அனைவரும் தெரிவு செய்து குறித்து ஒதுக்கப்பட்ட நிதியில் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.

கடந்த காலத்தில் எமது சமூகத்தைப் பசப்பு வார்த்தைகள் கூறி விடயங்கள் தெரியாத சிலர் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கியதும் உண்டு.

எமது மக்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. எமது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில் நாங்கள் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய விதத்தில் செயற்பட வேண்டும்.

எமது மக்களின் நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி தீனி போடுகின்ற போர்வையில் எமது உண்மையான தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத பலர் எமது மக்கள் முன் வந்து வாக்குகளைக் கேட்கலாம்.

பெரும்பான்மை இனத்தின் அடிவருடிகளாக அவர்கள் தருகின்ற பிச்சையை வைத்துத் தான் அவர்கள் எமது மக்களுக்கு எதுவும் செய்ய வேண்டும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் முழுமையாக நாங்கள் ஆட்சி அமைப்பதன் ஊடாக எவரிடமும் நாங்கள் பிச்சை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த இடைக்காலத்தில் நாங்கள் இந்த மாகாண சபையில் ஆட்சி அமைத்ததன் நிமிர்த்தம் எமது இனத்துக்கு ஏற்ற விதத்தில் விகிதாசாரத்தின் அடிப்படையில் சில செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அதனையும் எமது மக்களாகிய நீங்களே ஏற்படுத்தித் தந்தீர்கள். எமக்கான அபிவிருத்தி, எமக்கான உரிமையைப் பெற வேண்டுமாக இருந்தால் எமது மக்கள் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தங்களது பூரண ஆதரவை வழங்க வேண்டும்- என்றார். (ஐ)

மீதொட்ட முல்லவில் பாதிக்கப்பட்டோருக்கு

# நட்ட ஈட்டுத் தொகை தொடர்பில் முடிவில்லை



கொழும்பு, ஏப். 19

கொலன்னாவ, மீதொட்ட முல்ல இடர் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்குவது குறித்து இன்னும் அரசு இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்க வில்லை என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

"மீதொட்டமுல்லவில் நிகழ்ந்த இடரில், சொத்துகளுக்காக 2.5 மில்லியன் ரூபாவும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்காக ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. இடரின்போது ஏற்பட்ட வர்களின் இறப்புச் செலவுகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளவும் அரசு தீர்மானித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடாக எவ்வளவு தொகை வழங்குவது என்பது குறித்து இன்னமும் அரசு இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை" என்றார். (ஐ-10)

# கூட்டரசின் சீர்கெட்ட நிர்வாகத்தால் மனித உயிர்களைப் பறிகொடுத்தோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஏப்.19

கூட்டரசு ஆட்சியாளர்களின் சீர்கெட்ட நிர்வாகம் காரணமாக 30 மனித உயிர்கள் காவு கொள்ளப்படும் அளவுக்கு மீதொட்டமுல்ல குப்மைமேடு விவகாரம் உருவெடுத்துள்ளது. இதற்கு முழுப்பொறுப்பும் அரச அதிகாரிகளே.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் குற்றஞ்சாட்டினார். ஏறாவூர் 5ஆம் குறிச்சி சக்ஸஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற சித்திரை வருடப் பிறப்பு விழாவில் உரையாற்றிய போதே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"குப்பை மேட்டுப் பிரச்சினை தொடர்பாக மீதோட்டமுல்ல மக்கள் வீதிக்கு இறங்கிப் பல தடவை ஆர்ப்பாட்டங்கள், உரிய



அதிகாரிகளுக்கு மனு, அரசுக்கு அழுத்தம் போன்ற பல்வேறுபட்ட முறைகளைக் கையாண்டனர். அந்த மக்களுக்கு கடந்த அரசும் தற்போதைய அரசும் எவ்விதமான தீர்வையும் பெற்றுக்கொடுக்காத நிலையில் தற்போது 23 தொடக்கம் 30 வரையான அப்பாவி மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்ட துயரச்சம்பவம் இடம்பெற்றது. நாடு முழுவதும் உள்ள மக்கள், பல்வேறு மகிழ்ச்சியான கனவுகளுடன் குடும்பமும் சுற்றமும் என ஒன்று கூடி தமிழ் சிங்களப் புத்தாண்டை கொண்டாடிக் கொண்டிருந்த ஒரு சில மணித்தியாலங்களில் அப்பாவி மக்களின் அவலக்குரல்கள் ஊரெங்கும் ஒலித்தன. இதற்கெல்லாம் காரணம் அரச் அதிகாரிகளின் அசமந்தப்போக்கே. இலங்கையில் எந்த விடயம் மக்களுக்கு எதிராக நடந்தாலும் மக்களின் உயிரிழப்பு நடைபெற்ற பிறகு தான் அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலை காணப்படுகிறது - என்றார்.

(ஐ-10-46)

# அப்பாவி மக்களின் உயிரிழப்புக்கு அரசியல்வாதிகளே முழுப்பொறுப்பு

## மீதொட்டமுல்ல இடர் குறித்து மேல்மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 19

கொலன்னாவ, மீதொட்டமுல்ல இடரில் அப்பாவி மக்கள் உயிரிழந்தமைக்கு அரசியல்வாதிகளே பொறுப்புக் கூறவேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் இந்தப் பிரச்சினையை வைத்துக்கொண்டு கயிறுழுப்புச் செய்ததன் காரணமாகவே இந்த இடர் நிகழ்ந்தது.

இவ்வாறு மேல்மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"மீதொட்டமுல்லப் பகுதியில் குப்பைகளுக்குச் சிறப்புச் செயற்றிட்டமொன்றின் மூலம் தீர்வு காண, நாம் கடந்த காலத்தில் இங்கிலாந்திலிருந்து ஒரு நிறுவனத்தை முதலீடு செய்யுமாறு அழைத்து வந்தோம். அவர்களுக்கு அன்றிருந்த அரசியல்வாதிகள் அனுமதி அளித்திருந்தால் இன்று இந்த உயிரிழப்பைச் சந்தித்திருக்க மாட்டோம்.

கடந்த வருடம் மே மாதம் ஆரம்பிக்கவிருந்த மீதொட்டமுல்ல குப்பை முகாமைத்து நடவடிக்கையை மேற்கொள்ளத் தேவையான இயந்திரங்களைப் பொருத்துவதற்கு குப்பை மேட்டுக்கு



உள்ள இடத்தில் 60 பேர்ச்சர்ஸ் இடத்தை பெற்றுத் தருமாறு கேட்டோம். நகர அபிவிருத்தி அதிகார சபைக்குக் கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதிய போதிலும், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இந்தக் குப்பை மேடு தொடர்பில் கயிறிழுத்தவர்கள் மாகாண முதலமைச்சர்கள் அல்லர். அமைச்சர்களே ஆவர்.

இந்த குப்பை மேட்டுக்கு மக்கள் அடிபட்டு உயிரிழப்பைச் சந்திப்பதற்கு மாகாண சபையின் தவறு காரணமல்ல. மாறாக செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த இடம்தர மறுத்தவர்களே காரணம்" - என்றார்.

(ஐ-10)

# மீதொட்டமுல்ல குப்பைமேட்டால் மீண்டும் ஆபத்து

## எச்சரிக்கின்றது தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு

கொழும்பு,ஏப்.19

மீதொட்டமுல்ல குப்பை மேட்டால் மீண்டும் இடர்கள் ஏற்படக் கூடிய ஆபத்து உள்ளன என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் மழை பெய்தால் மீதொட்டமுல்ல குப்பைமேட்டில் மீண்டும் சரிவு ஏற்படும் என்று தேசியக் கட்டட ஆராய்ச்சி அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

அந்த அமைப்பின் மண் சரிவு ஆய்வு மற்றும் ஆபத்து தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளும் இயக்குநர் ஆர்.டி.எஸ்.பண்டார, கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"மீதொட்டமுல்லவில் உண்மையில் குப்பை மேடு சரியவில்லை. குப்பைமேட்டின் பாரத்தால் மண் மேடு உடைந்து விழுந்துள்ளது. இங்கு குப்பை மேட்டைச் சுற்றியுள்ள வீடுகள் ஒரு பக்கமாகத் தள்ளப்பட்டுள்ளன. மேல் பக்கமாக உயர்ந்துள்ளன. இந்த நிலைமையை நாங்கள் மண் சரிவு இடராகவே கருதுவோம். இவ்வாறான சம்பவம் இலங்கையில் இடம்பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும். தற்போதைக்குக் குப்பை மேட்டில் குப்பை போடப்படாததால் ஆபத்துக்கள் இல்லை. எதிர்வரும் நாள்களில் மழை பெய்தால் குப்பை மேட்டில் மற்றுமொரு இடர் ஏற்படக் கூடும். குப்பை மேட்டைச் சுற்றி ஆபத்தான எல்லையாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் வசிப்பவர்களை அங்கிருந்து செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆபத்தான பகுதியில் கிட்டத்தட்ட 130 வீடுகள் உள்ளன" - என்றார். (ஐ)




## குப்பைகளை அகற்றுவதற்கு மகிந்த ஒதுக்கிய நிதி எங்கே?

கொழும்பு,ஏப்.19

கொழும்பு நகரத்தில் அன்றாடம் சேரும் திண்மக் கழிவுகளை மாற்றுவதற்கும், கொலன்னாவை மீதொட்டமுல்ல குப்பையை அகற்றுவதற்கும் முன்னாள் அரச தலைவர் மகிந்தராஜபக்ச தனது ஆட்சிக் காலத்தின் போது 10 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்து அமைச்சரவை அலுவல இணையத்தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

மகிந்த தனது ஆட்சிக்காலத்தில் மீதொட்டமுல்லவில் குப்பைகளை அகற்றுவதற்கு 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தார். அதற்கான அமைச்சரவைப் பத்திரம் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சராக இருந்த அன்றைய அரச தலைவர் மகிந்தவால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு தலைநகரத்துக்கு அண்மைய பிரதேசங்களில் சேரும், நகரக் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்காக சுற்றாடல் ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் பொருளாதார ரீதியில் செயற்படுத்தக் கூடியதுமான தீர்வொன்று பற்றி அரசு கவனம் செலுத்தியுள்ளது. கொழும்பு நகரத்தில் சேர்க்கப்படும் நாளாந்த நகர திண்மக் கழிவுகள் சுமார் 700 மெற்றிக்தொன் என அளவிடப்பட்டுள்ளது.

இதேவேளை தலைநகரப் பிரதேசத்தின் நகர மயமாக்கப்பட்ட ஏனைய உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் அவ்வாறு சேரும் நகரத் திண்மக் கழிவுகளுடன் எடுக்கும் போது நாளொன்றுக்குச் சுமார் ஆயிரத்து 200 மெற்றிக் தொன் கழிவுகள் சேரும். புத்தளம்மாவட்டத்தின் அருவாக்காடு பிரதேசத்தில் துப்பரவேற்பாட்டு கழிவுப் பொருள்களை இடும் இடமொன்றை நிர்மாணித்து இக்குப்பைகள் அகற்றப்படும். இதேவேளை கொலன்னாவை மீதொட்டமுல்ல இடமாற்ற நிலையத்திலிருந்து திண்மக் கழிவுகளை தொடருந்து மூலம் கொண்டு செல்வதற்குப் பிரேரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்திட்டத்தின் மொத்த செலவு 107 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். (இலங்கை ரூபா10 பில்லியன்). இது தொடர்பிலான தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் அவ்வமைச்சுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. என்றுள்ளது. (ஐ)

## ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற செயலால் மக்களின் உயிர்களைப் பறிகொடுக்கிறோம்

### நல்லாட்சிக்கான தேசிய முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.19

நமது ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளும், துஷ்பிரயோகங்களும் எல்லை கடந்த நிலைக்குச் சென்றுள்ளன. அதற்கு விலையாக நாட்டு மக்கள் தமது உயிர்களை அநியாயமாகப் பறிகொடுக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இவ்வாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

மீதொட்டமுல்ல குப்பை மேடு இடர்தொடர்பில்வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மீதொட்டமுல்லவில் நடந்த இடர் ஒரு இயற்கை இடர் அல்ல. இது எமது நாட்டை ஆட்சி செய்த, ஆட்சி செய்கின்றவர்களின் கவனயீனங்களாலும், துஷ்பிரயோகங்களினாலும் ஏற்படுத்தப்பட்ட ஒரு இடராகும். பாரம்பரியமாக மக்கள் வாழ்ந்து வந்த மீதொட்டமுல்லப் பகுதியில் 2009ஆம் ஆண்டு குப்பைகளைக் கொட்டுவதற்கு கொழும்பு மாநகர சபை தொடங்கியது. அன்று முதல் இதை நிறுத்த வேண்டும் என்று மக்கள் அரசைக் கோரியும் போராடியும் வந்திருக்கிறார்கள். அவை எதுவும் கணக்கில் எடுக்கப்படவில்லை.

கொழும்பு நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளை வேறு சிறந்த வழிகளில் முகாமைத்துவம் செய்வதற்கான திட்டங்கள் பல நிபுணர்களால் முன்மொழியப்பட்டும் வந்தன.

வெளிநாட்டு நிறுவனங்கள் சிலவும் இதற்கான சில தீர்வுத் திட்டங்களை கொண்டும் வந்தன. அவை எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நாளாந்தம் கொழும்பு நகரில் சேரும் குப்பைகளை மீதொட்டமுல்லப் பகுதியில் கொட்டுவதை மாத்திரமே கொழும்பு மாநகர சபை செய்து வந்தது. திட்டங்களுக்காக வழங்கப்பட்ட நிதியில் பெருந்தொகை ஊழல் நடந்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு கூட கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னால் இந்தப்பகுதி மக்களை அழைத்துப் பேசி இதனை உடனடியாகத் தீர்த்து வைப்போம் என்று வாக்குறுதியும் வழங்கியுள்ளது. ஆனால் இதுவரை எதுவும் நடை பெறவில்லை. மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினைகளைத் தமது அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்துகின்ற பல சம்பவங்களில் இதுவும் ஒன்றாக மாறியிருக்கின்றது.

பல ஆடம்பரமான கவர்ச்சிகரமான வேலைத் திட்டங்களுக்காக கொழும்பு நகரில் பல நூறு கோடிகளைச் செலவு செய்கின்ற இந்த ஆட்சியாளர்கள் மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கான ஒரு சிறு முயற்சியைக்கூட எடுக்கவில்லை. மாறாக தமது அரசியல் இலாபத்துக்கும் பொருளாதார இலாபத்துக்குமாகவே அதனைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள்.

தமது பொறுப்பற்ற நடவடிக்கைகள் காரணமாக மக்களின் வரிப்பணத்தை உறுஞ்சுகின்ற ஆட்சியாளர்களக்குத் தமது உயிர்களையும் காவு கொடுக்க வேண்டிய பரிதாப நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். வெளிநாடுகளிலுள்ள பல நகரங்களில் இதைவிட அதிகமான மக்கள் செறிந்து வாழும் இடங்களில் கூட திண்மக்கழிவு முகாமைத்துவம் மிகக் கிரமமாகக் கையாளப்படுகின்றது.

உதாரணமாக 24 மில்லியன் சனத் தொகையைக் கொண்ட ஆஸ்திரேலியாவில் வருடமொன்றுக்கு கிட்டத்தட்ட 45 மில்லியன் தொன் திண்மக்கழிவுகள் சேருகின்றன. ஆனால் அவை அனைத்துமே குறிப்பிட்ட அந்த ஒரு வருடத்துக்குள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு விடுகின்றன. 21 மில்லியன் தொகையைக் கொண்ட எமது நாட்டில் வருடமொன்றுக்கு 2.3மில்லியன் தொன் அளவிலான திண்மக் கழிவுகள் சேருகின்றன.

ஆஸ்திரேலியாவோடு ஒப்பிடுகின்ற போது நமது நாட்டில் மிகக் குறைந்த அளவே குப்பைகள் சேருகின்றன. இதனைக்கூட கையாள முடியாத நிலையில் தான் நமது ஆட்சியாளர்கள் இந்த மனித அழிவுகளுக்கு வழிகோலியிருக்கிறார்கள்.

இத்தனை தொழில் நுட்பங்களும் அறிவியல் வசதிகளும் இருக்கின்ற நிலையிலும் கூட இத்தனை வருட காலமாகக் குப்பைப்பிரச்சினைக்குத்தீர்வு காண முடியாமல் திண்டாடுகின்ற ஆட்சியாளர்கள் வெட்கித் தலை குனிய வேண்டும். இந்த உயிர் இழப்புக்களுக்கான பொறுப்பை அவர்களே ஏற்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்குமான போதுமான நிவாரணங்களை உடனடியாக வழங்க வேண்டும். அத்தோடு, குப்பைப் பிரச்சினைக்கான தீர்வை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். இடரால் பாதிக்கப்பட்ட, தமது உறவுகளை இழந்த மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இம்மக்களுக்கு நீதி, நிவாரணம் கிடைப்பதற்காக எம்மால் முடிந்த சகல உதவிகளையும் செய்வதற்கு நாம் என்றும் தயாராக இருக்கிறோம்- என்றுள்ளது. (ஐ)

## தொற்றுநோய்கள் பரவுவதை தடுப்பதற்கு நடவடிக்கைகள்

கொழும்பு,ஏப்.19

மீதொட்டமுல்லப் பகுதியில் தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறன. மீதொட்டமுல்ல குப்பை மேட்டுச் சரிவை அடுத்து, அந்தப் பகுதியில் தொற்று நோய் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. இடர் காரணமாக இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளவர்கள் மத்தியில் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதைத் தடுக்கும் வழிமுறைகள் தற்போது கையாளப்படுகின்றன என்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தனிமனித சுகாதாரம் குறித்து விழிப்பு ணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நுளம்பு உள்ளிட்ட நோய் காவிகளின் ஊடாக ஏற்படுகின்ற நோய்ப் பரவலையும் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இடம்பெயர்ந்தவர்களுக்கு நோய் எதிர்ப்பு மருந்துகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மீதொட்டமுல்ல இடரால் 31 பேர் சாவு; 30 பேர் மாயம்

கொழும்பு, ஏப். 19

கொலன்னாவ மீதொட்டமுல்லவில் குப்பைமேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது. 30 பேரைக் காணவில்லை என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

கொலன்னாவ மீதொட்டமுல்லவில் உள்ள 300 அடி உயரமுள்ள குப்பைமேட்டின் உச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் தீ விபத்து ஏற்பட்டது. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கொளுத்தப்பட்ட பட்டாசால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

தீ விபத்தை அடுத்து குப்பை மேடு அருகில் இருந்த வீடுகளுக்கு மேல் சரிந்து விழுந்தது. அந்தப் பகுதியில் இருந்த 100 வீடுகளில் 50 வீடுகள் இதில் புதைந்து போயுள்ளன. தொடர்ந்தும் அந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பவத்தில் காயமடைந்த 11 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 228 குடும்பங்களைச் சேர்ந்த 980 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# காணிப் பிரச்சினையை தீர்ப்போர் எம்மையும் திரும்பிப் பாருங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உருக்கமாக வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்.19

காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கும் நீங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கும் தீர்வைப் பெற்றுத் தர முயற்சியுங்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இவ்வாறு உருக்கமாக வேண்டுகோள் முன்வைத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் வடக்கிலும், கிழக்கிலும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். அந்தப்போராட்டங்கள் இரு மாதங்களை எட்டவுள்ள நிலையில் இதுவரை எந்த விதமான தீர்வுகளும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.



"இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிப்பதற்காக நடத்தப்படும் போராட்டங்களைக் கவனத்திற்கொண்டு அவற்றைத் தீர்க்க முயல்பவர்கள், எங்கள் பிரச்சினைகளை அரசிடம் கூறித் தீர்வைப் பெற்றுத் தர முயற்சிக்கவில்லை." என்று தொடர் போராட்டத்தில் ஈடுபடும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவலை வெளியிட்டனர்.

கிளிநொச்சியில் 58 ஆவது நாளாகவும், வவுனியாவில் 54 ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 40 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 35ஆவது நாளாகவும், திருகோணமலையில் 45 நாளாகவும் போராட்டங்கள் நேற்றும் தொடர்ந்தன.

(ற - 5)

# மீண்டும் வாக்குமூலத்துக்காக அழைக்கப்படுவார் அர்ஜுன்

கொழும்பு, ஏப். 19

இலங்கை மத்திய பிணை முறி மோசடி தொடர்பில் வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மீண்டும் வாக்குமூலம் வழங்க அழைக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி மத்திய வங்கி முறி தொடர்பில் விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக் குழுவுக்கு அவர் அழைக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய வங்கியின் இரு அதிகாரிகள் வாக்குமூலம் வழங்க அழைக்கப்படவுள்ள நிலையில், இவர்களில் ஒருவர் தற்போது வெளிநாடு சென்றுள்ளார்.

இவர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டதன் பின்னர் மீண்டும் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் அழைக்கப்படவுள்ளார்.

2015ஆம் ஆண்டு ரணில் மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து ஒரு மாதகாலத்துக்குள் மத்திய வங்கியின் பிணை முறிகள் விநியோகத்தில் மோசடி இடம்பெற்றது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

கோப் குழுவிடம் இதுகுறித்த விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டது. மத்திய வங்கியில் பிணை, முறிகள் விற்பனையில் மோசடி நடந்துள்ளது என்றுகோப் குழுவின் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தி மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமித்தார். இந்த மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.

(ற- 10)

## மாத்தளை ஐ.தே.க. அணி சுயேச்சையாகப் போட்டி

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மாத்தளை மாவட்டத்திலுள்ள சகல தொகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் சுயாதீனமாகப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

மாத்தளை நகர சபையைக் கைப்பற்ற முன்னாள் நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் டல்ஜின் அலுவிகாரே (ஐ.தே.க.) தலைமையில் சுயேச்சைக் குழுவொன்று களமிறங்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மாத்தளை மாவட்ட மக்கள் நல்லாட்சி அரசின் மீது நம்பிக்கையை இழந்துவிட்டதால் உள்ளூராட்சித் தேர்தலில் பிரதான இரு கட்சிகளுக்கும் வெற்றிவாய்ப்புகள் கேள்விக்குறியாகியிருப்பதாலேயே சுயேச்சையாகப் போட்டியிடத் தீர்மானித்திருப்பதாக மாத்தளை மாவட்ட ஐ.தே.க. பிரமுகர்கள் தெரிவித்தனர்.

ஐ.தே.கவினரைப்போலவே சுதந்திரக் கட்சி பிரமுகர்களும் தற்போதைய அரசின் மீது நம்பிக்கை இழந்திருப்பதாகவும் அவர்களும் சுயாதீனமாகச்செயற்படக்கூடிய சாத்தியங்கள் தென்படுவதாகவும் டல்ஜின் அலுவிகாரே தெரிவித்தார். (த)

# இன்புளுவன்சா தொடர்பாக அக்கறையற்றுள்ளார் ராஜித

## குற்றஞ்சாட்டுகின்றது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஏப். 19

இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் இன்புளுவென்சா தொற்று வேகமாக பரவிவருகின்ற நிலையில் அவசர கால நிலைமையை பிரகடனப்படுத்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தவறிவிட்டார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் செயலர் நவீன் டி சொய்ஸா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"இன்புளுவென்சா வைரஸ் தொற்றால் பலர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. சுகாதார அமைச்சர் என்ற வகையில் ராஜித சேனாரத்ன, இந்த நிலமை குறித்து கவனத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. தட்டுப்பாடு நிலவுகின்ற வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் உடனடியாக அனுப்பிவைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார்.

(ற - 10)

# புத்தாண்டு காலத்தில் அதிவேகப் பாதைகளின் வருமானம் 23 கோடி ரூபா

கொழும்பு, ஏப். 19

இந்த வருட சிங்கள தமிழ்ப் புத்தாண்டு காலத்தில் அதிவேகப் பாதைகளில் கிடைத்துள்ள வருமானம் சுமார் 23 கோடி ரூபாவென அதிவேகப் பாதைகளின் பராமரிப்பு மற்றும் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஒப்பநாயக்க தெரிவித்திருக்கிறார்.

முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது இந்த வருட வருமானம் 25 வீதத்தால் அதிகரித்திருப்பதாகவும், இம்மாதம் 7ஆம் திகதிமுதல் நேற்றுமுன்தினம் வரையிலான காலப் பகுதியிலேயே இந்த வருமானம் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்தப் பாதைகளில் அதிக வாகனங்கள் பயணித்திருப்பதாகவும் தெரியவருகின்றது. (த)



வசந்த காலத்தை முன்னிட்டு நுவரெலியாவில் நேற்று மலர்கண்காட்சி நடைபெற்றது. கண்காட்சியை நுவரெலியா மாநகர சபை ஏற்பாடு செய்தது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கண்டியிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் துணைத் தூதர் செல்வி ராதா வெங்கட்ராமன் கலந்து கொண்டார். (ற -10)

NORTH LANKA IIT
இலங்கையின் தலைசிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனம்
UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

Master of Education (M.Ed.)
✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
✓ வடமாகாணக் கல்வியமைச்சின் அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: B.Ed. / P.G.D in Edu

B.Sc. in Physical Education And Sports
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year
Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

Master of Business Administration (MBA)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

Master of Public Administration (MPA)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

Contact Persons:
Mr.Kanthaiya Sivaraja, Program Co-ordinator, NLIIT, Ph: 0775532402
Dr.Sithambaram Mohan, Human Resource Head, NLIIT, Ph: 0776030507

B.Sc. in Computer Science
✓ UGC Approved ■ Duration: 3 Years ■ Entry Qualification: O/L or A/L

B.Sc. in Computer Science (Top Up)
✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: 2 Years Diploma / HND

M.Sc. in Computer Science
✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: Any Degree

விண்ணப்ப கட்டணம்: Rs. 1000/-
நேர்காணலுக்கு அழைக்கப்படும் திகதி: 23 / 04 / 2017

விண்ணப்பக் கட்டணத்தை 22-4-2017 ஆம் திகதிக்குள் செலுத்தி 23-4-2017 அன்று நேர்காணலுக்கு கீழ்கண்ட முகவரியில் சமூகமளிக்கவும். மேலும் விவரங்களை பெற கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்.

North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna. Ph: 0767504535 / 0214927088



உலகப் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளினின் 128ஆவது பிறந்ததினம் அவரது ரசிகர்களால் உலகமெங்கும் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரில் சார்லி சப்ளினைப் போன்று வேடமிட்டு நூற்றுக்கணக்கான மக்கள் இணைந்து தமது நாயகனின் பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர். அது தொடர்பான ஒளிப்படமே இது. (ம)

## 70 மில். ஆண்டுக்கு

ஆர்ஜென்ரீனாவில் தொல்பொருள் ஆய்வாளர்களின் ஆராய்ச்சிக்குட்பட்ட அகா மகுவோ என்ற பகுதியில் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த முட்டைகள் இன்னமும் உயிர்க்கருக்

## இஸ்ரேல் சிறைகளில் பலஸ்தீனக் கைதிகள் உணவு ஒறுப்புப் போர்

இஸ்ரேல் சிறைகளில் உள்ள ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனக் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இஸ்ரேல் முழுவதும் உள்ள சிறைகளில் கிட்டத்தட்ட 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உள்ளனர். இவர்கள் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களிலும், பொய்வழக்குகளிலும் இஸ்ரேலால் சிறையிடப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டுக்கு எதிராக குற்றச்சாட்டு உள்ளது. அவ்வாறு சிறையிடப்பட்டுள்ள ஆயிரத்து 500 கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி தற்போது உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## உலகப் பிரபலங்களில் டுடேர்தேக்கு முதலிடம்

வொஷிங்டன், ஏப். 19

அமெரிக்காவின் பிரபல பத்திரிகையொன்று தனது வாசகர்களிடையே, உலகப் பிரபலங்கள் தொடர்பில் நடத்திய கருத்துக் கணிப்பில் பிலிப்பைன்ஸ் அதிபர் டடேர்தே முதலிடம் பிடித்தார்.

பிலிப்பைன்சின் புதிய அதிபராக கடந்த ஆண்டு ஜூன் மாதம் டுடேர்தே பொறுப்பேற்றார். அன்று முதல் அங்கு போதைப்பொருள் ஒழிப்பு போரில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் விற்பனையாளர்கள் என 8 ஆயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டனர். போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பரப்புரைக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இதனாலேயே அவருக்கு முதலிட அந்தஸ்து கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

கனடா பிரதமர் ஜஸ்டின் இரண்டாவது இடத்தையும், பாப்பரசர் பிரான்சிஸ் மூன்றாவது இடத்தையும், பில்கேட்ஸ் நான்காவது இடத்தையும், முகநூல் நிறுவுனர் மார்க் ஐந்தாவது இடத்தையும் பெற்றனர்.

அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு ஆறாவது இடம் கிடைத்தது. இந்தியப் பிரதமர் மோடி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு ஆகியோர் இடம்பெறவில்லை. (ம)



# ஓ.பி.எஸ்ஸுடன் இணைவதற்கு இ.பி.எஸ். தரப்பில் தனிக்குழு

## இன்னும் ஓரிரு தினங்களில் இணையலாம் எனத் தகவல்

சென்னை, ஏப். 19

ஓ.பன்னீர்செல்வம் தரப்புடன் இணைய எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர் தனிக்குழு அமைத்துள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் அ.தி.மு. கழகம் மூன்றாக உடைந்துள்ளது. சசிகலா, ஓ.பி.எஸ்., தீபா ஆகியோரின் தலைமையில் மூன்று குழுக்களும் செயற்பட்டு வருகின்றன. சொத்துக் குவிப்பு வழக்கில் நான்கு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் சசிகலா. கட்சியின் பொதுச் செயலாளருக்குச் சிறைத் தண்டனை விதித்து குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டதால் அ.தி.மு. கழகத்தின் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆர்.கே. நகர இடைத்தேர்தலில் போட்டியிட்ட அ.தி.மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன்,வாக்குகளைவிலைக்கு வாங்க முயற்சித்தார். கட்சியின்இரட்டைஇலையை மீட்டெடுப்பதற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கே லஞ்சம் கொடுக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. இதனால் அ.தி.மு. கழகத்தின் மிதான அதிருப்தி இரட்டிப்பாகியுள்ளது.

இதனால் ஓ.பி.எஸ். தரப்பினருடன் இணைவதற்கு எடப்பாடி தரப்பினர் ஆர்வம் காட்டினர். சசிகலாவிடம் இருந்து கட்சியைக் காப்பாற்ற பேச்சு நடத்த முன்வந்தால் நிபந்தனை இல்லாமல் பரிசீலிக்கப்படும் என்று பன்னீர் செல்வம் தெரிவித்தார். இதனையடுத்து இரு குழுக்களும் மீண்டும் இணைவது தொடர்பில் பேச்சு நடத்த எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர் தனிக் குழு அமைத்துள்ளனர். இந்த இணைவு இன்னும் ஓரிரு அல்லது சில தினங்களில் சாத்தியமாகும் என்று என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

எனினும், இந்தத் தகவல்களுக்கு முரணாக சசிகலாவை, பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பிலோ அல்லது அவர் பதவி விலக வலியுறுத்துவது தொடர்பிலோ ஆராயவில்லை என்று தமிழக அமைச்சர்கள் ஜெயக்குமார், சண்முகம் ஆகியோர் தெரிவித்தனர். (ம)





## போர்த்துக்கல்லில் விமான விபத்து ஐவர் பரிதாபமாக உயிரிழந்தனர்

லிஸ்பன், ஏப். 19

போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் நேற்றுமுன்தினம் இரவு (இலங்கை நேரப்படி) சிறிய ரக வானூர்தியொன்று விபத்துக் குள்ளானதில் ஐவர் உயிரிழந்தனர். போர்ச்சுக்கல் தலைநகர் லிஸ்பன் வானூர்தி நிலையத்தில் இருந்து புறப்பட்ட குறித்த விமானம், சிறிது நேரத்திலேயே கடைத்தொகுதி ஒன்றுக்குள் விழுந்து விபத்துக்கு உள்ளானது.

விமானியும் அதில் பயணித்த மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். கடைத்தொகுதியில் நின்ற ஒருவருக்கு காயம் ஏற்பட்டது. சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ம)



## சிரியாவில் வான்வழித் தாக்குதல்; 14 பேர் சாவு

டமஸ்கஸ், ஏப். 19

சிரியாவின் கிழக்குப் பகுதியில் அமெரிக்கக் கூட்டுப்படைகள் நேற்றுமுன்தினம் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் வான்வழித்தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர்.

ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனி நாடாக அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. குறிப்பாக அந்த அமைப்பு சிரியாவில் வலுவாக வேரூன்றியிருந்தது. தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ்ஸுக்கு எதிரான போர் அங்கு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஈராக், சிரிய எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வான் வழித் தாக்குதலில் 14 பேர் சாவுடைந்தனர். அமெரிக்கக் கூட்டுப்படையால் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் நிலைகள் என்று கருதி நடத்தப்பட்ட தாக்குதல் இலக்குத் தவறியதை அடுத்தே இந்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது என்று பிரிட்டனை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் கண்காணிப்புக் குழு தெரிவித்தது. (ம)

## ...ழற்பட்ட டைனோசர் முட்டைகள் மீட்பு

...களுடன் உள்ளன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதேபகுதியில் 1997ஆம் ஆண்டிலும் டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, தொடர்ந்து டைனோசர் பற்றிய படிமங்கள் மற்றும் முட்டைகள் என கண்டெடுக்கப்படுவதால், அந்தப் பகுதியைப் பாதுகாக்கும் விதமாக அங்கு படிம ஆய்வியல் பூங்காவை அமைக்க ஆர்ஜென்ரீனா அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. (ம)



# எர்டகனை வாழ்த்தினார் ட்ரம்ப்



இஸ்தான்புல், ஏப். 19
துருக்கியில், அதிபருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்று நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பில் கூடுதல் அதிகாரம் வழங்கப்படுவதற்கு பெரும்பான்மை ஆதரவு கிடைத்தது. இதற்காக அந்த நாட்டு அதிபர் எர்டகனுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வாழ்த்துத் தெரிவித்தார்.
துருக்கியில் அதிபர் எர்டகன் தலைமையிலான ஆட்சியைக் கவிழ்க்க இராணுவத்தின் ஒரு பிரிவினர் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடத்திய இராணுவப் புரட்சியை பொது மக்கள் உதவியுடன் அரசு வெற்றிகரமாக முறியடித்தது.
இதனைத் தொடர்ந்து துருக்கி அரசமைப்பில் அதிபருக்கு அதிகப்படியான அதிகாரம் வழங்கும் வகையில் நாடாளுமன்றத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று எர்டகன் வலியுறுத்தினார். இதற்காக பொதுமக்களிடம் கடந்த ஞாயிற்றுக் கிழமை பொது வாக்கெடுப்பு நடைபெற்றது.
அதிபருக்கு ஆதரவாக 51.4 சதவீதத்தினரும், எதிராக 48.6 சதவீதத்தினரும் வாக்களித்தனர். முடிவில் அதிபர் எர்டோகன் வெற்றிபெற்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெற்றிக்காகவே ட்ரம்ப் வாழ்த்துத் தெரிவித்தார். (ம)



# சீனாவுக்கு எதிராக லாமாவை பயன்படுத்தக்கூடாது இந்தியா

## அந்த நாடு எச்சரிக்கை



பீஜிங், ஏப். 19
எங்களை கட்டுப்படுத்துவதற்காகத் தலாய் லாமாவை பயன்படுத்தக்கூடாது என்று இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை விடுத்தது.
சீன அயலுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் லூ காங் நேற்றுமுன்தினம் இந்த எச்சரிக்கை விடுத்துள்ளார். தலாய் லாமாவின் அருணாச்சல வருகை இந்திய சீன உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா, திபெத் தொடர்பான பிரச்சனைகளை அர்ப்பணிப்புடன் கண்காணிக்க வேண்டும். மேலும் சீனாவை கட்டுப்படுத்த தலாய்லாமாவை பயன்படுத்தக் கூடாது. இந்த ஒரு வழி மட்டுமே இந்தியா - சீனா இடையே நிகழும் எல்லை தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சுமூகமாக சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என லூ காங் மேலும் தெரிவித்தார்.
இந்தியா, தன்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் எவருக்கு எதிராகவும் பகடைக்காயாகப் பயன்படுத்தியது இல்லை என்று தலாய் லாமா முன்னதாகக் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வடகொரியா விடயத்தில் பொறுமையில்லை அமெரிக்க துணைஅதிபர் பென்ஸ் கருத்து



வொஷிங்டன், ஏப். 18
வடகொரியாவுடனான உறவுச் சிக்கலில் கொள்கை ரீதியாக இது வரை கடைபிடித்துவந்த பொறுமையான போக்கை இனியும் தொடர வாய்ப்பில்லை என்று அமெரிக்கா எச்சரித்தது. அந்த நாட்டின் துணை அதிபர் மைக் பென்ஸ் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.
வடகொரியா நடத்திவரும் ஆயுதச் சோதனைகள் தொடர்பாக, வொஷிங்டன் நகரில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"வட கொரியா நடத்திய ஏவுகணைச் சோதனை ஆத்திரமூட்டுகிறது. சீனா தனது நடவடிக்கையின் மூலம் வடகொரியாவின் ஆயுத சோதனைகளைக் கைவிட அழுத்தம் கொடுக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது. வட கொரியாவுடன் அமெரிக்கா கையாண்ட பொறுமை சகாப்தம் முடிந்துவிட்டது" என்றார்.
வடகொரியாவின் அணுவாயுதச் சோதனையை அருகில் இருந்து கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் அமெரிக்கா கொரியத் தீபகற்பத்தில் வின்சன் என்ற போர்க் கப்பலை நிலைநிறுத்தியுள்ளது. இது தொடர்பில் இந்த இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றம் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.
மைக் பென்ஸ் நேற்று முன்தினம் வடகொரியாவுக்கு அயல் நாடான தென்கொரியாவுக்கு சென்றிருந்தார்.
இரு நாடுகளினதும் எல்லைப் பகுதிக்கு நேரடியாகச் சென்று அவர் ஆய்வு நடத்தினார் என்று தென்கொரிய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



# தமிழக விவசாயிகள் சாட்டையால் அடித்துப் போராட்டம்

புதுடெல்லி, ஏப். 19
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் கடந்த 36 நாள்களாக போராடிவரும் விவசாயிகள் நேற்று சாட்டை அடித்துத் தம்மைத் துன்புறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
நதிநீர் பங்கீடு, பயிர்க்கடன் தள்ளுபடி, காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் தமிழக விவசாயிகள் நேற்றுடன் தொடர்ந்து 36ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
எலிகள், பாம்புகளைக் கடித்துக் கொண்டும், பாதி மொட்டை, பாதி மீசையுடனும், அரை நிர்வாணமாகவும், நிர்வாணமாகவும், சேலை கட்டிக் கொண்டும், வளையல் உடைத்து, தாலி அறுத்துக் கொண்டும் நூதனப் போராட்டங்களில் ஈடுபட்டு பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ள இவர்கள் நேற்று சாட்டை அடித்துத் தம்மைத் துன்புறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. விவசாயிகளின் இறுதிக் கோரிக்கையாக இந்தியப் பிரமதர் மோடி தம்மைச் சந்திக்க வேண்டும் என்பது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# போரை முடித்து வைத்ததால் இந்தியா சாதித்தது என்ன?

நேற்றைய பத்திரிகைகளில் வெளியான இரு செய்திகள் கவனத்தை ஈர்ப்பன. ஒன்று, விடுதலைப் புலிகளுக்கு எதிராகத்தான் நடத்திய போர் இந்தியாவின் போர் என்று மீண்டும் ஒரு தடவை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச இந்திய ஊடகம் ஒன்றிடம் தெரிவித்திருப்பது. மற்றையது அம்பாந்தோட்டை தொடர்பான உடன்பாடு கையெழுத்திடப்பட்டால் அங்கு சீனக் கடற்படைத் தளமும் சீன வான் படைத் தளமும் அமைக்கப்படுவது உறுதியாகிவிடும் என்று இந்தியக் கடற்படையின் முன்னாள் தளபதி வைஸ் அட்மிரல் அருண்குமார் சிங் விடுத்துள்ள எச்சரிக்கை.

இந்த இரண்டு விடயங்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு உண்டு. விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஈழத்தில் அடியோடு அழித்து இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது இந்தியாதான் என்பது ஏற்கனவே தெரிந்த உண்மைதான். எனினும் இந்தியா நிபந்தனையற்ற விதத்தில் இந்தப் போருக்கு ஆதரவளித்தது, அதாவது கேட்காமலேயே ஆதரவளித்தது என்று மகிந்த இப்போது கூறுகிறார்.

இந்தியா அப்படிச் செய்ததற்குப் பின்னணியில் உறுதியான பூகோள இராஜதந்திரம் இருந்தது என்ற விளக்கம் அரசியல் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுவது வழமை. அது, போரைக் காரணமாக வைத்து இலங்கை, அளவுக்கு அதிகமாகச் சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுடன் நெருக்கத்தைப் பேணுவது தனது பாதுகாப்புக்கு ஆபத்து என இந்தியா கருதியதால் இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அது விரும்பியது என்பதாகும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் மூலோபாயத்தை முன்னெடுப்பதால் இலங்கையில் நடக்கும் போர் அதற்கு அதிகம் வழியேற்படுத்திக் கொடுக்கிறது என்று கணிக்கப்பட்டது. அப்படி இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா ஆதிக்கம் பெறுவதை இந்தியாவும் அமெரிக்காவும் விரும்பவில்லை. அதனால் அவை சீனாவின் நகர்வுகளுக்கு முட்டுக்கட்டையிட முயன்றன. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் அமைந்துள்ள இலங்கை சீனாவின் பிடிக்குள் சென்றுவிடுவதைத் தடுப்பது இந்த நாடுகளின் மூலோபாயமாக இருந்தது.

போரைச் சாட்டாக வைத்து சீனா இலங்கையுடன் நெருக்கமாவதைத் தடுக்க, தமிழ் மக்களுக்கு எத்தகைய இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டில் புலிகளை அழித்துப் போரை முடிவுக்குக் கொண்டுவர இந்தியாவும் அமெரிக்காவும் விரும்பின. அதைச் செய்தும் காட்டின. ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்களின் சாவுகளின் மத்தியிலும் மனிதப் பேரவலத்தின் ஊடாகவும் போரை அவை முடிவுக்குக் கொண்டு வந்தன.

ஆனால், போர் முடிந்த பின்னர் இந்தியா நினைத்தது உண்மையில் நடந்ததா? என்பதே முக்கியமானது. இலங்கையில் இருந்து சீனாவை அகற்றுவதற்கு அல்லது சீனப் பிடியிலிருந்து இலங்கையை விடுவிப்பதற்காகப் புலிகளை அடியோடு அழிப்பதற்கு இந்தியா முன்வந்தது என்றால், அதன் இராஜதந்திரம் போருக்குப் பின்னர் கொழும்பிடம் தோற்றுவிட்டது என்றே பொருள். ஏனெனில், போரின் போதிருந்ததைவிட பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் சீனா இலங்கையில் மேலும் ஆழமாக ஊடுருவி நிலைகொண்டது.

ஆக, இலங்கையில் தனது உண்மையான நண்பனாக இருக்கக் கூடிய தரப்பை இனங்காணத் தவறிய இந்திய இராஜதந்திரத்தின் விளைவே, இப்போது இலங்கையில் சீனப் படைத் தளங்கள் வந்துவிடும் என்கிற இந்தியாவின் அச்சம். புலிகளை ஒழித்து, தமிழர்களை நசுக்க கொழும்புக்கு உதவுவதன் மூலம் அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்கிற புதுடில்லியின் கணக்குப் பொய்த்துப் போய்விட்டது. இந்தியக் கடற்படையின் முன்னாள் தளபதியின் கருத்தும், ஒரு சில மாதங்களுக்குள் மூன்று தடவைகள் கொழும்பு வந்து செல்லும் இந்திய அயலுறவுத்துறைச் செயலரின் பயணங்களும் இதனைத்தான் உறுதி செய்கின்றன.

தமிழர்கள்தான் இந்தியாவின் உண்மையான நண்பர்களாக இருக்கக்கூடியவர்கள் என்பதைப் புறந்தள்ளி கொழும்பைத் திருப்திப்படுத்தி வளைத்துப்போடும் புதுடில்லியின் இராஜதந்திரம் தொடர்ந்து தோல்வியைத் தழுவுகின்றபோதும் அதனையே மீண்டும் மீண்டும் அது செய்து வருகிறது. தமிழர்களுக்கு வேதனை தரும் செய்தி அதுதான்.

# துரோகத்தனமும், குழிபறிப்பும்

## தமிழ் இனத்தவர்களது அழியாத அடையாளங்கள்

சேரலாதன்

தமிழர்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் முன்னரும் கூட எட்டப்பர்களும், சகுனிகளும் நிறையவே இருந்திருக்கிறார்கள். கட்டப் பொம்மனைக் காட்டிக் கொடுத்து வெள்ளையர்களிடமிருந்து சலுகைகளைப் பெற்றுக் கொண்டவன் எட்டப்பன். வன்னிமன்னன் பண்டாரவன்னியனுக்குக் காக்கைவன்னியன் புரிந்த துரோகம் இலங்கைத் தமிழர் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாதது. விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்கும் துரோகத்தனமே காரணமாக அமைந்து விட்டது. அதன் பின்னரும் இந்த இழிநிலை ஓய்ந்ததாகத் தெரியவில்லை.

எந்த வகையிலாவது கூட்டமைப்பைப் பிளவுபடுத்திவிட வேண்டும் என்பதில் சிலர் மிகுந்த கரிசனையுடன் செயற்படுகின்றனர். கூட்டமைப்பு உடைவதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் தொடர்பாக இவர்கள் சிந்திப்பதாகத் தெரிய வில்லை. தமது குறுகிய அரசியல் இலாபங்கள் குறித்து மாத்திரமே இவர்கள் சிந்திக்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் போராட்ட வரலாற்றில் இலட்சக் கணக்கானவர்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். பலர் தமது உறவுகளை இழந்து நடைப் பிணங்களாக அலைந்து கொண்டிருக்கின்றனர். இலட்சக்கணக்கானவர்கள் புலம்பெயர்ந்து அந்நிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியானதொரு நிலையிலேயே இன்று காணப்படுகின்றது.

### வடக்கு முதலமைச்சர் மீது தமிழ் மக்களுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும்

வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்தவர் என்பதால் அவர் மீது தமிழ் மக்களுக்கு ஒரு மதிப்பு இருந்தது. அதுவரை அரசியலில் செயற்படாத அவர் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கப் பட்டபோது எவருமே அவரை எதிர்க்கவில்லை. நேர்மையாகவும், வினைத்திறனுட னும் அவர் செயற்படுவார் என்றே வடபகுதி மக்கள் நம்பினார்கள். இதன் காரணமாகவே தேர்தலில் அதிக விருப்புவாக்குகளை அவரால் பெறமுடிந்தது. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலின்போது கூட்டமைப்புக்குச் சார்பான பரப்புரைகளிலிருந்து அவர் ஒதுங்கி நின்றார். இதற்கான வலுவான காரணத்தை அவர் தெரிவிக்கவில்லை. கூட்டமைப்பின் தலைமையும் அப்போது அதையொரு பெரிய விடயமாகக் கருத வில்லை. ஆனால் தமிழ் மக்கள் பேரவை அமைக்கப்பட்டு அதில் வடக்கு முதலமைச்சர் முக்கிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட போதுதான் பலருக்கும் விழிப்பு வந்தது. கூட்டமைப்புக்கு விரோதமானவர்கள் சிலர் பேரவையை அமைப்பதற்கு முன்னின்றனர். அது மட்டுமல்லாது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற அரசியல் கட்சியொன்று பேரவையின் முக்கிய பங்காளியாகத் திகழ்கின்றது. கூட்டமைப்பையும் அதன் தலைமையையும் கடுமையாக விமர்சிப்பதில் இந்தக்கட்சியினர் முன்னிலை வகிக்கின்றனர். கூட்டமைப்பையும் அதன் தலைமையையும் பிடிக்காது விட்டால் கூட்டமைப்பிலி ருந்து கௌரவமாக ஒதுங்கிக் கொள்வதே பொருத்தமானது.

### வடக்கு முதலமைச்சருக்கு வால் கட்டிய தரப்பினர்கள்

வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் வருகைக்குப் பின்னர் கூட்டமைப்புக்கு எதிரான விமர்சனங்கள் வலுப்பெற்றன. அவரையே அடுத்த தமிழினத் தலைவரென அடையாளம் காட்டியவர்களும் இருக்கத்தான் செய்தனர். இதற்கெல்லாம் அவர் மறுப்பெதுவும் கூறாது மௌனம் சாதித்துக் கொண்டிருந்தார். சில ஊடகங்கள் வடக்கு முதலமைச்சருக்குக் கொம்பு சீவி விடுகின்ற பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் காணமுடிகின்றது. இந்த நிலை தொடருமானால் தமிழர்களின் பிளவை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.

இலங்கைத் தமிழர்களின் போராட்ட வரலாற்றில் இலட்சக்கணக்கானவர்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். பலர் தமது உறவுகளை இழந்து நடைப் பிணங்களாக அலைந்து கொண்டிருக்கின்றனர். இலட்சக்கணக்கானவர்கள் புலம் பெயர்ந்து அந்நிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியானதொரு நிலையிலேயே இன்று காணப்படுகின்றது. அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு எதுவும் இதுவரை கிட்டவில்லை. இந்த நிலையில் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியல் கட்சிகள் தமக்குள் வேற்றுமையை வளர்ப்பதை ஏற்றுக் கொள்ள இயலாது.

### எவரையும் நம்பமறுக்கும் தமிழ் மக்கள்

இனியும் அரசையோ அல்லது தமது அரசியல் தலைமைகளையோ நம்பியிராமல் தமது கையே தமக்கு உதவி என்ற வகையில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழர்களைப் பிரதிநிதித்து வம் செய்கின்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் இந்தப் போராட்டங்களில் தமது நேரடியான பங்களிப்பை வழங்குவதன் மூலம் அந்த மக்களுக்கு உத்வேகத்தை அளிக்கமுடியும். இதன் மூலமாக அரசின் அணுகுமுறையிலும் மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

புதிய அரசமைப்பின் உருவாக்கம், மாகாணசபைகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்குதல், படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல் போன்ற விடயங்களில் தீர்வு கிடைக்கு மெனத் தமிழர்கள் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், இவற்றுக்குத் தீர்வு காணும் ஆற்றல் தற்போதைய அரசிடம் காணப்படவில்லை.

ஆகவே தமிழர் தரப்புக்கள் அரசின் மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை வைப்பதை விடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் தயாராக இருத்தல் வேண்டும். இதற்கு ஒற்றுமையுடன் செயற்படுவதுதான் தற்போதைய தேவையாகும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்கில் பயணம் செய்தால் உரிய இலக்கைச் சென்று அடையவே முடியாது. மாறாக இன்னல்கள் தான் தொடரும்.

மு.ஈழத்தமிழ்மணி



# இனவிடுதலைக்காய் தன்னுயிர் ஈந்த அன்னை பூபதி

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதியன்று இலங்கை இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, இந்திய அமைதிகாக்கும் படையினர் அடுத்த வந்த நாள்களில் இலங்கைக்கு வந்து தங்கள் பணிகளை ஆரம்பித்திருந்தனர். சமாதானத்துக்கான அமைதிப்படையில் சீக்கியர்கள், குஜராத்தியர், கேரளத்தவர், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பல மாநிலத்தவர்களும் அடங்கியிருந்தனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதிப்படையினர் நிலைகொண்டபோது தமிழ்மக்களில் பெரும்பாலானோர் மகிழ்ச்சியடைந்தனர். இந்திய அமைதிப்படையினர் தமிழ்ப்பிரதேசங்களில் நிறுத்தப்பட்டி ருந்ததனால் தமது பாதுகாப்புக் குறித்துக் தமிழ் மக்களுக்கு ஓரளவு ஆறுதலாகவுமிருந்தது.

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள், அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது இலங்கைப் படையினரால் நூற்றுக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டும், பல தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டும் கொண்டிருந்தன.

### கிழக்கு மக்கள் மீதான இலங்கைப் படையினரது அட்டூழியங்கள்

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த தமிழர்கள் நிம்மதியிழந்து மரண அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ வேண்டிய நிலைக்கு ஆளாகினர். பல பாரம்பரிய தமிழ்க்கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் இலங்கைப் படையினரால் அடித்துத் துரத்தப்பட்டனர். கிழக்கு மாகாணத்திலிருந்து அகதிகளாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் வெளியேறினர்.

இதன் காரணமாக அந்தவேளையில், தமிழ் மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியது. இந்தியப்படைகள் தமிழ் மக்களின் காவலர்களாக வந்ததையடுத்து, அகதிகளாக வெளியேறிய கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் இந்திய அமைதிப்படைகளை நம்பி மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருந்தனர். ஆனால் தமிழர்களின் நிம்மதி நீடிக்கவில்லை. இந்திய அமைதிப்படையினர் அதனை விரும்பியிருக்கவு மில்லை.

தியாகதீபம் திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் சாகும்வரை உணவு ஒறுப்பில் ஈடுபட்டு உயிர் துறந்ததைத் தொடர்ந்து இந்தியப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையில் முறுகல் நிலை அதிகரித்துக் காணப்பட்டது. தமிழ் மக்களின் அச்சமும் பலமடங்காகியது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்திய அமைதிப்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையே மோதல் ஆரம்பமாகியது. அமைதியை நிலைநாட்ட வந்த இந்தியப்படையினர் தங்களது அராஜக நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். இரண்டு தரப்பினர்களுக்கும் இடையில் தொடர்ந்து இடம்பெற்ற மோதல்களில் அப்பாவித் தமிழர்கள் பலர் படுகொலைசெய்யப்பட்டனர். காரணமே இல்லாமல் தமிழர்களின் உயிர்கள் இந்தியப் படையினரால் பறிக்கப்பட்டன. பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர். அந்தக் கால கட்டத்தில் சுமார் இரண்டாயிரம் தமிழ் மக்கள் வரையில் இந்தியப்படையினரால் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### இந்திய அமைதிப் படையினருக்கு எதிராக அன்னையர் முன்னணி அகிம்சை வழிப்போராட்டம்

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படையினருக்கும் 1987, 1988ஆம் ஆண்டுக்காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த இரண்டாவது ஈழப் போரின்போது, இந்திய அமைதிப் படையினருக்கு எதிராக உரத்துக் குரல் கொடுப்பதற்கும் தொடர்ச்சியான அறப்போராட்டங்களை நடத்துவதற்கும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அன்னை யர் முன்னணி முடிவு செய்திருந்தது.

இந்திய அமைதிப்படையினரின் அட்டூழியங்கள் கட்டுக்கடங்காமல் போகவே, பல பெண்கள் அறவழியில் போராடுவதற்கான முடிவை எடுத்திருந்தனர். இந்தியப்படையினர் தமிழ் மக்கள் மீது தொடுத்த போரை நிறுத்துமாறு கோரி, உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அன்னையர் முன்னணி ஆயத்தமான வேளையில், 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பத்தாம் திகதி அன்னையர் முன்னணியினரை அழைத்து இந்திய அமைதிப் படை உயர் அதிகாரிகள் பேச்சுக்களை மேற்கொண்டபோதிலும் அதில் இணக்கப்பாடெதுவும் எட்டப்படவில்லை.

அன்றைய பேச்சுக்களால் எந்தவிதமான பயனும் ஏற்படாமல் போகவே, சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கடைப்பிடிப்பது என்ற முடிவை அன்னையர் முன்னணி எடுத்தபோது இந்தப் போராட்டத்தில் யார் பங்கேற்பது? என்ற தெரிவை குலுக்கல் முறை மூலம் மேற்கொண்டபோது உணவு ஒறுப்புப் போராட்டத்தில் பங்கு கொள்ள அனனம்மா டேவிட் என்ற பெண்ணே தெரிவு செய்யப்பட்டார்.

சாகும் வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் ஆலய முன்றலில் 1988 பெப்ரவரி 14 ஆம் திகதி டேவிட் அன்னம்மா என்ற அந்தப்பெண்மணி ஆரம்பித்தபோது, இந்தியப்படையினர் அவரைத் தொடர்ந்து உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொள்ள விடாது கடத்திச் சென்றனர்.

டேவிட் அன்னம்மாவினால் தனது போராட்டத்தைத் தொடர முடியவில்லை. சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு அன்னையர் முன்னணிக்குப் பல நெருக்கடிகளை இந்தியப் படையினர் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

டேவிட் அன்னம்மா கடத்தப்பட்டவுடன் மற்றொரு அன்னையான பூபதி தனது உணவு ஒறுப்புப் போராட்டத்தை 1988 மார்ச் 19ஆம் திகதியன்று உறுதியான மனத்திடத்துடன் ஆரம்பித்தார். போராட்டத்தில் அவர் குதிப்பதற்கு முன்னர் முன் எச்சரிக்கையாக, “சுயவிருப்போடு உணவு ஒறுப்பில் ஈடுபடுகிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் சேர்க்கக் கூடாது” என்று கடிதமெழுதிக் கையெழுத்திட்டதோடு, இந்தியப் படையினர் உடனடியாக எந்தவித நிபந்தனையுமின்றி சண்டையை நிறுத்த வேண்டும். புலிகளுடன் பேச்சுக்களை நடத்தித் தீர்வு காணவேண்டும். என்ற இரண்டு கோரிக்கையை முன்வைத்து தனது உணவு ஒறுப்புப் போராட்டத்தை தொடங்கினார்.

1988 ஆம் ஆண்டுக்கு முன்னர் அன்னை பூபதி தனது இரண்டு பிள்ளைகளை இலங்கைப்படையினர் சுட்டுக் கொன்ற தாக்கத்திலிருந்து மீள முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்தவர். தமிழினத்தின் உரிமைகளுக்காக தன்னால் முடிந்த பணியாகக் கருதியே உணவு ஒறுப்புப் போராட்டத்தில் குதித்தார்.

### அமைதிப் படையால் கண்டுகொள்ளப்படாத உணவு ஒறுப்புப் போராட்டம்

1988 மார்ச் மாதம் 19ஆம் திகதியன்று அவர் ஆரம்பித்திருந்த உணவு ஒறுப்புப் போராட்டத்தை இந்திய அரசு கண்டுகொள்ளவேயில்லை. அன்னை பூபதியும் தனது உறுதியான நிலைப்பாட்டிலிருந்து விலகாதிருந்தார். அன்னை பூபதி நீர் மட்டுமே அருந்தி உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தார்.

ஏப்ரல்மாதம் 19 ஆம் திகதி காலைப் பொழுது விடிகின்றது. என்றுமில்லாதவாறு மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயில் பகுதி ஒரு வித சோகம் சூழ்ந்து பரபரப்பாகின்றது. மக்களும் நேரம் செல்லச் செல்ல அன்னைபூபதியின் போராட்ட மேடையைச் சுற்றி கவலையுடன் குழுமி நிற்கின்றனர். அன்னை பூபதியின் உடல் நிலை குறித்ததான சோகம் கிராமம் முழுவதும் வெகுவேகமாகப் பரவியது.

தாம் வரித்த கொள்கையினின்றும் பின்வாங்காத அன்னைபூபதி அன்றைய தினமே அதாவது 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதியன்று தனது உயிரைத்துறந்து மீளாத்துயிலில் ஆழ்ந்தார்.

தியாகத்தின் உருவமான அன்னைபூபதி தமிழினத்துக்காக உழைத்து உயிர்நீத்து இன்று 29 ஆண்டுகளாகி விட்டன.

ஒரு பெண்ணாக, தாயாக, ஓர் இல்லத்தரிசியாக மட்டுமன்றி, இவற்றையெல்லாம் கடந்து தனது தேசத்தின் விடுதலைக்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த ஓர் தியாக வரலாற்றின் பதிவாகிய அன்னை பூபதி, தமிழர்களின் நெஞ்சங்களில் என்றும் நிறைவாக நிலைத்து நிற்பார்.



## வாசகர் திருமுகம்

### வேற்றுமைகளை மறந்து சகோதரத்துவத்துடன் வாழ்வோம்

தென்பகுதியைச் சேர்ந்தவரும், தற்போது யாழ்ப்பாணத்தில் பணிபுரிபவருமான பொலிஸ் அதிகாரி ஒருவருடன் உரையாடக் கூடிய சந்தர்ப்பம் ஒன்று புதுவருடத்துக்கு முந்தியதினம் எனக்குக் கிடைத்தது. இதில், மலர்ந்துள்ள புதுவருடம் தொடர்பாக அவர் கூறிய சில கருத்துக்கள் சிந்தனைக்குரியனவாக அமைந்திருந்தன.

தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து புதுவருடத்தைக் கொண்டாடுகின்றோம்.

புத்தபெருமான் கூட ஒரு இந்துவாகப் பிறந்து, பின்னர்தான் புத்த மதத்தை உருவாக்கினார். தமிழர்கள் கணபதி என்ற பெயரில் வணங்குகின்ற விநாயகரைச் சிங்கள மக்கள் 'கணதெய்யோ' என அழைத்து வணங்குகின்றனர்.

இவ்வாறு பல சிந்தனைக்குரிய கருத்துக்களை அவர் தெரிவித்தார்.

இனவாதிகள் இந்தக் கருத்தை மனதில் கொள்ள வேண்டும்.

மொழியால் வேறுபட்ட போதிலும் பல விடயங்களில் ஒன்றுபட்டுக் காணப்படுகின்ற சிங்களவர்களும், தமிழர்களும் வேற்றுமைகளை மறந்து சகோதரத்துவத்துடன் ஒன்றுபடும்போதுதான் இந்த நாட்டில் நிரந்தரமான அமைதியும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

தமது சுயநலத்துக்காகச் சில அரசியல்வாதிகள் இந்த இரண்டு இனங்களுக்குமிடையில் வேற்றுமையை விதைத்து அதில் குளிர் காய்கின்றனர். இதற்கு மக்களும் பலியாகிவிடுகின்றனர். ஆனால் மக்கள் உண்மையை உணர்ந்து இந்தப் போலி வேடதாரிகளை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். மக்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடும் போது இனவாதிகள் ஓடி ஒளிய நேரிடும். சுமார் 70 ஆண்டு காலம் நாம் முரண்பட்டு வாழ்ந்தமை போதும். இனியாவது உண்மையை உணர்ந்து இனங்கள் ஒன்றுபடுவதும் சகோதர உணர்வுடன் வாழ்வதுமே அனைவருக்கும் நன்மை பயக்கும், என்ற அவரது சிந்தனை வெறும் உதட்டளவிலிருந்து வெளிவந்தவையல்ல. அடி மனதிலிருந்து வெளியானவை என என்னால் நம்ப முடிகிறது.

இத்தகைய மனமாற்றம் இனவாதிகளிடமும் உருவாகுமானால் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிட்டக்கூடும். அந்த நாள் உருவாகுமா?

*மா. ஸ்ரீஸ்கந்தராசா*
*புலோலி*



3

# சங்க இலக்கியத்தில் தோழி

எஸ்.மல்லிகா

தலைவன்-தலைவியர் காதல் வாழ்வில் நேரிடும் துயர்களைக் களைந்து, அவர்கள் இணைவுக்குப் பெருந்துணை நல்கும் பாத்திரமாகத் தோழியைக் காண்பிக்கின்றன சங்க இலக்கியங்கள். இத்தகைய துயரை அனுபவிக்கும் தலைவி ஒருத்தியின் காதல் வாழ்வில், இற்செறிப்பு (வீட்டுக் காவல்) கடுமையாக்கப்படுகிறது. தலைவியின் காதல் திருமணத்துக்கு, அவளது வீட்டில் மறுப்புத் தெரிவிக்கப்படுகிறது. அவளை வேறொரு ஆடவனுக்கு மண முடித்து வைப்பதற்குப் பெற்றோர்கள் முற்படுகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில், அறவழி நின்று அவர்களின் உடன்போக்குக்கு (பெற்றோர் சம்மதமின்றி இருவரும் ஓடிச்சென்று மண முடித்தல்) துணிந்து துணை நிற்கின்றாள் தோழி.

"நீர்கால் யாத்த நிறையிதழ்க் குவளை
கோடை யொற்றினும் வடாதாகும்
கவணை யன்ன பூட்டுப் பொரு தசாஅ
உமணெருத் தொழுகைத் தோடு நிரைத்தன்ன
முனிசினை பிளக்கும் முன்பின் மையின்
யானை கைமடித் துயவும்
கானமும் இனியவாம் நும்மொடு வரினே"

எனும் குறுந்தொகைப் பாடலில் தலைமகள்தன்னுடன் உடன்போக்குக்கு இசைந்தமையை உணர்ந்த தலைவன் தோழியிடம், பாலை நிலத்தின் கொடுமையையும் தலைவியின் மென்மையையும் கூறி நிற்கின்றான். தலைவி உம்முடன் வந்தால், பாலை நிலமும் இனிதேயாகும். உம்மோடு வராவிட்டால், வீடும் அவளுக்கு இன்னாததாகும் என்று குறிப்பால் தலைவி நிலையைத் தலைவனுக்கு உணர்த்தி, அவர்களின் உடன்போக்குக்கு வழியேற்படுத்திக் கொடுக்கிறாள் தோழி.

இங்கே தலைவியின் காதல் நெஞ்சத்தை நன்குணர்ந்த தோழியின் திறன் பாராட்டத் தக்கது.

இதேபோன்று, தலைவி ஒருத்தியை தலைவன் பிரிந்து சென்றமையால் ஆற்றாமை மீதூரப் பெற்ற தலைவி, தன் நிலையைத் தோழியிடம் எடுத்துரைக்கிறாள். "யாம் வாடக் காடு கடந்து செல்வம் தேடச் சென்றவர், முன் தாம் சொன்ன பிரியலம் என்ற உறுதிச் சொல்லையும் மறந்து பொய்த்தனரே" எனக்கூறி வருந்துகிறாள்.

"பிரியலம் என்ற சொல் தாம் மறந்தனர் கொல்லோ தோழி" என்ற அகநானூற்றுப் பாடல், தலைவியின் வேதனை மிகுதியைப் புலப்படுத்துகின்றது. "பகிர்ந்து கொள்ளப்படும் இன்பம் இரட்டிப்பாகும், துன்பம் பாதியாகும்" என்ற கூற்றுக்கிணங்கத் தன் இன்ப, துன்பங்களைத் தலைவி தோழியிடம் எடுத்துரைக்கும் போது, அவற்றைச் செவிமெடுத்துக் கேட்கும் பண்பினளாகத் தோழி விளங்குகின்றாள். இத்தகைய சிறப்பு வாய்ந்த தோழி, தலைவியின் காமப் புதுமையைக் காது கொடுத்துக் கேட்பவளாக இருப்பதைச் சங்க அக இலக்கியங்கள் பதிவாக்கியுள்ளன.

கூடிக் களித்தபின் தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவுத் துயரால் வாடுகின்ற போது, பருவ காலத்தைக் காட்டித் தோழி அவளை ஆற்றுவிப்பதைச் சங்க அக இலக்கியங்களில் காணலாம். கலித்தொகையில் தலைவன் வராமை கண்டு ஆற்றாத தலைவி தோழியை நோக்கி, "நங்காய் நமக்கு அருள்செய்ய வேண்டுவதாகிய இந்நாள் தலைவர் வந்திலர்" எனக்கூறி வருந்துகிறாள். இதனைக் கேட்ட தோழி, தலைவர் வருகிறார் என்பதனை முன்னறிவிக்கவே இளவேனில் காலம் தூதாய் வந்திருக்கிறது என நுட்பமாகக் கூறி அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். தலைவியின் துயரைத் தன் துயர் போல எண்ணிச் செயற்படுகின்றாள்.

இத்தகைய தலைவன் தலைவியர் இல்லற வாழ்வில் இணைந்ததும் அவர்களின் கடமைகள் பற்றித் தோழி பாங்குடன் எடுத்துரைப்பாள். தலைவியின் பேறு காலத்திலும் உடனிருந்து கவனிப்பாள். இந்தக் காலத்திலும் ஏனைய பிரிவுக் காலங்களிலும் தலைவன், பரத்தையர் வீடு நாடிச் செல்வதாகச் சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. இதனைத் தோழி கண்டித்து, தலைவனை மீண்டும் தலைவியுடன் இணைத்து வைக்கும் கைங்கரியத்தைச் சங்க அக இலக்கியங்களில் காணலாம்.

ஐங்குறுநூறு இலக்கியத்தில் ஒரு பதிவு. தலைவியைப் பிரிந்து, பல நாட்களாகப் பரத்தையர் வீட்டில் சுகித்திருந்த தலைவன், மீண்டும் தலைவியை நாடி வாயில் வேண்டி (வீட்டுக்கு உள்ளே அனுமதிக்குமாறு) நிற்கிறான். அவ்வாறு வந்த தலைவனைத் தோழி இடித்துரைத்துத் தெருட்டுகிறாள் (அறிவுறுத்துதல்/ மனதைத் தெளிவித்தல்/ஊடல் தீர்த்தல்). அப்பாடல் வருமாறு

"தீம் பெரும் பொய்கை ஆமை இளம் பார்ப்புத்
தாய்முகம் நோக்கி வளர்ந்திசின் ஆங்கு
அதுவே யைய நின் மார்பே
அறிந்தனை யொழுகுமதி அறனுமார் அதுவே"

பொய்கையின் கண் காணப்படும் ஆமையின் இளம் பார்ப்புக்கள் (குஞ்சுகள்) தம் தாய் தம்மைப் பாதுகாக்காது விடினும், தாம் அதன் முகம் நோக்கி வளர்ந்தது போல இவள் நீ நல்காயாயினும் (வழங்காயா யினும்) உன் மார்பினையே நோக்கி வாழும் இயல்புடையவள். நீ அதனை அறிந்து ஒழுகுவாயாக அறனும் அதுவே" என்று தெருட்டுவதன் மூலம் அறத்தை நிலைநாட்டுகிறாள் தோழி.

(தொடரும்)

> தலைவன்-தலைவியர் இல்லற வாழ்வில் இணைந்ததும் அவர்களின் கடமைகள் பற்றித் தோழி பாங்குடன் எடுத்துரைப்பாள். தலைவியின் பேறு காலத்திலும் உடனிருந்து கவனிப்பாள். இந்தக் காலத்திலும் ஏனைய பிரிவுக் காலங்களிலும் தலைவன், பரத்தையர் வீடு நாடிச் செல்வதாகச் சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன.



## மக்களின் பேரிடர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த

## மூத்த ஊடகவியலாளர் கதிர்காமத்தம்பி



வடக்கில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஊடகப் பணியாற்றி மறைந்த பெரியார் செல்லையா கதிர்காமத்தம்பி.

வடக்கு யாழ். வன்னியில் போர் உச்சமாக இடம்பெற்று மக்கள் பேரிடர்களைச் சந்தித்த வேளையிலும் தமது ஊடகப் பணியூடாகச் செய்திகளை உலகறியச் செய்தவர் அமரர் கதிர்காமத்தம்பி.

பத்திரிகையின் செய்தியாளனாக, பத்திரிகை உதவி ஆசிரியராக, வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவனாக, ஆங்கில ஆசானாக, அதிபராக பன்முகப்புலமையாளனாக இறுதிவரை வலம் வந்தவர் அமரர் கதிர்காமத்தம்பி என்றால் மிகையாகாது.

ஆங்கிலமொழிப்பட்டதாரியான இவர் கொழும்பு ஏரிக்கரை பத்திரிகையின் யாழ். நகர் சிறப்புச் செய்தியாளனாக இருந்து குடாநாட்டுச் செய்திகளை உலகறியச் செய்த பெருந்தகையாளன். அண்மைக்காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த சூழ்நிலையிலும் பத்திரிகைகளின் வளர்ச்சி அபிவிருத்தி பற்றியும் ஊடகவியலாளர்களின் நலன்களை விசாரிப்பதில் தன்னலம்கருதாது செயற்பட்ட ஊடகப் போராளியின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிதியம்





# கல்விக் கௌரவிப்பு விழா

பருத்தித்துறை வியாபாரிமூலை கலைமணி சனசமூக நிலையத்தின் கல்விக் கௌரவிப்பு நிகழ்வு வியாபாரிமூலை நாச்சிமார் ஆலய முன்றலில் கடந்த 14ஆம் திகதி மாலை 4.30மணியளவில் உயர் தொழிநுட்பவியல் நிறுவன முன்னாள் பணிப்பாளர் க.கதிரமலை தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக புளொட் தலைவரும், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணசபை உறுப்பினர் க.தர்மலிங்கம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், பிரதேசசபை செயலாளர் சி.சிறீபாஸ்கரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கணினி விஞ்ஞான மூத்த விரிவுரையாளர் சோ.சுதாகர், இளைப்பாறிய அதிபர் ந.பரமானந்தம், சமாதான நீதிவான் கலாபூசணம் ஏ.என்.எஸ். திருச்செல்வம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக விருந்தினர்கள் கௌரவித்து அழைத்துவரப்பட்டதைத் தொடர்ந்து சிறுவர்களின் கும்மி நடனம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், ஆசியுரை, வரவேற்புரை, தலைமையுரை, விருந்தினர்கள் உரை என்பன இடம்பெற்றன.

தொடர்ந்து கல்வியில் சிறந்த பேறுபேறுகளைப் பெற்ற வடமராட்சி மாணவ, மாணவியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இடையிடையே சிறார்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. தொடர்ந்து பரிசளிப்பு விழா இடம்பெற்று, நன்றியுரையுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவு பெற்றன.








# தமிழ்வேதம் எனக் கருதப்படும் வள்ளுவர் தந்த திருக்குறள்

பூ.நகுலன்

ஒவ்வொருவரும் தமது மொழியில் உள்ள கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி வாழ்தல் வேண்டும். அவ்வாறு வாழா விட்டால் வேறு மொழியில் காணப்படும் கொள்கைகளும் கோட்பாடுகளும் அவர்களது மொழியில் புகுந்து ஆட்சி செலுத்தத் தொடங்கி விடும்.

நாம் தமிழர்கள் எமக்குரிய மொழி தமிழ். எமது கொள்கைகள் கோட்பாடுகளை அறிவிக்கும் இலக்கியங்கள் தமிழ் இலக்கியங்கள். அந்த இலக்கியங்களில் தலையாயது தமிழ் வேதம் என்று அழைக்கப்படும் திருக்குறள். அதன் சிறப்பு உணர்ந்து உலகப் பொதுமறை என்றும் அது அழைக்கப்படுகின்றது.

**முக்கியமான ஐந்து விடயங்கள்**

தற்போது நடைமுறையில் காணப்படுகின்ற முகாமைத்துவக் கோட்பாடுகளில் சிறந்ததாக உள்ள கோட்பாடு 5S கோட்பாடு அல்லது கொள்கை ஆகும். இந்தக் கொள்ளை அல்லது கோட்பாடு சீன நாட்டில் இருந்து எமது நாட்டுக்கு வந்ததாக சொல்லப்படுகின்றது. இந்தக் கோட்பாடு கூறுகின்ற விடயங்களை தமிழ்ப்படுத்தி நோக்கும் போது அவை பின்வரும் ஐந்து விடயங்களாக அமைகின்றன.

1. தேவையில்லாதவற்றை அப்புறப் படுத்தல்.
2. ஒழுங்கு படுத்தல்
3. தரப்படுத்தல்
4. சுத்தப்படுத்தல்
5. சுயஒழுக்கம்

இந்த ஐந்து விடயங்களும் ஆங்கிலச் சொற்கள் என்ற வகையில் 'S' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் சொற்களாக அமைகின்றன. இந்த 'S' எழுத்தில் ஆரம்பிக்கும் ஐந்து விடயங்களை உள்ளடக்கிய கோட்பாடே 5S என அழைக்கப்படுகின்றது.

தமிழர்களது கோட்பாடுகளிடையே அல்லது கொள்கைகளிடையே அல்லது திருக்குறள் இலக்கியத்தில் இந்த ஐந்து விடயங்களைப் பொருத்திப் பார்ப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

"செய்தக்க அல்ல செய்யக் கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

"பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தனிஇனி செயல்"

"தெளிவிதனைத் தொடங்காள் இனிவென்றும்
ஏதும்பாடு அஞ்சுபவர்"

என்ற குறள்கள் தேவையில்லா செயல்களை செய்யக்கூடாது என்பதை வலியுறுத்துவன. அவைகளும் பொருள்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. செய்ய வேண்டிய விடயங்களை செய்யாமல் விடுதல் செய்ய வேண்டாத விடயங்களைச் செய்தல்.

**ஒழுக்கத்தில் ஒழுகுதல்**

தனக்குப் பொருந்தாத ஒழுக்கத்தில் ஒழுகுதல். தனக்குத் தெளிவில்லாத ஒரு விடயத்தை செய்தல் கூடாது என்பதை இந்தக் குறள்களின் பொருள் எடுத்துரைப்பதைக் காணலாம். இவை முதலாவது 'S' கொள்கையை தேவையில்லாத விடயங்களை அப்புறப்படுத்துதல் என்பதை விளக்கி நிற்பதைக் காணலாம்.

தெரிந்து செய்... என்ற அதிகாரத்தில் இடம்பெறும் அழிவதும் ஆவதும் ஆசி வழி பயக்கும் ஊதியரும் சூழ்ந்து செயல்"

எண்ணித் துணி கருமம் துணிந்தபின் எண்ணுலகம் என்பது இருக்கு'

என்ற குறட்பாக்களின் பொருளைக் கண்டறிந்தால் அவை ஒரு செயலால் வருகின்ற ஆக்கத்தையும் அழிவையும் பார்த்து செயலை செய்ய வேண்டும். ஒரு செயலை செய்யத் தகுந்த செயல் இது என்று கருதி அதனை செய்வோம் என எண்ணுதல் கூடாது என்கின்ற பொருளைத் தருகின்றமையைக் காணலாம்.




இந்தக் குறட்பாக்களின் கருத்துக்கள் ஒரு செயலை ஒழுங்குபடுத்தி செய்ய வேண்டும் என்கின்ற 2ஆவது S ஐ உணர்த்துவதைக் காணலாம்.

கல்வியறிதல். காலமறிதல். இடமறிதல் அதிகாரங்களில் வருகின்ற குறட்பாக்கள் செயலைத் தரப்படுத்தி செய்ய வேண்டிய அவசியத்தை விளக்கிக் கூறுகிறது.

"வினை வலியும் தனிவலியும் மாற்றான் வலியும்
துணை வலியும் தூக்கிச் செய்ய"

"காலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்"

என்ற குறட்பாக்களின் கருத்துக்கள் ஒரு செயலைச் செய்பவன் தான் செய்யும் செயலின் வலிமை தனக்கு துணையானவர்கள் வலிமை பகைவர் வலிமை ஆகியவற்றைப் பார்த்து செய்ய வேண்டும். காலமறிந்து செய்யப்படுகின்ற செயல்கள் வெற்றியைத் தரும் ஒரு செயலை செய்து முடிக்க வேண்டும். ஆயினும் அது யாரால் முடியும் என்பதை ஆராய்ந்து அவன் இடத்தில் அந்தச் செயலை ஒப்படைத்தால் அந்தச் செயல் முடிவடையும் என்கின்ற கருத்துக்களைத் தருகின்றன. இவை மூன்றாவது s ஆகிய தரப்படுத்தல் என்கின்ற கோட்பாட்டில் அமைவதைக் காணலாம்.

**வள்ளுவத்தில் சுத்தம்**

நான்காவது s என்று அழைக்கப்படுவது 'சுத்தம்' சுத்தப்படுத்தல். வள்ளுவர் இந்த ஒரு விடயத்தை இரு வகையான சுத்தமாகப் பிரித்து ஒரு குறளில் விளக்கியுள்ளார். வாய்மை என்கின்ற அதிகாரத்தில் இடம்பெறுகின்ற அந்த குறள் ஒன்றே இந்தக் கோட்பாட்டை விளக்கப் போதுமானது.

"புறந் தூய்மை நீரால் அமையும் அகத் தூய்மை
வாய்மையால் காணப்படும்"

என்பது அந்தக் குறள் ஆகும். ஒருவனுக்கு உடம்பில் தூய்மை புறவயமானது. அந்தத் தூய்மையானது நீரினால் உண்டாகும் (தண்ணீர்) அகத்தின் தூய்மை உள்ளத்தில் தூய்மையானது அவன் சொல்கின்ற 'உண்மை அல்லது வாய்மையினால் ஏற்படும் என்பதை வள்ளுவர் குறிப்பிடுவதைக் காணலாம். சுத்தப்படுத்தல் என்கின்ற நான்காவது s கோட்பாடு பற்றிய வள்ளுவரின் விளக்கம் இவ்வாறு அமைதலைக் காணலாம்.

இறுதியாகக் கூறப்படுகின்ற ஒழுக்கம் என்கின்ற s கோட்பாடு சுய ஒழுக்கத்தைக் கூறுகின்றது. வள்ளுவர் ஒழுக்கம் உடைமை என்கின்ற ஒரு தனி அதிகாரத்தையே தனது நூலில் அமைத்துத் தந்துள்ளார் என்றும் நூல் முழுமையும் ஒழுக்கத்தையே பேசுவதையும் காண முடிகிறது.

'ஒழுக்கத்தின் எய்துவளி மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி" என்கின்ற வள்ளுவரின் குறள் ஒழுக்கத்தின் மேன்மையை வலியுறுத்துவதைக் காணலாம்.

இந்த வகையில் உலகப் பொது மறையாகிய திருக்குறளில் 5s கோட்பாடுகளும் உள்ளடங்கியிருப்பதைக் காணலாம். எதிர்வரும் காலங்களில் 5s, 6s, 7s ஆக மாறலாம். அவற்றின் பொருள்களும் விடயங்களும் திருக்குறளில் உள்ளடங்கியிருக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே எமது மொழியில் இலக்கியங்கள் கோட்பாடுகளை முழுமையாக நாம் அறிந்து பின்பற்றுவோமாக இருந்தால் எம்மை எந்த வித கோட்பாடுகளும் வந்து அணுகாது.

**தெரிந்து செய்... என்ற அதிகாரத்தில் இடம்பெறும் அழிவதும் ஆவதும் ஆசி வழி பயக்கும் ஊதியரும் சூழ்ந்து செயல் எண்ணித் துணி கருமம் துணிந்தபின் எண்ணுலகம் என்பது இருக்கு என்ற குறட்பாக்களின் பொருளைக் கண்டறிந்தால் அவை ஒரு செயலால் வருகின்ற ஆக்கத்தையும் அழிவையும் பார்த்து செயலைச் செய்ய வேண்டும்.**

*கட்டுரையாளர்-ஆசிரியர்*
*யூனியன் கல்லூரி*

# பாடிப்பறந்த குயில்களைத் தேடிப்பிடித்த முயற்சியே

## முருகுவின் அர்ப்பணமாகிறது



கே.எஸ்.சிவஞானராஜா

காலத்தின் தேவையை ஞாலத்தின் விழுமியமாகத் தலை மேற் கொண்டு எதிர்காலச் சந்ததிக்கு ஏற்ற கலைப் பொங்கிசமாகப் பாடிப்பறந்த நாத கான இசைக்குயில்களைத் தேடியும், நாடியும், ஓடியும், வாடி நின்று சேகரித்தும், தொகுத்தும் பேறாக்கிய 98 இசைக்கலைஞர்களின் ஆளுமைக் கருவூலங்களே "பாடிப் பறந்த குயில்கள்" என்ற ச.முருகையாவின் காத்திரமான நூலாகும். கவிஞர் முருகுவின் அற்புதமான இப்படைப்பானது காலந்தோறும் நின்று மாணவர்களை கரைசேர்க்க வல்லதாகும். தமிழர் தம் பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கும் இந்த நூலில் அமரத்துவம் அடைந்த தொண்ணூற்றெட்டுக் கலைஞர்களது அறிமுகம், தோற்றம்,குரு, சீடர் பாங்கு,கல்வி, குருகுலவாசம், இசைப்பயிற்சி, நியமனம், கடமை, சமூகப்பணி, இசைப்பணி, அனுபவம், சாதனை, பட்டங்கள், பதவிகள், கௌரவ விருதுகள், அமரத்துவம், சந்ததி... ஆகிய பல இசைக் குறிப்புக்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளன. இது ஒரு இலேசான விடயமல்ல. இறைவனின் அனுக்கிரகம் இல்லாமல் பாடிப்பறந்த குயில்களைத் தேடிக் கண்டு பிடிப்பது என்பது அசாத்தியமே. எனவே கவிஞர் முருகுவின் (முருகையாவின்) இம் முயற்சியானது ஆயிரம் காலத்துப் பயிராக நின்று அறுவடை தரும் என்பது திண்ணமே. கற்போருக்கு முந்நூற்றைம்பது ரூபா ஒரு பெரிய விடயமல்ல.

**உள்ளடக்கம்**

303 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் வாய்ப்பாட்டுக்கலைஞர்கள் 34 பேரும், வயலின் கலைஞர்கள் 15 பேரும், வீணைக் கலைஞர்கள் 2பேரும்,. தவில் நாதஸ்வரக்கலைஞர்கள் 3பேரும், பரதக் கலைஞர்கள் 2பேரும், ஆர்மோனியக் கலைஞர்கள் 2பேரும், ஏனைய சிறப்புக் கலைஞர்கள் 40 பேரும் மொத்தமாக 98 கலைஞர்கள் இந்த நூலில் கோலோச்சுகிறார்கள். இவர்களில் ஆறுகலைப்பிரவாகங்கள் தேன்சொட்டும் நாதப் பிரம்மாக்கள் ஆவர். அவர்களை இங்கு ஒரு கணமாவது சிந்திப்பது ஆனந்தம் பயக்கும்.

1. லய ஞான குபேரபூபதி வி.தெட்சணாமூர்த்தி
2. இசைப்புலவர் ந.சண்முகரத்தினம்
3. நாதஸ்வர கலாநிதி என்.கே.பத்மநாதன்
4. மகாவித்துவான் ந.வீரமணி ஐயர்
5. சங்கீதபூசணம் எல்.திலகநாயகம் போல்
6. நாதஸ்வர கலாநிதி மு.பஞ்சாபிகேசன்

ஆகிய ஆறு பேறுடைய கலைஞர்களும் யாழ்ப்பாண முத்துக்கள் தான். கவிஞர் முருகு சரியான ஒரு பாதையில் பயணிக்க வைத்துள்ளார். பாடிப்பறந்த குயில்கள் ஒன்றுமே காணாமல் போகவில்லை. யாவும்சொந்த இடத்துக்கேதிரும்பி விட்டன. இது ஒரு பெரிய ஆறுதலே!

**அற்புதம்**

லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்தியின் தவிலிலிருந்து எழுகின்ற நாத ஒலிகளுக்கு வீரமணி ஐயா வின் பேனா எழுதிய கவிதைத் துளிகள் இதோ!

"கடலலைகள் குமுறுமொலி
காதில் விழும் ஒருக்கால்
கடகடென இடியோசை
கனத்து விழும் ஒருக்கால்

படபடவெனப் பட்டாசு
வெடித்தவொலி ஒருக்கால்
பால் நிலவில் காதலர்கள்
பேசும் ஒலி ஒருக்கால்

சடசடெனப் பூகம்பம்
சரியுமொலி ஒருக்கரீல்
சளசளென மழைவீழ்ந்து
சொரியுமொலி ஒருக்கால்
சலசலென அருவியது
பாயுமொலி ஒருக்கால்
சந்தடியிலாது புலி
பதுங்கு மொலி ஒருக்கால்

ஆம் முருகு தேடியெடுத்த பொக்கிசம் இது. இப்படி ஏராளமான அதிசயங்களைப் புலப்படுத்தும் இந்த நூலுக்குப் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் உளசமூக சீராளன் செ.யோசப்பாலா வழங்கிய கவின் தரு உரைகள் மிகமிகப் பெறுமதியானவையே!

ES Printers

GRAPHIC design

Poster | Notice | Lable | Wedding Card | Bag Print | Award | Frame Item | Batch | Vehicle Brand | T-Shirt | Cap | ID Card | Key Tag | Book Mark | Pen Print | Book Printing | Woodent Print



சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.



357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

# அரசின் அலட்சியமே மீதொட்டமுல்ல பேரிடருக்குக் காரணம்

ஆர்.சனத்

கண்களுக்குக் குளிர்ச்சிதரும் வகையில் பச்சைப்பசேலென புற்தரையும், சுத்தமான காற்றை வழங்கக்கூடிய வகையிலான இயற்கை சூழலுமிக்க பகுதியாகவே கொழும்பு, கொலன்னாவ, மீதொட்டமுல்ல கிராமம் இற்றைக்கு 30 வருடங்களுக்கு முன்னர் காட்சியளித்தது. ஆனால், காலப்போக்கில் குப்பைகள் கொட்டப்படும் இடமாக அது மாற்றப்பட்டது. பின்னர் சுமார் 20 ஏக்கரில் குப்பை மலையொன்றே உருவாகும் வகையில் கழிவுகள் கொட்டப்பட்டன. அந்தக் குப்பைமேடுதான் இன்று சரிந்துவிழுந்து மக்களின் வாழ்வில் ஊழித்தாண்டவமாடி உயிர் குடித்துள்ளது.

"எங்கள் பிள்ளைகள் துள்ளிக்குதித்து விளையாடிய மண் இன்று மயானபூமியாகிவிட்டதே. குப்பைகளைக் கொட்டாமல் இருந்திருந்தால் பேரழிவு இடம்பெற்றிருக்காது. இன்று எல்லாமே முடிந்துவிட்டது; தொலைந்துவிட்டது; தெரிந்தவர்களெல்லாம் புதைந்துவிட்டனர். எவரிடம் சொல்லி அழுவது" என்று அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த ஆதங்கத்தையும் ஒத்தக்குரலில் வெளிப்படுத்தினார் திருமதி வஸீர். ஆங்கிலப்பாட ஆசிரியையான இவர் மீதொட்டமுல்ல பகுதியில் 30 வருடங்களுக்கு மேலாக வசித்துவருகிறார். தற்போது குடும்பம் சகிதம் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளார்.

முகாமில் தங்கியுள்ள மக்களைச் சந்திப்பதற்காக நாம் சென்றிருந்தோம். கொலன்னாவ பகுதியிலுள்ள வீதியெங்கும் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. மயான அமைதி நிலவுகின்றது. இடம்பெயர்ந்துள்ள மக்களின் முகங்களில் சோகம் குடிகொண்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

உறவுகளையும், உடமைகளையும் இழந்துவிட்டு உயிரைமட்டுமே கையில் பிடித்தபடி தப்பிவந்தவர்கள் தமது உறவுகளைத் தேடி அலையும் காட்சியானது பார்ப்பவர்களைக் கதிகலங்கவைக்கின்றது.

## மண்ணுக்குள் புதைந்த குடும்பங்கள்

"எனது பேரனைத் தவிர ஒட்டுமொத்த குடும்பமுமே மண்ணுக்குள் புதைந்துவிட்டது ஐயா.... இவனுக்காகத்தான் வாழவேண்டியுள்ளது. இல்லையேல் இன்றே தற்கொலை செய்துகொள்வேன்" என கொலன்னாவ குப்பைமேட்டுக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர் கண்ணீர்மல்க தெரிவித்தார். அனர்த்தத்தில் உறவுகளை இழந்தவர்களின் மனநிலை எப்படி இருக்கின்றது என்பதை இவரது கருத்து பிரதிபலிக்கின்றது.

சித்திரைப் புத்தாண்டு என்றாலேயே கொழும்பில் சேரிப்புறங்கள் களைகட்ட ஆரம்பித்துவிடும். புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள், இசைக்கச்சேரிகள் என சந்தோஷத்துக்கும், பரபரப்புக்கும் பஞ்சமில்லாத வகையில் ஏற்பாடுகள் இடம்பெறும். அறுசுவை உணவு, புத்தாடைகள் என அந்தப் பட்டியலை நீடித்துக்கொண்டே போகலாம்.

வழமைபோல் இந்த ஆண்டும் ஏப்ரல் 14ஆம் திகதி மீதொட்டமுல்ல, குப்பைமேட்டைச் சூழவுள்ள பகுதிகளில் வாழும் (தாம்புர தோட்டம்) மூவின மக்களும் புத்தாண்டைக் குதூகலமாகக் கொண்டாடிக்கொண்டிருந்தனர். காலையிலேயே எழுந்து சமய நிகழ்வுகளை நடத்திய பின்னர், உணவுகளை சமைத்து வைத்துவிட்டு, மாலை எங்கு போகலாம்? கோல்பேஸ் செல்வதா, இல்லை படம் பார்க்கப் போவதா எனத் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர்.

## பெரியதொரு வெடிச்சத்தம்

நேரம் சரியா மதியம் 2.45 இருக்கும். திடீரென செவிப்பறைகளைக் கிழிக்கும் வகையில் பாரியதொரு வெடிப்புச்சத்தம் கேட்டுள்ளது. குறித்த பகுதியிலுள்ள ட்ரான்ஸ்போமரில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு இப்படி சத்தம் கேட்குமாம். இதுவும் அந்தச் சத்தமாக இருக்கலாம் என நினைத்த மக்கள் அது குறித்து அலட்டிக்கொள்ளவில்லை. ஓரிரு நிமிடங்களில் தாம்புர தோட்டத்தையே கறுப்புப்புகை சூழத் தொடங்கியுள்ளது. என்றுமில்லாதவாறு துர்நாற்றமும் வீசியுள்ளது. நெருப்பைக் கக்கியபடியே குப்பைமேடு வேகமாகச் சரிந்து வந்துள்ளது.

"ஐயோ தப்பி ஓடுங்கள்... ஓடுங்கள்...." எனக் கூறியபடியே பலர் அலறியடித்துக்கொண்டு வந்துள்ளனர். ஆனாலும், கண்மூடி கண்திறப்பதற்குள் எல்லாமே முடிந்துவிட்டது. குப்பைமேட்டுக்கு அடிவாரத்தில் இருந்த வீடுகள் முழுமையாகப் புதையுண்டன. சற்றுத்தூரத்திலிருந்து வீடுகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது. சம்பவத்தை நேரில் கண்டவர்கள் அதை விவரிக்கும்போது பாரியதொரு அச்சவுணர்வுடனேயே இருக்கின்றனர். பேரதிர்ச்சியிலிருந்து அவர்கள் இன்னும் முழுமையாக மீளவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

"தரையில் இருந்த வீடெல்லாம் மேலே வந்து சென்றது. பாரிய உலுக்கலும் ஏற்பட்டது. தப்பிச் செல்வதற்கும் வழியிருக்கவில்லை. ஐயோ, காப்பாத்துங்கள், காப்பாத்துங்கள் எனப் பலர் மரண ஓலமிட்டனர். எங்களால் எதுவுமே செய்யமுடியவில்லை. இன்று எல்லாமே முடிந்துவிட்டது" என்று கண்ணீர் சிந்தியபடியே பேரவலம் பற்றி விவரித்தார் சம்பவத்தில் உயிர் தப்பிய முதியவர் ஒருவர்.

ஆனால், தனது பெயரைக்கூட அவர் வெளியிடவில்லை. அதைக் கேட்க முற்பட்டபோது எல்லாம் முடிந்துவிட்டது. இனி வாழ்ந்து என்ன பயன்? என சைகை மொழி பேசிவிட்டு இடைத்தங்கல் முகாமுக்குள் நுழைந்துவிட்டார். சம்பவம் பற்றி கருத்து வெளியிடுவதற்குப் பலரும் தயக்கம் காட்டுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அரசியல்வாதிகள் மீதும், ஊடகங்கள் மீதும் மக்கள் கடும் சீற்றத்துடனேயே இருக்கின்றனர். தமது பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கு இவ்விரு தரப்பும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதே அவர்களின் ஆதங்கத்துக்கான காரணமாக இருக்கின்றது.

> *மீட்புப்பணிகள் இடம்பெற்றுவருகின்றன. 1,500இற்கும் மேறபட்ட படையினர் களப்பணியில் இறக்கப்பட்டுள்ளனர். ஆனால், சம்பவம் நடைபெற்ற தினத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் துரிதகதியில் செயற்பட்டிருந்தால் மேலும் பலரைக் காப்பாற்றியிருக்கலாம் என்பதும் பிரதேசவாசிகளின் தர்க்கமாக இருக்கின்றது. சம்பவம் நடைபெற்று சுமார் 4, 5 மணி நேரத்துக்குப் பின்னரே பாரியளவிலான நடவடிக்கை ஆரம்பமானது.*

சம்பவம் நடைபெறும்போது பலரும் வீட்டுக்குள்ளேயே இருந்துள்ளனர். சிலர் தமது உறவினர்கள் சகிதம் மதிய உணவை சந்தோசமாக சுவைத்துக்கொண்டிருந்தனர். மேலும் சிலர் குழுவாகக்கூடி தாயத்து விளையாடிக்கொண்டிருந்தனர். இவர்களெல்லாம் இன்று மண்ணோடு மண்ணாகியுள்ளனர் என்பதுதான் பெரும் கவலையை ஏற்படுத்துகின்றது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையின் பிரகாரம், குப்பைமேடு சரிந்துவிழுந்ததில் 246 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 59 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 29 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர். 30 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 11 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

79 வீடுகள் முழுமையாகவும், 17 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன. 76 குடும்பங்களைச் சேர்ந்த 284 பேர் இடைத்தங்கல் முகாமொன்றில் (டெரன்ஸ் மகா வித்தியாலயம்) தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் அதில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், சுமார் 100 பேர்வரை குப்பைமேட்டுக்குள் புதையுண்டிருக்கலாம் என்று பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

"கிராமசேவகரின் தரவுகள் கிடைக்கவில்லை. பெருநாள் என்பதால் பல வீடுகளுக்கு உறவினர்கள் வந்திருந்தனர். எமது தோட்டத்திலிருந்து பெரிதாக எவரும் வெளியில் சென்றிருக்கவில்லை" என்று பிரதேசவாசியான கவிதா தெரிவித்தார்.

மீட்புப்பணிகள் இடம்பெற்றுவருகின்றன. 1,500இற்கும் மேறபட்ட படையினர் களப்பணியில் இறக்கப்பட்டுள்ளனர். ஆனால், சம்பவம் நடைபெற்ற தினத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் துரிதகதியில் செயற்பட்டிருந்தால் மேலும் பலரைக் காப்பாற்றியிருக்கலாம் என்பதும் பிரதேசவாசிகளின் தர்க்கமாக இருக்கின்றது. சம்பவம் நடைபெற்று சுமார் 4, 5 மணி நேரத்துக்குப் பின்னரே பெருமளவான நடவடிக்கை ஆரம்பமானது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



அத்துடன், கோடிக்கணக்கான அசையும், அசையா சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளன. மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. இறுதி அறிக்கை இன்னும் 3 தினங்களுக்குள் அரசிடம் கையளிக்கப்படும் என உள்துறை அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 5 நாள்களுக்குள் தனக்கு அறிக்கை அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு வழங்கவுள்ள நட்டஈடு

அதேவேளை, அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கும், சொத்து இழப்புகளுக்கும் அரசு நட்டஈடு வழங்கவுள்ளது. உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்படும் என நிதி அமைச்சு கூறியிருந்தாலும், சொத்து இழப்புகளுக்கு வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகை பற்றி இன்னும் உத்தியோகப்பூர்வ தகவல்கள் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"விலைமதிக்க முடியாத சொந்தங்களை இழந்த பின்னர் காசு பணம் எதற்கு?" என சில உறவினர்கள் கவலையுடன் தெரிவிப்பதையும் கேட்கக்கூடியதாக இருக்கின்றது.

"இவர்களை நம்பமுடியாது. எல்லா இடத்திலும் கொமிசன் காரர்கள்தான் இருக்கின்றனர். இறுதிக்கிரியைக்காக வழங்கப்பட்ட சவப்பெட்டிகளும் தரம் குறைந்ததாகவே இருந்தன. கயிறுகட்டிதான் சடலத்தைக் கொண்டுசென்றோம்" என மேலும் சிலர் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, அரசின் அலட்சியப்போக்காலேயே இந்தப் பேரவலம் ஏற்பட்டது என கொலன்னாவ குப்பைமலைக்கு எதிரான மக்கள் இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. கொழும்பு மாநகர சபை, கொலன்னாவ நகரசபை ஆகியவற்றின் குப்பை அரசியல் செயற்பாட்டாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அது சுட்டிக்காட்டுகின்றது.

இந்த சம்பவத்தையடுத்து அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தும் குறித்த அமைப்பின் ஏற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான நுவான் போபகே,

"குறித்த பகுதியில் குப்பைகளைக் கொட்டவேண்டாம் எனவும், அங்குள்ள குப்பைகளை அகற்றுமாறு வலியுறுத்தியுமே 15இற்கும் மேற்பட்ட போராட்டங்களை எமது அமைப்பு நடத்தியுள்ளது; ஆனாலும், தீர்வு கிடைக்கவில்லை. மாறாக, கண்ணீர்ப்புகைக்குண்டுத் தாக்குதலும், பெட்டன் பொல் தாக்குதலுமே நடத்தப்பட்டன. மஹிந்த ஆட்சியிலும், ரணில் மைத்திரி ஆட்சியிலும் இதே அணுகுமுறைதான் கடைப்பிடிக்கப்பட்டது.

அன்று எம்மை பெட்டன் பொல்லுகளால் தாக்கிய இராணுவமும், பொலிஸும் இன்று மக்களின் சடலங்களை எடுப்பதற்காக வந்துள்ளன.

(24ஆம் பக்கம் பார்க்க)

புலவர் வள்ளுவதாசன்

# நுனிப்புல் மேய்வோருக்கு நுண்மை புலனாகாது



“இறைவனாக இருந்தாலும் தமிழில் தமிழ்ப் பாட்டில் வழக்குருக்கக் கூடியது” என்று ஒரு புலவன் வாதிட்டான் என்றால், புலவர்களுக்குத் தமிழ் மொழியில் இருந்த பற்றுறுதி எத்தகையது என்று அளவிடமுடியும். அப்படி அறிஞர்களால் கட்டிக் காத்து வந்த மொழி இன்று சிதைவுண்டு சீர்கெட்டுக்கிடக்கும் நிலை வேதனைக்குரியது. இருந்தும் நீதி நூல்களில் காணப்படும் பிழைகள் ஒரு சமுதாயத்தையே திசை திருப்பக் கூடியது என்றால் அது மிகையன்று. அந்த வகையில் இன்று நடைமுறையிலிருக்கும் (பெருவழக்காக இருக்கும்) சில பாடல்களில் உள்ள தவறுகளால் அச்சுப் பிழைகளோ அல்லது அச்சிட்டவர்களின் கவனக்குறைவால் ஏற்படுகின்ற தவறுகள் காரணமாக ஒரு சமூகத்தின் பழக்க வழக்கங்கள் , கலாசாரத் திரிபுகள், அர்த்தமற்ற செயற்பாடுகள் போன்றவற்றைத் தடுப்பதற்காகவாவது சில திருத்தங்களைச் செய்ய வேண்டியது தமிழ் மொழியில் பற்றுக் கொண்டவர்களின் கடனாகின்றது.

உதாரணத்துக்கு: ஔவைப் பிராட்டியால் இயற்றப்பட்ட ஒரு வெண்பாவை எடுத்துக் கொள்வோம்.

*“சாதி ரெண்டொழிய வேறில்லை. சாற்றுங்கால் நீதி வழலா நெறிமுறையின் மேதினில்*
*இட்டார் பெரியோர் இடாதார்*
*இழிகுலத்தோர் பட்டாங்கிலுள்ளபடி”*

இந்தப் பாடலுக்குப் பொருள் கூறி இருப்பவர்கள் யார் இருந்தும் பொதுவாக இன்றைய ஆசிரியர்கள் இதற்குப் பொருள் விளக்கம் தரும் பொழுது இட்டார் பெரியோர் என்ற வரிக்கு. கொடுத்தவர் பெரியோர் கொடாதார் சிறியோர் என்றே பொருள் விளக்கம் கொடுக்கிறார்கள். ஆனால், இந்தப் பாடலில் உள்ள ஒவ்வொரு சீராக (சொல்லாக) உற்று நோக்குவதில்லை அதனால் ஏற்படும் தவறுகளால் மாணவர்கள் பாட்டின் பொருளைப் பிழையாக விளங்கிக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அதனால் ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகள் மனிதனின் வாழ்க்கைப் பாதையில் பல இடர்பாடுகளை ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது என்பதைத் தான் இங்கு கூற விளைகிறேன்.

மேற்குறிப்பிட்டுள்ள பாட்டில் *“இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்”* என்னும் வரிகளைச் சற்று ஆராய்வோம்.

*“இட்டார் பெரியோர் இடாதார்*
*இழிகுலத்தோர் பட்டாங்கிலுள்ள படி”*

இட்டார் என்பதற்கு மேலெழுந்தவாரியாகக் கொடுத்தவர் என்று பொருள் காண்பது பொருத்தமாகப்படவில்லை. ஏனெனில் இடுதல் என்னும் சொல்லுக்குக் கொடுப்பது என்ற பொருள் மட்டும் இல்லை வேறு பொருளும் உண்டு. இட்டுச் செல்வது என்ற பொருளுமுண்டு. எனவே இட்டுச் செல்வது எதை என்ற கேள்வி எழுந்தால் வாழ்க்கையை இட்டுச் செல்வது என்று பொருள் கொள்ளலாம். “பட்டாங்கிலுள்ள படி” என்ற இறுதி அடியை எடுத்துக் கொண்டால், நீதி நூல்களில் கூறப்பட்டதுபோல என்ற பொருள்தெளிவாகும். ஆக, “இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி” என்பதன் பொருள் நீதி நூல்களில் கூறியதுபோல் தன்னுடைய வாழ்க்கையை இட்டுச் செல்பவர் பெரியோர் அதற்கு மாறாக ஒழுகுபவர் இழிகுலத்தோர் என்று பொருள் கொள்ளவேண்டும்.

*“நுனிப்புல் மேய்வார்க்கு நுண்மை புலனாகாது”* என்று ஒரு தமிழறிஞர் சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது. அந்த வகையில் தமிழ் இலக்கியங்களிலும் நீதி நூல்களிலுமுள்ள நல்ல கருத்துக்களைப் பிழையான வழியில் பயன்படுத்துவதால் ஏற்படும் இடர்பாடுகளைக் களைவதற்காகவாவது இது போன்ற கருத்து வேறுபாடுகள் உற்று நோக்கப்படவேண்டும் என்பதே எமது பேரவா.

*“எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு”*

BAJAJ
MOTORCYCLES

பஜாஜ் புத்தாண்டு
ட்ரிபிள் இலாபம்
Backpack ஒன்றும் ஜெக்கட் ஒன்றும் ஹெல்மட் ஒன்றும்
இலவசம்



தரச்சான்றிதழ் உடன்

எந்தவொரு பஜாஜ் பல்சர் மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்யும்போதும் பெறுமதிமிக்க Backpack ஒன்றையும், ஜெக்கட் ஒன்றையும், பல்சர் பவர் ஹெல்மட் ஒன்றையும், இலவசமாகப் பெற்றிடுங்கள். அதேபோன்று வேறு எந்தவொரு பஜாஜ் மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்யும்போதும் பெறுமதிமிக்க Backpack ஒன்றையும், ஜெக்கட் ஒன்றையும், பஜாஜ் ஹெல்மட் ஒன்றையும், இலவசமாகப் பெற்றிடுங்கள்.
இக் கொடுப்பனவு 2017 ஏப்ரல் 2 முதல் 30 வரை மட்டுமே.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவிலக்கம். PB270
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02 011-4700600 011-4700677 info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

# மனிதர்களால்

## உருவாக்கப்பட்டதுதான் மீதொட்டமுல்ல பேரிடர்

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொலன்னாவயில் குப்பையை வைத்தும் அரசியலே நடத்தப்படுகின்றது. கொழும்பு மாநகர சபையும், கொலன்னாவ நகர சபையும் குறித்த குப்பைமேட்டால் பெரிய ளவு நிதியைத் திரட்டித் தமது சகாக்களுடன் பங்கு போட்டுக்கொண்டுள்ளன.

2015 பெப்ரவரி மாதம் பேச்சுக்கு அழைத்த தலைமை அமைச்சர் ஆறு மாதங்களுக்குள் தீர்வு வழங்கப்படும் என உறுதியளித்தார். பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் எம்மை மறந்துவிட்டார். 5 வருடங்களுக்கும் மேலாகப் போராட்டம் நடத்தியும் தீர்வு கிட்டவில்லை. எமது பிரச்சினை குறித்து ஆராயப்படவுமில்லை.







**குடியிருப்பில் கொட்டப்பட்ட குப்பைகள்**

குப்பை இருந்த இடத்தில் நாம் குடியேறவில்லை. நாம் இருந்த இடத்திலேயே குப்பை கொட்டப்பட்டது. நாம் எங்குதான் செல்வது? அரனாயக்க போன்று திடீரென நடந்த சம்பவம் அல்ல இது. பல வருடங்கள் சுட்டிக்காட்டியும் நடவடிக்கை இல்லை. எனவே, இதை மனிதப் படுகொலையாகக் கருதி அரச தலைவர், தலைமை அமைச்சர், முன்னாள் அரச தலைவர், கோட்டாபய ராஜபக்ச ஆகியோரைக் கைது செய்து மரணதண்டனை வழங்க வேண்டும். அத்துடன், அரசு உடன் பதவி விலகவேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், குப்பைமேடு ஏன் சரிந்து விழுந்தது என்பது தொடர்பில் அரசு ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது. காரணத்தைக் கண்டறிவதற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிபுணர் குழுவொன்று நேற்றுமுன்தினம் முதல் (17ஆம் திகதி) ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் புவிச்சரிதவியல், விவசாய, விஞ்ஞானம் உள்ளிட்ட பல பீடங்களைச் சேர்ந்த 10 பேராசிரியர்கள் அடங்கிய குழுவினரே மீதொட்டமுல்ல பகுதிக்கு வந்துகள ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது. இதற்குப் புறம்பாக ஜப்பான் அரசும் தொழில்நுட்பக் குழுவொன்றை அனுப்பவுள்ளது.

ஆனாலும், பொருத்தமற்ற இடத்தில் அளவுக்கு அதிகமாகக் குப்பைகள் கொட்டப்பட்டதாலேயே இந்த இடர் ஏற்பட்டுள்ளது எனப் பிரதேசவாசிகள் தெரிவிக்கினறனர்.

"என்னதான் ஆய்வுகளை நடத்தினாலும் போன உயிர் திரும்பி வந்துவிடுமா? குப்பை கொட்ட வேண்டாம், வேண்டாம் எனச் சொல்லியும் கொட்டியவர்கள், இப்போது ஆய்வு நடத்தி என்ன செய்யப்போகின்றனர்?

2008ஆம் ஆண்டு புளுமண்டோல் குப்பைமேடு அகற்றப்பட்ட பின்னர்தான் இங்கு நாளாந்தம் 1,000 இற்கும் மேற்பட்ட லொறிகள் வரும். பலவிதமான கழிவுகள் கொட்டப்படும். பாதுகாப்புப் பொறிமுறை இருக்கவில்லை. இதனால் பலருக்குத் தொற்றுநோய், சுவாசம் சம்பந்தமான பல நோய்கள் ஏற்பட்டுள்ளன. உயிரிழப்புச் சம்பவங்களும் நடந்துள்ளன. இன்று ஒட்டுமொத்தமாக அழிவு நடந்துவிட்டது. தேர்தல் வரட்டும். அரசியல்வாதிகள் வந்தால் விரட்டியடிப்போம். இனி இங்கு குப்பை லொறி வந்தால் நெருப்பு வைத்துக் கொளுத்துவோம். முன்னாள் அரசுக்குதான் இதில் பெரும் பங்கும் பொறுப்பும் இருக்கின்றது. இந்த அரசும் எம்மை கண்டுகொள்ளவில்லை" என அரசுகள் மீதும், அரசியல்வாதிகள் மீதும் தமது அதிருப்தியை ஒட்டுமொத்த கொலன்னாவ தொகுதி மக்களும் வெளியிட்டனர்.

இந்த நிலையில், கொழும்பிலுள்ள குப்பைகளைக் கொட்டுவதற்கான மாற்று நடவடிக்கை பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.

மீதொட்டமுல்ல குப்பைமேட்டை புத்தளத்துக்குக் கொண்டுசெல்வதே அரசின் உத்தேசமாக இருக்கின்றது. புத்தளம் சிமெந்து தொழிற்சாலைக்கு அருகில் காணப்படும் பெரிய குழிகளில் இந்தக் குப்பைகளை இடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து இன்னும் இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை.

ஆனால், மீதொட்டமுல்ல பகுதியை அரசு குப்பை வலயமாகப் பிரகடனப்படுத்தும் என்றே அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். தற்காலிகமாக மாற்று இடம் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் எம்மை வெளியேற்றிவிட்டு மீண்டும் இங்குதான் கொட்டப்படும் என்பது அவர்களது தர்க்கமாக இருக்கின்றது.

**மக்களை வெளியேறுமாறு அறிவுறுத்தல்**

அதேவேளை, குப்பைமேட்டுக்கு அடிவாரத்தில் வாழும் மக்களை வெளியேறுமாறு அரசு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

"வீட்டுடன் இரண்டு லட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டது. மேலும் சிலருக்கு பணம் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், மக்கள் அங்கிருந்து செல்வதில் ஆர்வம் காட்டவில்லை. வெளியேறியவர்களும் முன்னர் இருந்த வீட்டை வாடகைக்கு வழங்கிவிட்டனர்" என்று அரசின் அறிவிப்பை அடுத்து அங்கிருந்து வெளியேறிய குடும்பமொன்றின் தலைவர் தெரிவித்தார்.

ஆனால், அவரது கருத்தை ஒருசிலர் ஆமோதித்தாலும் அதில் பெரும் குறைபாடுகள் இருக்கின்றன எனப் பட்டியலிட்டுக்காட்டி கருத்து வெளியிட்டார் கே.பி.பிரேமலதா என்ற பெண்மணி,

குப்பைமேட்டுக்கு அடிவாரத்திலுள்ள சில வீடுகளுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டன. ஏனைய வீடுகள் கண்டுகொள்ளப்படவில்லை. மேலும் சிலருக்கு 15 லட்சம் ரூபா வழங்கப்பட்டது. அந்தத் தொகையை வைத்து வீடு வாங்கமுடியுமா? இடையிடையே அதிகாரிகள் வருவார்கள், செல்வார்கள். உருப்படியாக எதையும் செய்யவில்லை. பெருநாளுக்கு பின்னர்நடவடிக்கைஎடுக்கப்படும்எனக் கூறினார்கள். ஆனால், அதற்குள் எல்லாமே முடிந்துவிட்டது" என்றார்.

எதுஎப்படியோ மீரியபெத்த, அரநாயக்க, மீதொட்டமுல்ல என அலட்சியத்தின் விளைவாகப் பல மனித உயிர்கள் பலிகொடுக்கப்பட்டுள்ளன. எனவே, இனியும் இவ்வாறான சம்பவங்களுக்கு இடமளிக்கக்கூடாது. இடர்வலயங்களை இடர் முகாமைத்துவ அமைச்சு, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் உட்பட சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் கண்டறிந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். செத்த பின்னர்தான் செயற்பாடு என்றால் அரசும், அமைச்சரவையும் தனது செயற்பாடுகளை சுடுகாட்டில்தான் செய்யவேண்டும்" என சமூக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.







# உலக புத்தக தினத்தையொட்டி கட்டுரைப் போட்டி




அறிதூண்டல் மையம் உலக புத்தகதினத்தை முன்னிட்டு கட்டுரை போட்டியினை நடத்தவுள்ளது.

முப்பரிமான உருக்களின் கண்காட்சிகள், பயிற்சி பட்டறைகள், போன்ற செயற்ப்பாடுகளை அறிதூண்டல் மையம் வருடாந்தம் ஏப்ரல் 23இல் கொண்டாடப்படும் அனைத்துலக புத்தக தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுவாசகர் மத்தியில் கட்டுரை போட்டியை நடத்தவுள்ளது.

மாணவர்கள் பிரிவுகளுக்குரிய கட்டுரைத் தலைப்புக்களில் ஏதாவது ஒரு தலைப்பில் தரப்பட்டுள்ள கட்டுப்பாட்டுக்கமைய எழுதி தமது பாடசாலை அதிபர் மூலம் கற்கும் வகுப்பு,சொந்த ஆக்கம் என்ற உறுதியுரை, கட்டுரையாளரின் முழுப்பெயர் தொடர்புக்காக பாடசாலை தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவ்ரி போன்ற தகவல்களை தனித்தாளில் இணைத்து 30.04.2017க்கு முன் "அறிதூண்டல்மையம் 11/21வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்மேற்கு, இணுவில் என்ற விலாசத்துக்கு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

திறந்த போட்டியில் பாடசாலை மாணவர் தவிர்ந்த ஏனைய பொது வாசகர்கள் வயதுக்கட்டுபாடின்றி கலந்து கொள்ளலாம்.

இப்பிரிவிற்குரிய கட்டுரைத் தலைப்புக்களில் ஏதேனும் விரும்பிய தலைப்பில் கட்டுரையை எழுதி தமது கிராம அலுவலர் அல்லது சமாதான நீதிவான் மூலம் சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கண்ட விலாசத்துக்கு தொடர்பு கொள்வதற்கு வதியாக தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி என்பவற்றை தனியாக இணைக்கவும்.

போட்டிக்கு கிடைக்கும் கட்டுரைகளுள் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப்பெறும் கட்டுரையாளர்களுக்கு எதிர்வரும் மே மாதத்தில் புத்தகப் பரிசில்கள் வழங்கப்படும்.

வாசிப்புப் பண்பாட்டையும், நூலகப் பயன்பாட்டையும் மேம்படுத்தும் நோக்கிலான இந்தப் போட்டிக்கு அனைவரினது ஒத்துழைப்பையும், பங்குபற்றுதலையும் அறிதூண்டல் மையம் அன்புடனும் பணிவுடனும் எதிர்பார்க்கின்றது.

**போட்டி விதிமுறைகள் பின்வருமாறு:**

தரம் 6,7 ஐச் சேர்ந்த ஆரம்பபிரிவு I மாணவர்கள் 1. அறிவு வளர்சிக்கு நூல்களை வாசிப்பதன் அவசியம் 2.'எனது வாசிப்பு வழிகாட்டிகள்' எனும் தலைப்பில் டி தெரிவு செய்து 200, 250 சொற்களில் எழுத வேண்டும்.

தரம் 8,9 ஐச் சேர்ந்த ஆரம்பப் பிரிவு II மாணவர்கள் 1.பூவுலகை வெற்றி கொள்ள தகவல் உலகை உபயோகிப்போம். 2.எனது வாசிப்பு வழிகாட்டிகள் எனும் தலைப்பில் ஒன்றை தெரிவுசெய்து 300, 350 சொற்களிற்களுக்குள் எழுதவேண்டும்.

தரம் 10,11ஐச் சோந்த மத்திய பிரிவு மாணவர்கள் 1. வாசிப்புப் பண்பாட்டு அபிவிருத்தியை நாடும் இலங்கை தமிழ் சமூகம் 2. 'மாணவப் பருவ இலக்கிய முயற்சிகளுக்கு கல்வி நிறுவன சஞ்சிகைகளின் பங்களிப்பு ஒரு பிரதேசத்தை முன்னிலைப்படுத்திய அறிமுகம்' எனும் தலைப்பில் ஒன்றைத் தெரிவு செய்து 400, 500சொற்களுக்குள் எழுதவும்.

தரம் 12,13 ஐச் சேர்ந்த மேற்பிரிவு மாணவர்கள் 1.தகவலும் தேசிய அபிவிருத்தியும். 2. ஈழத்துத் தமிழ் சூழலில் மரபார்ந்த அறிவுச் செல்வங்களை அழியவிடாது பாதுகாத்து ஆவணப்படுத்தலின் அவசியம் எனும் தலைப்பில் ஒன்றைத் தெரிவு செய்து 600, 700 சொற்களுள் எழுதவும்.

திறந்த போட்டியானது பாடசாலை மாணவர்கள் தவிர்ந்த பொதுவாசகர்கள் வயது வேறுபாடின்றி பங்குபற்ற முடியும். 1.வீட்டு நூலகங்களின் விருத்தியூடாக வாசிப்புப் பண்பாட்டை வளர்த்தெடுத்தல் 2.இளையோரிடத்தே வாசிப்புப் பண்பாடு அன்றும் இன்றும் ஓர் ஒப்பீடு எனும் தலைப்பில் ஒன்றைத் தெரிவு செய்து 900, 1000 சொற்களுள் எழுதவும்.




ராசிகளுக்கான

# சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

## மகரம்

நடப்பு ஆண்டின் தொடக்கமே மகர ராசிக்காரர்களுக்கு சாதகமான பலன்களை தரும் வகையில் அமைந்துள்ளது. மனதில் உறுதித் தன்மை உருவாகும். புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் நிலவும் கிரக சஞ்சார நிலை நீங்கள் நினைக்கும் காரியங்களை எளிதில் நடத்தி முடிக்கும் சாதகமான அம்சத்தில் உள்ளது. தைரியமும், தன்னம்பிக்கையும் உங்களுக்கு எதிலும் வெற்றியைப் பெற்றுத் தரும். குடியிருக்கும் வீட்டில் மாறுதல் செய்ய முற்படுவீர்கள். பூர்விக இடத்தை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் இந்த வருடத்தில் தமது சொந்த ஊர் திரும்புவார்கள். சிரமமான சூழ்நிலையிலும் வரவு தொடரும்.

தன ஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் கேது சம்பாத்தியத்தைக் குறைப்பது போன்று தோன்றினாலும் மறைமுகப் பொருள் வரவு தொடரும். அதே நேரத்தில் வரவுக்கேற்ற செலவுகளும் வரிசையில் காத்து நிற்கும். சொகுசான வாழ்வுக்காக ஆடம்பரச் செலவுகளில் அதிக நாட்டம் செல்லும். குடும்பத்தில் சலசலப்பான நிலை தொடரும். விமர்சனங்களைப் பற்றிக் கவலை கொள்ளாது உறுதியாக இருப்பீர்கள். சில விடயங்களில் தோல்வி உண்டாகும் என்று தெரிந்தே தைரியத்துடன் இறங்கி வெற்றி காண முயற்சிப்பீர்கள். உங்கள் ஆலோசனைகளை அடுத்தவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட அதனைச் செயற்படுத்திக் காட்ட வேண்டும் என்ற உறுதியுடன் இருப்பீர்கள்.

தெளிவு மற்றும் அதிகாரமான பேச்சால் உங்கள் கௌரவம், மதிப்பு ஆகியன உயரும். உடன்பிறந்தோருடன் கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உண்டு. வதந்திகளால் குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றும். பிள்ளைகளின் வாழ்வில் உங்கள் தனி முயற்சியினால் புதிய திருப்புமுனை உண்டாகும். வருடத்தின் முற்பாதியில் குருபகவானின் பார்வையைப் பெற்றிருக்கும் நீங்கள் பிற்பாதியில் பத்தாமிடத்து குருவினால் சிறிது சிரமத்துக்கு ஆளாவீர்கள். நீங்கள் செய்ய நினைக்கும் சுபகாரியங்களைத் தள்ளிப்போடாது வருடத்தின் முற்பாதியிலேயே செய்து முடித்துக் கொள்வது நல்லது.

மாணவர்களுக்கு ஞாபக மறதியை வெற்றி கொள்ளத் தீவிர பயிற்சி தேவைப்படும். மாதிரித் தேர்வுகளை எழுதிப் பார்க்கவும். கூட்டுப் பயிற்சி நல்லது. எழுத்து வேகம் அதிகரிக்கும். இயற்பியல், மெக்கானிக்கல், மின்னியல் துறை மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். விளையாட்டுத்துறையில் திறமை பெற்றிருப்போருக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

பெண்கள் வீட்டுப் பிரச்சினைகளை வெளியே சொல்வது கூடாது. தாய்வழி உறவினர்களால் புதிய கலகங்கள் உருவாகக்கூடும். கணவருடன் இணைந்து செயற்பட்டு குடும்பச் சலசலப்புகளைக் களைய முற்படுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் கிடைக்கும். அலுவலகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். தொழில்முறை எதிரிகள் காணாமல் போவார்கள். விவசாயிகள், உணவக அதிபர்கள், நகைக்கடை அதிபர்கள் இலாபம் அடைவார்கள். பொதுவாக இந்த வருடத்தின் முற்பாதியில் நற்பலன்களையும், பிற்பாதியில் சற்று சிரமமான சூழலையும் எதிர்கொள்வீர்கள். இருப்பினும் உங்கள் வாழ்க்கைத் தரம் உயர்வடையும் என்பதில் ஐயமில்லை.

**பரிகாரம்**:
அருகிலுள்ள விநாயகப்பெருமானின் ஆலயத்திற்குச் சென்று அர்ச்சனை செய்வது நல்லது. எந்தவொரு செயலைத் தொடங்கும் முன்பும் விநாயகரைத் தரிசிப்பது நன்மை தரும். சங்கடஹரசதுர்த்தி விரதம் கடைபிடிக்கலாம்.

## வரலாற்றில் இன்றைய தினம்

### 19.04.2017

1839 -லண்டன் ஒப்பந்தத்துக்கு அமைய பெல்ஜியம் ஒரு நாடானது. அது நடுநிலையைக் கடைப்பிடிக்கும் என உறுதிப்படுத்தப்பட்டது.

1892 -அமெரிக்க மசாசுட்ஸ் ஸ்பிரிங்பீல்டில் முதன் முதலாக மோட்டார் வாகனம் ஓட்டியவரானார் சாள்ஸ் டூரியா.

1954 -பாகிஸ்தானில் உருது மொழியும், பெங்காளி மொழியும் தேசிய மொழியாக பாகிஸ்தான் அரசமைப்புச் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

1971 -முதலாவது விண் ஆய்வு நிலையம் சல்யூட் தொடங்கப்பட்டது.

1989 -யூ.எஸ்.எஸ். லோவா போர்க்கப்பலில் துப்பாக்கி வெடிமருந்து வெடித்ததில் 47 மாலுமிகள் சாவடைந்தனர்.

2013 -பொஸ்டன் மரதன் குண்டுதாரி எனச் சந்தேகிக்கப்பட்ட டமிரியன் சார்நீவ் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது சகோதரன் ஷொக்கார் படகு ஒன்றில் மறைந்திருந்த நிலையில் பின்னர் கைது செய்யப்பட்டார்.

1997 -வீரவில முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட 85 பேருக்கு விசேட அடையாள அட்டை.

2002 -யாழ். கொழும்பு நேரடி பஸ் சேவை முகமாலையோடு நிறுத்தப்பட்டது பிசுபிசுப்பு பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

2016 -படைவசமுள்ள காணிகள் தொடர்பான விவரத்தைத் திரட்டும் புதிய விண்ணப்பப் படிவங்கள் மாவட்டச் செயலகத்துக்கு வந்தன.

2016 -வடக்கு நெல்சிப் திட்டத்தில் முறைகேடுகள் விசாரணைக்குழு அறிக்கை.

## நாளை

**சித்திரை-07**
வியாழக்கிழமை -20.04.2017
திதி: நவமி பி.இ.01.12
நட்சத்திரம்: திருவோணம் மு.இ.10.20
சுபநேரம்:07.32-09.02 வரை
ராகுகாலம்:01.32-03.02 வரை
நடேசாபிஷேகம்



















## நிருத்திய லலிதம் கலை நிகழ்வு

திருகோணமலை ரேனு கமல நடனாலயம் வழங்கிய நிருத்திய லலிதம் கலை நிகழ்வு கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு திருகோணமலை உவர் மலை விவேகானந்தா கல்லூரி கலை அரங்கில் நடனாலயத்தின் நிறுவுனர் செல்வி. சுபானி சந்திர போஸ் தலைமையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வின் முதன்மை அதிதியான திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ண சிங்கத்துக்கு சிறப்பு மலர் வழங்கி வெளியிடப் பட்டது. (40)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19.05.1944 — மறைவு 13.05.2012

### அமரர் செல்லத்துரை யோகநாதன்

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யா/ இணுவில் இந்துக்கல்லூரி)

காலனே வந்ததேனோ!
காலமே சென்றதேனோ
உலகத்தின் நியதி தன்னில்!
துயரம் தான் மிச்சமன்றோ
சென்றாலும் வாழ்வீரே எம்மோடு
நெஞ்சத்தால் அழியாத நினைவோடு
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இணுவில் மேற்கு,
இணுவில்.

என்றும் உங்கள் நினைவோடு துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சாமிநாதர் யோசவ் அன்ரன்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)



யாழ்ப்பாணம் சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமிநாதர் யோசவ் அன்ரன் நேற்று (18.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவக்கீன்பிள்ளை சாமிநாதர் - அக்கினேசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை சவரிமுத்து- திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஆன்மேரி பெனிற்றாவின் பாசமிகு கணவரும், ஜெறோசன் (முகாமைத்துவப் பீடம், யாழ்.பல்கலைக் கழகம்), ஜெனோசன் (உயர்தரம் - கணிதப் பிரிவு, புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானமலர், றுக்மணி, அருட்தந்தை ஜெயரஞ்சன் (பங்குத்தந்தை, மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம்), மனோறதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தங்கராசா (ராசன்), விக்ரர், ஜெமுந்துபிள்ளை- மேரியோசப்பின், மேரிறெஜினா, அருட்சகோதரி கிறிஜிட் மல்லிகா, காலஞ்சென்ற அன்ரன் ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நிலக்சன், நிருசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (20.04.2017 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொலைபேசி: 021-2051689

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கரத்னம் நடராசா

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்னம் நடராசா நேற்று (18.04.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகன் பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கனகன் நடராசாவின் அன்பு மனைவியும் பத்மபிரியா, பிரியதர்சினி (இத்தாலி), லோகிதன்(கனடா), மதீசன்(ஆஸ்திரேலியா), வின்சன் ஆகியோரின் பாசமிகு தாயும் தர்மராசா, தவமலர், தர்மேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரராசசிங்கம், இமை யாளன்(இத்தாலி), டர்சிகா(கனடா), நிவேதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2017) புதன் கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் அந்திரானை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 076 541 7719

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கும் farm school இற்கும். இடையில் நல்ல சூழ்நிலையில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நேரடிவிற்பனைமட்டும்)
தொடர்பு.0766972287

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் குளிரூட்டப்பட்ட (A/C) வசதியுடன் மேல்மாடி வீடு நாள். கிழமை. மாத அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

A/C ROOMS, NON A/C ROOMS FOR RENT
தொடர்பு: 077 2017 824

## வேலையாள் தேவை

கடை ஒன்றில் பணிபுரிய 30 வயதிற்கு உட்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் தேவை.

தொடர்புக்கு.0779370000

## தவறிவிட்டது

எஸ்.ஆர் .விக்னேஸ்வரன் என்பவரது வெளிநாடு மற்றும் உள்நாடு சாரதிய அனுமதிப்பத்திரங்கள் அடங்கிய கைப்பை நல்லூரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 021 224 2966

## KERALA CONSTRUCTION

கட்டட மற்றும் வீடுகள் நிர்மாணித்தல் திருத்தவேலைகள் செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு - அரசாங்க உத்தியோகத்தர் மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு விசேட கழிவு உண்டு.

தொடர்பு - ச. பாபுஜயர்
077 907 6843

## வேலைவாய்ப்பு

உணவு, தங்குமிடம் தரப்படும். அத்துடன் நாள் சம்பளம் ரூ.1600 நாள் சம்பளம், கிழமைச் சம்பளம், மாத சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். ஐஸ்கிறீம், பிஸ்கட், யோகட்,சோசேஜஸ், பவர் சப்ளை, வர்ணபூச்சு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு லேபல் பிரிவுகளுக்கு ஆண், பெண் (18-60) வயது உட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

076 571 5235, 077 401 7543

2000 - 3000 ரூபா கொடுத்து Agency ஐ நம்பி ஏமாறாதீர்கள். இதோ எங்களிடம் மட்டும் தான் சரியான நிறுவனம் உண்டு. மாதச் சம்பளம் கிடைக்கும் வரை பார்த்துக் கொண்டு இருக்கத் தேவையில்லை. நாள் சம்பளம் 1600/= ஆண், பெண் வயது (18-60) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கு.

077 494 3502, 071 147 5324

## மரண அறிவித்தல்



### திருமதி நல்லம்மா கந்தையா

யாழ். கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா கந்தையா நேற்று (18.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரஸ்வதி, மற்றும் தங்கரத்தினம் (கனடா) காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், சுந்தரலிங்கம், பாலசிங்கம் மற்றும் கனகபூசணிஅம்மா (சாந்தம்மா), துரைவீரசிங்கம் (வெள்ளைக் கண்டு) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சின்னத்துரை, நடராசா, சேமாம் பிகை, வசந்தபூபதி, சாந்தினி, இராசரத்தினம், நீலாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
துரைவீரசிங்கம் (வெள்ளைக்கண்டு)
இராமகிருஸ்ண பாடசாலை வீதி, கோண்டாவில்.
021 222 5199

பாசையூர்...

பிள்ளை வின்சன் சியஸ் (வயது - 57) என்பவரே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

"யாழ்ப்பாணம், பாசையூரிலிருந்து சுமார் 6 கிலோமீற்றர் கடல் தூரத்தில் அவர் படகிலிருந்து கடலில் இறங்கி நின்று தொழிலில் ஈடுபட்டிருந்தார். திடீரென மாரடைப்பு ஏற்பட்டு அயலில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களிடம் சைகை மூலமாகத் தகவலைக்கூறி அவர் அழைத்துள்ளார். அவர்கள் வந்து அவரை மீட்கும் போது அவர் படகில் மயங்கிவிட்டார். அவரை கரைக்குக் கொண்டுசென்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் குடும்பத்தலைவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ சோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது" என்று இறப்பு விசாரணை யில் தெரிவிக்கப்பட்டது. விசாரணை களின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர் **திரு. இ. சந்திரகுமார்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

### சிவகுரு இந்திரன்

அவர்கள் 17.04.2017 திங்கட்கிழமை காலமானார்.
அன்னாரின் மறைவுக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் கல்வியியல் முதுமாணி அணி (XII."A")இன் மாணவியும் எமது ஆசிரிய நண்பியுமான **திருமதி இரட்ணேஸ்வரி சாந்தலிங்கம்** அவர்களின் அன்புமிகு தாயார்

**திருமதி இராசையா சேதுப்பிள்ளை**

அவர்கள் 17.04.2017 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் மறைவினாற் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்,**
**கல்வியியல் முதுமாணி கற்கைநெறி அணி (XII)**

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு 01 . 01 . 1946 — இறப்பு 17 . 04 . 2017



### பாலசிங்கம் ரவீந்திரநாதன்

(ஓய்வு பெற்ற லிகிதர், வலயக்கல்வி அலுவலகம், பருத்தித்துறை)

தும்பளை மேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் ரவீந்திரநாதன் (17.04.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்வளை,
தும்பளை மேற்கு, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பொன்னம்மா செல்வவிநாயகமூர்த்தி



கேசரிவீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா செல்வவிநாயகமூர்த்தி 18.04.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வவிநாயக மூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, செல்லையா, முருகுப்பிள்ளை, சின்னத்துரை மற்றும் தங்கப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருள்மோகன், வசந்தமோகன், ரதமோகன், யசோதா ஆகி யோரின் பாசமிகு தாயாரும் சிவலோகினி, பாலசரோஜா, விஜயா, நந்தகோபால் ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரன் ,மதுஷா, வைஷ்ணவி, வேணுஜன், ரக்ஷா, ரிஷி, நேமிகா, லக்சிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2017) வியாழக் கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் (கந்தரோடை) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்பொலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## குடும்பத்...

நாவலர் வீதியைச் (காதி அபுபக்கர் வீதி) சேர்ந்த மொஹமட் யாசின் மொஹமட் யஸோக் (வயது - 21) என்ற இளம் குடும் பத்தலைவரே சடலமாக மீட்கப்பட்டார்.

"யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் வீதியோரம் குறித்த குடும்பத் தலைவர் நேற்றுமுன்தினமிரவு வீழ்ந்து காணப்பட்டார். எனினும் நேற்று முற்பகல் 9.15 மணியளவில்தான் அந்த வீதியால் சென்றவர்கள் அவரை மீட்டுயாழ்ப்பாணபோதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது" என்று பொலிஸார்தெரிவித்தனர்.

"குறித்த குடும்பத் தலைவர் நச்சுத் திரவம் அருந்தியதாக முடிவுக்கு வரமுடியாதுள்ளது. நச்சு உயிரினங்களின் கடிக்கு இலக்கான முடிவுக்கும் வரமுடியவில்லை. அவரது வயிற்றில் இலைகுழை போன்ற தன்மையான நிறத்தில் பொருள்கள் காணப்பட்டன. போதைப் பொருளை அவர் அதிகளவில் பயன்படுத்தியிருக்கலாம். அதனால் தீங்கு ஏற்பட்டு அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இறப்புக்கான காரணத்தைத் தற்போது உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. அதனால் அவரது உடல் பாகங்கள் சில பரிசோதனைக்காககொழும்புக்கு அனுப்பப்பவுள்ளன" என்று உடற்கூற்றுப் பரிசோதனையின்போது தெரிவிக்கப்பட்டது. சடலம் நேற்றிரவு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

இம்முறை தனயோகம் உங்களுடையதா? | 18.04.2017 | 2121 | நீலம்
மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 04 35 38 58
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி ரூ 2, 943, 492/=
2017.04.21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

செவ்வாய்க்கிழமை நியத ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 557 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 18.04.2017
வெற்றி இலக்கங்கள் 10 12 60 64 V
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 25,787,155/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான மகோற்சவ கால தற்காலிக கடைகள் வழங்கல்

20.04.2017 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு தற்காலிக கடைகள் வழங்கப்படும்.

ஆதீனகர்த்தா
த.பரஞ்சோதி.

## மரண அறிவித்தல்



### நல்லம்மா நாகலிங்கம்

(சரவணமுத்து)

கிளானை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் நகுலேஸ்வராவீதி, கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா நாகலிங்கம் (சரவணமுத்து) 18.04.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCIES

University of Jaffna will entertain applications to reach us on or before **02.05.2017** from qualified Sri Lankan Nationals for the undermentioned **Temporary** posts.

**FACULTY OF SCIENCE**

**Temporary Assistant Lecturer / Temporary Demonstrator** in Botany / Chemistry/ Physics / Zoology / Fisheries

**Temporary Assistant Lecturer /Temporary Instructor** in Mathematics / Statistics / Computer Science

**Temporary Instructor** in Computing

**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator/ Temporary Instructor.**

**Minimum Requirements/Qualifications:**

1. A Degree with specialization in the relevant subject with First Class or Second Class (Upper Division) Honours;

OR

2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;

OR

3. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours, and (b) a recognized postgraduate degree in the relevant subject

In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should submit **separate application for each.**

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**Registrar,**
University of Jaffna, Sri Lanka.
18.04.2017

கொவிசெத
சீட்டிழுப்பு வாரம்: 125
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 18.04.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 83,235,756/-
I 01 09 15 47
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது தூரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்

### திருமதி மனோரஞ்சிதம் குணரட்ணம்

(பெரியவிளான், இளவாலை)



பெரியவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மனோரஞ்சிதம் குணரட்ணம் நேற்று (18.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் குணரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் மாலதி (லண்டன்), மாதினி (கனடா), மாதவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் மகேஸ்வரி(லண்டன்) காலஞ்சென்ற சபாரத்தினம் , தர்மராஜசிங்கம், யோகரட்ணம் (ஜேர்மன்), இராஜரட்ணம், காலஞ்சென்ற தளையசிங்கம் (லண்டன்) மற்றும் சிவராசரத்தினம், பராசக்தி (கனடா),ஈஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரவிராஜ் (லண்டன்), இரட்ணராஜா (கனடா), மாயகேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2017) புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரியவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**டாக்டர் பொ.தர்மராஜசிங்கம், பொ.இராஜரட்ணம், பொ.சிவராஜரட்ணம்(சகோதரர்கள்)**

## நீங்கா நினைவுகளுடன் ஓராண்டு அஞ்சலி





தோற்றம் 06.11.1975 — மறைவு 19.04.2016
**சண்முகராசா சுதர்மன் (சுதன்)**

தோற்றம் 28.02.1978 — மறைவு 27.05.2016
**சண்முகராசா துவாரகா (சூட்டி)**

ஒரு கூட்டு பறவைகளாய் ஒன்றாக நாம் வாழ்ந்தவேளை
பாதியிலே எம்மை பரிதவிக்க விட்டு பறந்து சென்ற எம் குலவிளக்குகளே
இனிமையான உங்கள் பேச்சும் இரக்கமுள்ள உங்கள் சிந்தனையும்
நம்பிக்கையான வார்த்தைகளும் எங்குதான் சென்றனவோ?
காலம் எல்லாம் கூடிவாழ்வோம் என நாம் இருந்தோம் ஆனால் காலனவன்
கவர்ந்து சென்றிட கண்ணீரில் எம்மைதவிக்க விட்டுவிட்டு எங்கே சென்றீர்கள்?
ஏனிந்த அவசரமோ ஓராண்டு சென்றாலும் மாறாத உம் நினைவுகளுடன்

சண்முகராசா (அப்பா), நித்தியலட்சுமி (அம்மா),
கௌசலா (அக்கா), விஜிதரன் (அத்தான்), மதுரா (தங்கை), அறிவகன் (மருமகன் / பெறாமகன்)

## கடல் நீரை...

எடுக்கப்படவில்லை. வடமராட்சி கிழக்குப் பகுதிப் பொது அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டமையால், மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமும் முடிவு காணாமல் முடிந்துள்ளது.

கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமராட்சி கிழக்குப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுவிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரப்படமாட்டாது. வடமராட்சி கிழக்கில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தின் மூலமே குடிதண்ணீர் வழங்கப்படும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார். எங்களது சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளாமல் அவர் எப்படி அவ்வாறு கூற முடியும். அப்படியானால் முடிவு எடுத்த பின்னர் ஏன் இந்தக் கூட்டத்தை கூட்டுகின்றீர்கள் என்று வடமராட்சி கிழக்குப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர்.

திட்டத்துக்கான கடல் நீரை எடுத்தல், சுத்திகரிப்புச் செய்த பின்னர் நீரை மீளவும் கடலுக்கு விடுதல், கடலுக்குள் மீளவும் செல்லும் நீரில் காணப்படும் உப்பின் செறிவு தொடர்பிலேயே, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர். இதற்கு விளக்கம் வழங்கப்பட்டது. இதன்போது அந்தப் பகுதி மீன்பிடி அமைப்புக்கள், தமது மீன்பிடி முறைமை மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் குறிப்பிட்டனர்.

திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வடமராட்சி கிழக்கு பொது அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால், முடிவு எட்டப்படாமல் கூட்டம் முடிவடைந்தது.

கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மருதங்கேணி கடல்நீரை சுத்திகரிப்புத் திட்டத்தை மேற்கொள்ள கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திட்டமிடப்பட்டது. அந்தப் பகுதி அமைப்புக்கள், மக்களுடன் நேரில் உரையாடி ஆய்வுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுகளை நாரா நிறுவனம் மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில் கூட்டம் இடம்பெற்றது. அடிப்படையில் நிறுவனப் பிரதிநிதிகள் தமது ஆய்வின் அறிக்கையைத் தெளிவுபடுத்தினர். இதன் பிரகாரம் பிரதேச சூழல், அந்தப் பகுதியின் கடல்வளம் என்பன பாதிப்படையும் என்று நாரா நிறுவனம் அறிக்கையிட்டுள்ளதால் அந்தத் திட்டத்தையும் அனுமதிக்க முடியாது என்றே அப்பகுதி மக்களுடனான சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய உடன் மாற்றுத் திட்டங்கள் தொடர்பில் ஆராய வேண்டிய ஓர் அவசியம் ஏற்படுகின்றது என்றார். (த-5-101)

## குப்பைமேடு...

வாசுதேவ நாணயக்கார.

பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத் தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததில் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்களின் சொத்துக்களும் அழிவடைந்துள்ளன. இந்தச் சம்பவத்தை இயற்கை இடராகக் கருதிவிட முடியாது. இதற்கு அனைத்து அரசுகளும் பதில் சொல்லியே ஆகவேண்டும். இவர்களின் அலட்சியத்தாலும் அரசியல் சுயநலத்தாலுமே இவ்வளவு பெரிய இடர் ஏற்பட்டுள்ளது. உண்மையில் இதனை மனித உரிமை மீறல் சம்பவமாகவே கருதவேண்டும். போர்க் காலத்தின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகத் தெரிவித்து ஜெனிவாவுக்கு செல்வதைப்போல இந்த விடயத்தையும் ஐ.நா.வின் கவனத்துக்குக் கொண்டு செல்லவேண்டும்.

இந்த இடரிலும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்பதால் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசைன், இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனையையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய தீர்வையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றார். (த-5)

## விசாரணை...

லான விசாரணையின் இறுதி அறிக்கைகள் சில, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மகிந்த ராஜபக்சவுடனும் அவரது குடும்பத்தினருடனும் நேரடியாகத் தொடர்புடையதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மோசடிகள் தொடர்பிலான அறிக்கையே கையளிக்கப்படவுள்ளது.

மகிந்த ஆட்சியில் நடைபெற்ற மிகப் பெரிய ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு, அரச தலைவர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு பல்வேறு மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தியது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அரச தொலைக்காட்சியில் தேர்தல் விளம்பரங்கள் ஒளிபரப்பியமைக்கான பணத்தை மீளச் செலுத்தாமை மற்றும் பசில் ராஜபக்ச தொடர்பிலான ஊழல் அறிக்கைகள் என்பன அரச தலைவரிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத் திறப்பு விழாவுக்காகச் செலவிடப்பட்ட பணத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பிலான அறிக்கை, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சட்டவிரோதமான முறையில் நியமனங்கள் வழங்கிச் சம்பளம் வழங்கியமை மற்றும் சிறப்புரிமைகள் வழங்கியமை தொடர்பிலான அறிக்கை, வீதி வலையமைப்பை நடைமுறைப்படுத்தும் கருத்திட்டத்திற்கமைய சட்டவிரோதமான முறையில் லான்ட் குரூசர் வண்டியொன்று பயன்படுத்தப்பட்டமை உள்ளிட்ட ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யப்பட்ட மூன்று அறிக்கைகளே இந்த வாரம் அரச தலைவரிடம் கையளிக்கப்படவுள்ளன. (த-5)

## கைதாகி...

சென்ற இந்திய தொழிலதிபர் விஜய் மல்லையா அங்கு வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மூன்றே மணிநேரத்தில் விடுதலை பெற்றார்.

9 ஆயிரம் கோடி கடன் விவகாரத்தில் இந்திய உயர்நீதிமன்று நேரில் முன்னிலையாகுமாறு விடுத்த கட்டளையை மல்லையா ஏற்கவில்லை. இதனால் இந்தியாவில் இருந்த மல்லையாவின் சொத்துக்கள் முடக்கப்பட்டன. அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் பிரிட்டன் பொலிஸாரின் உதவியுடன் நாடுகடத்த இந்தியா கடும் முயற்சிகளை எடுத்தது. இந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் (இலங்கை நேரப்படி) மல்லையா கைதுசெய்யப்பட்டு வெஸ்ட்மினிஸ்டர் மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். மன்று அவரைப் பிணையில் செல்ல அனுமதித்ததைத் தொடர்ந்து கைதாகி மூன்றே மணிநேரத்தில் வெளிவந்தார் மல்லையா.

அவரை இந்தியாவுக்கு நாடு கடத்துவது தொடர்பான சட்டபூர்வ நடவடிக்கைகளைப் பிரிட்டன் அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர் என்று சொல்லப்படுகிறது. இருப்பினும், இந்த சட்ட நடவடிக்கைகளின் மூலம் அவர் இந்தியா திரும்புவாரா என்பதை உறுதிப்படுத்த முடியாது. ஏனெனில் இந்தியா பிரிட்டன் இடையேயான நாடுகடத்தும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கைதாகும் நபருக்கு சில உரிமைகள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சைக்கிள்...

வவுனியாவைச் சேர்ந்த த.பிரதாபன், கடந்த 8 ஆம் திகதி சைக்கிள் பயணத்தை ஆரம்பித்திருந்தார். இலங்கை முழுவதும் கடந்த 11 நாள்களாகச் சைக்கிளில் ஆயிரத்து 515 கிலோ மீற்றர் தூரம் பயணித்துள்ளார். பயணத்தை முடிக்கும் நிகழ்வு, வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று நடைபெற்றது.

'எமது நாட்டில் வாழும் 60 வயதிற்கு மேற்பட்ட குடிமக்கள் யாவருக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அரசு நிறைவேற்றி அதன் மூலம் முதியவர்கள் யாவருக்கும் பொருத்தமான போதுமான பணத்தை மாதாந்தம் ஓய்வூதியமாக வழங்கி, அவர்களது மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் வழங்க வேண்டுமென்ற விண்ணப்பத்தை முன்வைக்கின்றேன். இந்த மனிதாபிமானக் கோரிக்கையை முன்வைத்து கடந்த 8 ஆம் திகதி ஆரம்பித்த பயணத்தை முடிவு செய்கின்றேன். எனது கோரிக்கையைத் தங்களின் மேலான கவனத்துக்கெடுத்து முதியோர் வாழ்வு சிறப்பாக அமைவதற்கு தங்களது ஆட்சிக் காலத்தில் பொருத்தமான தீர்வை வழங்க வேண்டும்' என்று கேட்டுக் கொள்ளும் மனு, அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரிடம் கையளிப்பதற்காக, மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-5)

## வறட்சியால்...

லட்சத்து 50 ஆயிரம் பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிக்கையிட்டுள்ளது.

வறட்சி காரணமாக நாடு முழுவதும் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் வறட்சி காரணமாக நாடு முழுவதும் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் வடக்கிலேயே கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

விவசாயம் பாதிப்படைதல், குடிதண்ணீர் கிடைக்காமை இரண்டு காரணிகளையும் அடிப்படையாக வைத்தே வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 33 ஆயிரத்து 359 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 49 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 23 ஆயிரத்து 206 குடும்பங்களைச் சேர்ந்த 80 ஆயிரத்து 973 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 35 ஆயிரத்து 670 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 20 பேரும், வவுனியா மாவட்டத்தில் 24 ஆயிரத்து 507 குடும்பங்களைச் சேர்ந்த 85 ஆயிரத்து 771 பேரும், மன்னார் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 499 குடும்பங்களைச் சேர்ந்த 47 ஆயிரத்து 710 பேருமாக, வடக்கில் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 241 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 50 ஆயிரத்து 523 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கின் ஒட்டுமொத்த சனத் தொகையின் அரைவாசிப் பேர் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## அரசியல்...

களை அழித்திருப்பேன்.

இவ்வாறு மீதொட்டமுல்ல குப்பைமேட்டுக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டாளராகச் செயற்பட்ட கீர்த்திரத்ன தெரிவித்தார்.

மீதொட்டமுல்லயில் குப்பை கொட்டவேண்டாமென முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களை எல்லாம் இவரே தலைமையேற்று நடத்தியிருந்தார். பொலிஸாரின் கொட்டன் தாக்குதல், கண்ணீர்ப் புகைகுண்டுத் தாக்குதல் ஆகியவற்றுக்கு உள்ளாகியிருந்தார். எவ்வளவுதான் நெருக்கடிகள், அழுத்தங்கள் வந்த போதிலும் மக்களுக்கான போராட்டத்தை அவர் கைவிடவில்லை என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், குப்பைமேட்டுக்குள் சிக்கி கீர்த்தி ரத்னவின் மகள், மருமகன், பேத்தி ஆகியோர் உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவரது மனைவியும் உயிரிழந்துவிட்டார். தற்போது அவருக்கென மகளின் மகன் (பேரன்) மாத்திரமே மிஞ்சியுள்ளார்.

உறவினர்களுக்கு இறுதிக்கிரியைகள் நடைபெறும்போது துயரம் தாங்க முடியாமல் அவர் மயங்கி விழுந்துவிட்டார். அத்துடன் அரசியல்வாதிகள் மீதும் அவர் கடும் சீற்றத்துடனேயே இருக்கின்றார்.

'குப்பைகொட்டி எங்கள் வாழ்க்கையைப் பாழாக்கி விடாதீர்கள் என்று அழுது புலம்பினோம். கெஞ்சிக்கூடப் பார்த்தோம். எமது கோரிக்கைகள் கணக்கில் எடுக்கப்படவில்லை. ஒரு கிராமத்தின் வாழ்வுக்காக நான் ஆரம்பித்த போராட்டம் இந்தச் சாவுகளுடன் முடிவுக்கு வந்துள்ளது. பேரன் மட்டும் இல்லாவிட்டால், தற்கொலைக் குண்டுதாரியாகச் சென்று அரசியல்வாதிகளை அழித்துவிடுவேன்' என்று அவர் கடும் சீற்றத்துடன் கருத்து வெளியிட்டுள்ளார். (த-5)

## நழுவுகிறார்...

வந்த, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, தற்போது அந்த நிலைப்பாட் டில் இருந்து நழுவத் தொடங்கியுள்ளார்.

இந்திய ஊடகத்துக்கு மகிந்த ராஜபக்ச செவ்வி வழங்கியுள்ளார். அதில், 2015ஆம் ஆண்டு தேர்தலில் உங்களின் தோல்விக்கு, இந்தியாவே குறிப்பாக, 'றோ' அமைப்பே காரணம் என்று குற்றஞ்சாட்டியிருந்தீர்கள். இப்போது எப்படி ?' என்று மகிந்த ராஜபக்சவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், சிரித்துக் கொண்டே, உங்களுக்குத் தெரியும், நான் கடந்த காலத்துக்குள் செல்வதற்கு விரும்பவில்லை. என்ன நடந்ததோ அது நடந்துவிட்டது. இப்போது இது ஒரு புதிய பக்கம், என்று நழுவலாகப் பதிலளித்துள்ளார்.

மேலும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் தனது சகோதரருமான கோத்தபாய ராஜபக்சவுடன் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது என்று மகிந்த குறிப்பிட்டுள்ளார். தமக்கும் தமது சகோதரரான கோத்தபாய ராபஜக்சவுக்கும் இடையில் முரண்பாடு நிலவி வருவதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை. கடந்த காலத்திலோ நிகழ் காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ முரண்பாடுகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் கிடையாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். கோத்தபாய ராஜபக்சவுடனான உறவு அன்பினாலானது என்றும் மகிந்த குறிப்பிட்டுள்ளார். (த-5)

## அம்பாந்தோட்டை...

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பயன்பாடு, திறந்த மற்றும் வெளிப்படைத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டியதும், அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியதும், இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு முக்கியமானது என்று இலங்கை ஜப்பானிய தலைமை அமைச்சர்கள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 12 ஆம் திகதி ஜப்பானியப் பிரதமர் சின்சோ அபேயை ரோக்கியோவில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். ஜப்பானியப் பயணத்தை முடித்துக் கொண்டு, தலைமை அமைச்சர் ரணில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ரோக்கியோவில் இருந்து புறப்பட்ட நிலையில், இரண்டு நாடுகளின் தலைவர்களும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இலங்கையுடன் கடல்சார் ஒத்துழைப்பை ஜப்பான் வலுப்படுத்த வேண்டும் என்று ஜப்பானிய தலைமை அமைச்சர் சின்சோ அபே வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் கடல்சார் பாதுகாப்பு ஆற்றலை வலுப்படுத்தும் வகையில் இரண்டு ரோந்துப் படகுகளை ஜப்பான் வழங்கவுள்ளது.

ஜப்பான் -இலங்கைப் பாதுகாப்புக் கலந்துரையாடல் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தக் கலந்துரையாடலின் ஊடாக, ஏனைய உதவிகள், மேலதிக பாதுகாப்பு பரிமாற்றங்கள் குறித்துத் தீர்மானிக்கப்படும்.

ஜப்பான்- இந்திய கடலோரக் காவல்படைகள் இணைந்து நடத்தவுள்ள அடுத்த கூட்டுப் பயிற்சியில், இலங்கையைப் பார்வையாளராகப் பங்கேற்குமாறு ஜப்பான் அழைப்பு விடுத்துள்ளது என்றும் இந்தக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## அன்னை...

ஆரம்பத்தில் இந்தியத் தரப்புடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு அது முறிவடைந்தது. தொடர் போராட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. உணவு ஒறுப்புப் போராட்டத்தில் அன்னம்மா டேவிட் முதலில் குதித்தார். அவர் கடத்தப்பட்டார். இதன் பின்னர் அன்னை பூபதி உணவு ஒறுப்புப் போராட்டத்தை 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய வளாகத்தில் ஆரம்பித்தார். குடிதண்ணீர் மாத்திரம் அருந்தினார். ஒரு மாதத்தின் பின்னர், ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அவர் உயிர் துறந்தார்.

இவரது நினைவு நாள், தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் பெரும் எழுச்சிபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. கடந்த 7 ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் மீண்டும் இன்றைய தினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தலைமையில் இந்த நினைவு கூரல் இன்று நடைபெறவுள்ளது. (த-5)

## யாழ்ப்பாண...

பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையே அந்தக் கலந்துரையாடல் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடல் நடத்தி அங்கு பெறப்படும் முடிவுகளின் அடிப்படையில், பின்னர் சந்திப்பு நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக, முல்லைத்தீவு மாவட்டத்திற்குரிய கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்துக்கான கலந்துரையாடலை நாளை வியாழக்கிழமை காலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சினால், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு நேற்று வழங்கப்பட்ட தகவலில், வியாழக்கிழமை நடத்த தீர்மானிக்கப்பட்ட கலந்துரையாடலை வெள்ளிக்கிழமைக்கு மாற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)



## சரவணா ஸ்ரோர் உரிமையாளரின் ஆசை

சரவணா ஸ்ரோர் விளம்பரத்தில் அந்த நிறுவனத்தின் உரிமையாளர் நடிப்பது அனைவரும் அறிந்ததே. முன்னணி நடிகைகளான ஹன்சிகா, தமன்னாவுடன் சரவணா ஸ்ரோர் நிறுவனத்தின் உரிமையாளர் சரவணன் தோன்றி நடித்த விளம்பரங்களுக்கு பலரிடத்திலிருந்தும் பெரும் விமர்சனங்கள் எழுந்தன. புதிதாகத் தொடங்கப்பட்ட நிறுவனங்களின் ஆரம்ப விழா தொடங்கி, தீபாவளி, பொங்கல், கோடைக்கால விளம்பரம் வரை அனைத்து விளம்பரங்களிலும் இவரே விளம்பர மொடலாக நடித்து வருகிறார். இந்த நிலையில், இவருக்குச் சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை தற்போது துளிர்விட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. விரைவில் சினிமாவில் நடிக்கவுள்ளதாகவும், தான் கதாநாயகனாக நடித்தால் முதல் படமே நயன்தாராவுடன்தான் ஜோடி சேருவேன் என்றும் அவர் கூறியுள்ளார்.







## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | 8 | | | 5 | |
| | | 9 | | 5 | 4 | 3 | 1 | |
| | | | | | 7 | | | 6 |
| 7 | | | 6 | | 1 | | 9 | |
| | | | | 2 | | | | |
| | 5 | | 9 | | 8 | | | 2 |
| 2 | | | 5 | | | | | |
| | 4 | 6 | 8 | 1 | | 7 | | |
| | 3 | | | 6 | | 1 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 4 | 8 | 1 | 2 | 7 | 5 | 3 |
| 2 | 5 | 3 | 4 | 7 | 9 | 8 | 1 | 6 |
| 8 | 7 | 1 | 5 | 6 | 3 | 9 | 2 | 4 |
| 3 | 8 | 9 | 2 | 4 | 7 | 5 | 6 | 1 |
| 6 | 2 | 5 | 1 | 9 | 8 | 4 | 3 | 7 |
| 1 | 4 | 7 | 6 | 3 | 5 | 2 | 9 | 8 |
| 5 | 9 | 6 | 3 | 8 | 4 | 1 | 7 | 2 |
| 7 | 1 | 8 | 9 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 4 | 3 | 2 | 7 | 5 | 1 | 6 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.







## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் நற்செயலைச் சிலர் குறை கூறுவர். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்தித்தாலும், ஆதாயம் கிடைக்கும்.

**இடபம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களிடம் கருத்து வேறுபாடு கொள்வர். உடல்நலனுக்காக சிகிச்சை செய்ய நேரிடும்.

**மிதுனம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். புதிய சாதனை நிகழ்த்த வாய்ப்புக்கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணிவிடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** நண்பரின் ஆலோசனை, வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் உண்டாகும். சேமிக்கும் விதத்தில் லாபம் கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** பொறுப்பு அதிகரிப்பால், சிரமத்துக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் எதிர்ப்பைச் சந்திப்பர். பெண்கள், ஆன்மிக நாட்டத்துடன் செயல்படுவர்.

**கன்னி:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இடையூறு குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம்.

**துலாம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணி இலக்கை விரைந்து முடிப்பர்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறுக்கிடும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.

**தனுசு:** நேர்மை மிக்கவராக செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில், சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும்.

**மகரம்:** உறவினரிடம் கருத்துவேறுபாடு உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர். பிள்ளைகளின் வழியில் திடீர் செலவு உண்டாகும்.

**கும்பம்:** சுயநலம் கருதாமல் செயற்படுவீர்கள். கடந்த கால உழைப்புக்கு, நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்தியளிக்கும். சேமிப்பு உயரும். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** இனிய பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். உறவினர், நண்பர்கள் பாசத்துடன் நடந்துகொள்வர். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். வருமானம் அதிகரிக்கும்.

## சங்கிலியன் மகுடம்

யாழ்ப்பாணம், ஏப். 19

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் சங்கிலியன் இளைஞர் கழக அணி கிண்ணம் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சங்கிலியன் இளைஞர் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. இளைஞர் கழக அணி மோதியது. 64:61 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சங்கிலியன் அணி வெற்றிபெற்றது. (ம-23)



## உடுவில் செயலகம் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் உடுவில் பிரதேச செயலக அணி சம்பியனானது.

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் பிரதேச செயலக அணி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கோகுலன் 35 ஓட்டங்களையும், அனோசன் 22 ஓட்டங்களையும், சனந்தன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சதீஸ், வனிதன் இருவரும் தலா 2 இலக்குகளையும், உமேசுதன், சேந்திரன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

125 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய கரவெட்டிப் பிரதேச செயலக அணி 116 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

இதையடுத்து 8 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது உடுவில் பிரதேச செயலக அணி. (ம-23)

## வருகிறார் பிராவோ

ஐ.பி.எல். தொடரில் குஜராத் அணிக்காக ஒப்பந்தமாகியுள்ள வெய்ன் பிராவோ, காயத்தில் இருந்து மீண்டுள்ளார். இதனால் அவர் அடுத்தடுத்த ஆட்டங்களில் மீண்டும் அணிக்குள் இடம்பிடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பிக்பாஷ் ரி-20 லீக் தொடரில் விளையாடும் போது பிராவோவின் தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் அவருக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. ஐ.பி.எல். தொடரில் இதுவரை முடிவடைந்த ஆட்டங்களில் அவரால் பங்குபற்ற இயலவில்லை. இந்த நிலையில் காயத்தில் இருந்து மீண்டுள்ள அவர் இரண்டாம் சுற்று ஆட்டங்களில் குஜராத்துக்காக களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



## கரவெட்டி கரப்பந்து

கரணவாய், ஏப். 19

கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்கள் இன்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

பெண்களுக்கான கரப்பந்தாட்டம் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்றும், ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளையும் இடம்பெறவுள்ளன. (ம-108)

## கே.ஸி.ஸி.ஸி. சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 19

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் கே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. இளைஞர் கழக அணிய்ய எதிர்த்து சங்கிலியன் இளைஞர் கழக அணி மோதியது. 40:39 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றிபெற்றது. (ம-23)



## சீனிவாசனுக்கு அனுமதியில்லை

இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ள பன்னாட்டு கிரிக்கெட் சபையின் பொதுக்கூட்டத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சார்பில் சீனிவாசன் பங்குபற்ற இந்திய உச்சநீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர், செயலாளர் ஆகியோர் இந்திய உச்ச நீதிமன்றத்தால் பதவிநீக்கப்பட்டுள்ளனர். மன்றால் நியமிக்கப்பட்ட இடைக்காலக் குழுவாலேயே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதனால் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் கூட்டத்துக்கு இந்தியாவின் பிரதிநிதியாக சீனிவாசன் பரிந்துரைக்கப்பட்டார். ஆனால் இந்தப் பரிந்துரையை உச்சநீதிமன்றம் நிராகரித்தது. (ம)

## பொம்மர்ஸ் - கலைமதி அரையிறுதிக்குத் தகுதி

கரணவாய், ஏப். 19

பருத்தித்துறை ஐக்கியத்தின் கால்பந்தாட்டத் தொடரில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் கலைமதி விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதியாட்டங்களுக்குத் தகுதி பெற்றன.

பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் பொம்மர்ஸ் அணியின் சார்பாக முதல் கோல் பதிவானது. முதல் பாதியின் முடிவு வரை வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. இரண்டாவது பாதியின் 6ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் சார்பாக பதில் கோல் பதிவானது. ஆட்டத்தின் இறுதி நிமிடங்களில் பொம்மர்ஸ் அணி மற்றொரு கோலைப் பதிவுசெய்து 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்துஇடம்பெற்றஆட்டத்தில்நவிண்டில்கலைமதிவிளையாட்டுக் கழகமும் பொற்பதி செண். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)

## நியூபைட், மருதநிலா அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 19

வவுனியா நியூ பைட் விளையாட்டுக் கழகத்தின் 21ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நியூ பைட் ஏ, மருதநிலா அணிகள் வெற்றிபெற்றன.

நியூபைட்விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நியூ பைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஏ.பி.சி. விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதியது. நியூ பைட் ஏ அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்மதினா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துமருதநிலாவிளையாட்டுக்கழகஅணிமோதியது. 5:1 என்ற கோல் கணக்கில் மருதநிலா அணி வெற்றிபெற்றது. (ம-23)



## மொகமட் நபி, ரசிட் கான் இருவரும் ஒரே ஆட்டத்தில்

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தில் மொகமட் நபி, ரசிட் கான் என்று இரு ஆப்கானிஸ்தான் வீரர்களையும் களமிறங்கியது ஹைதராபாத். நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் ஏலத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இரு ஆப்கானிஸ்தான் வீரர்களை எடுத்தது ஹைதராபாத். சுழல்பந்து வீச்சாளர்களான நபி, ரசிட்கான் இருவருமே அவ்வாறு ஏலத்தில் எடுக்கப்பட்டனர். எனினும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில்நபிஇடம்பெறவில்லை. ரசிட்கான்மட்டுமே களமிறக்கப்பட்டார். ஆனால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தில் இந்த இருவரையும் களமிறக்கினார் அந்த அணியின் தலைவர் வோர்ணர். ஐ.பி.எல். வரலாற்றில் ஆப்கானிஸ்தான் வீரர்கள் இருவர் ஒரே அணியில் ஒரே ஆட்டத்தில் களமிறங்கிய சந்தர்ப்பமாக இது அமைந்தது. ஐ.பி.எல். விதியின் படி ஓர் அணியில் ஆகக்கூடியது 4 அயல்நாட்டு வீரர்களே இடம்பெறலாம். அந்த நால்வரில் இருவர் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த வர்களாக இருந்தமை பலரையும் வியக்க வைத்தது. (ம)

# வெற்றிக்கு திரும்பியது பெங்களூர்

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் தொடர் தோல்விகளின் பின்னர் ஒருவாறாக வெற்றிக்குத் திரும்பியது பெங்களூர் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற குஜராத் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பெங்களூர் அணியில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. அதிரடி வீரரான வில்லியர்ஸ், சுழல்பந்து வீச்சாளர் பத்ரி இருவரும் நீக்கப்பட்டிருந்தனர். கோக்லியின் இந்த முடிவு கண்மூடித்தனமானது என்று விமர்சிக்கப்பட்ட போதிலும் தனது அதிரடியால் வில்லியர்ஸ் இல்லாத குறையை நிவர்த்தி செய்தார் கெய்ல். சிறந்த முறையில் ஒத்துழைப்புக் கொடுத்தார் கோக்லி. 12 பந்துப்பரிமாற்றங்களில் 120 ஓட்டங்களைத் தொட்டது பெங்களூர். 38 பந்துகளில் 77 ஓட்டங்களைக் குவித்து (5 பவுண்டரிகள் 7 சிக்சர்கள்) ஆட்டமிழந்தார் கெய்ல். 64 ஓட்டங்களுடன் கோக்லியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஹெட், கேதர் யாதவ் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்த முடிவில் 2 இலக்குகள் இழப்புக்கு 213 ஓட்டங்களைக் குவித்தது பெங்களூர்.

பந்துவீச்சில் குல்கர்னி, தம்பே இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத்துக்கு அதன் ஆரம்ப வீரரான சிமித் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். வந்த வேகத்தில் வெளுத்துவாங்கினார் ரெய்னா. அவரால் 23 ஓட்டங்களையே எடுக்க இயன்றது. மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் மக்கலம். 72 ஓட்டங்களுடன் மக்கலத்தை வீழ்த்தினார் சாஹல். மக்கலத்தின் ஆட்டமிழப்பு குஜராத்தின் தோல்வியை உறுதிப்படுத்தியது. நிர்ணயிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் 192 ஓட்டங்களையே பெற்றது குஜராத். 21 ஓட்டங்களால் வென்றது பெங்களூர். (ம)






# ஆஸி. கழகத்தில் யாழ். வீராங்கனை



இலங்கையில் மிகவும் உயரமுடைய வலைப்பந்தாட்ட வீராங்கனையாக உள்ள தர்சினி சிவலிங்கம் ஆஸ்திரேலியக் கழகங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் விளையாட வுள்ளார்.

இலங்கை வலைப்பந்தாட்ட வீராங்கனை ஒருவர் பன்னாட்டுக் கழக அணியில் இணைந்து விளையாடுவதற்கு பெற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இதன்படி தர்சினி ஆஸ்திரேலியாவில் உள்ள வெஸ்ட் பெல்கன்ஸ், மற்றும் மெல்போர்ண் சென்ட் எல்பன்ஸ் போன்ற பிரபல அணிகளிலேயே விளையாடவுள்ளார். 6 மாத ஒப்பந்த அடிப்படையில் தர்சினி இந்த அணிகளில் விளையாடவுள்ளார்.

இந்தக் கழகத்தில் விளையாடுவதற்காக இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சிடம் தற்போது கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்காவிட்டால் இலங்கை வீராங்கனை ஒருவருக்கு முதல் முறையாகக் கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும் சந்தர்ப்பமும் உள்ளது. (ம)

# யுவன்டாஸுக்கு எதிராக அரங்கேறுமாம் அதிசயம்

ஐரோப்பிய கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், அதிசயிக்கத்தக்க வகையில் யுவன்டாஸை வீழ்த்தி பார்சிலோனா அணி அரையிறுதிக்குத் தகுதிபெறும் என்று அந்த அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் தெரிவித்தார்.

சம்பியன்ஸ் லீக் தொடரின் விதிமுறையின் படி காலிறுதியில் மோதும் அணிகள் தமது மைதானத்திலும் எதிரணியின் மைதானத்திலும் என தலா ஒரு முறை மோதவேண்டும். ஓர் காலிறுதியில் யுவன்டாஸும் பார்சிலோனாவும் விளையாடி வருகின்றன. யுவன்டாஸுக்கு சொந்தமான மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் 0:3 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோற்றது. இதனால் இரண்டாவது சுற்றில் பார்சிலோனா ஓர் கோல் வித்தியாசத்தில் யுவன்டாஸை வீழ்த்தவேண்டும் என்ற கட்டாயமுள்ளது. இதனையடுத்தே நெய்மர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

# மிரட்டலின் மீள்வருகை

இரண்டு வருட தடைக் காலத்துக்குப் பின்னர் இந்த மாத இறுதிப் பகுதியில் மீண்டும் களத்துக்குத் திரும்பு கிறார் ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை மரியா சரபோவா.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின் போது செரபோவாவிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகளைச் சோதனை செய்ததில் அதில் விளையாட்டுலகில் தடைசெய்யப்பட்ட மெல்டோனியம் என்ற மருந்து இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் இரண்டு வருடங்களுக்குத் தடை செய்யப்பட்டார் செரபோவா. அவரின் தடைக்காலம் ஏற்கனவே முடிவடைந்துள்ளது. அடுத்த முக்கிய தொடரொன்றில் அவர் களத்துக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கையில் இந்த மாத இறுதிப்பகுதியில் மீண்டும் களமிறங்குவதை உறுதிசெய்தார் சரபோவா. இன்னும் சில தினங்களில் ஜேர்மனியில் நடைபெறவுள்ள தொடரிலேயே அவர் மீண்டும் களமிறங்கவுள்ளார்.

மெல்டோனியம் மருந்து 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியே விளையாட்டுலகில் தடை செய்யப்பட்ட மருந்தாக அறிவிக்கப்பட்டது. (ம)



# டெல்லி அணியில் இருந்து நீக்கப்படலாம் மத்தியூஸ்

ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணிக்காக விளையாடி வருகிறார் இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ். அவர் இன்று இடம்பெறும் ஹைதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் அணியில் இருந்து நீக்கப்பட அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

டெல்லி அணியின் ஆரம்ப ஆட்டங்களில் மத்தியூஸுக்கு இடம்கொடுக்கப்படவில்லை. ஆனால் கொல்கத்தா அணிக்கெதிரான நேற்று முன்தின ஆட்டத்தில் அவர் களமிறக்கப்பட்டார். துடுப்பாட்டத்தில் வெறும் ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்று போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். பந்துவீச்சிலும் இரு பந்துப்பரிமாற்றங்களை வீசி இலக்குகள் எதனையும் கைப்பற்றவில்லை. இதனால் இன்றைய ஆட்டத்தில் அவர் அணியில் இருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

## இனிய புதுவருடத்தில் அரியதோர் வேலை வாய்ப்பு

- உங்களுடைய வருமானம் மாதாந்தம் 15000 - 65000 பெற ஆவலா?
- உங்களுடைய கனவினை நனவாக்க Everest Pvt Ltd. Company யானது தயாராகவுள்ளது.
- தகைமைகள் O/L மற்றும் A/L தகைமைகள்.
- உங்களுடைய தகைமைகளுக்கேற்ப வேலைகள் நேர்முகத்தேர்வின் மூலம் வழங்கப்படும்.
- தங்குமிட வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும். (வவுனியா. மன்னார். கிளிநொச்சி. முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம்).
- எம்முடன் இணைய ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

076 416 5173, 076 864 3505
No.179, Hospital Road, Jaffna.

## கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## கிளிநொச்சி
## உழவு இயந்திரம் வாடகைக்கு பெறுவதற்கான மூடிய கேள்வி கோரல்

எமது சங்கம் மணல் ஏற்றி விநியோக நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதால் கீழ்க்குறிப்பிடப்படும் நடைமுறைகளுக் கமைவாக உழவு இயந்திரங்கள் வாடகைக்கு கோரப் படுகின்றன.

01. உருத்திரபுரம் வடக்கு நீவில் ஆற்றில் இருந்து ஏ9 வீதி, கணேசபுரம் வரையான பகுதிக்கு ஒரு சுமைக்கான வாடகையும், ஏ9 வீதிக்கு கிழக்குப்பக்கமாக விநியோகிப் பதற்கு மேலதிகமாக ஏற்படும் ஒவ்வொரு கிலோ மீற்றருக்குமான வாடகையும் கோரப்படுகின்றது. இவ் வாடகையானது ஆற்றில் இருந்து உழவு இயந்திரத்திற்கு மணல் ஏற்றும் மனிதகூலி உட்பட சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
02. ஆகக் குறைந்த கூலியினை சமர்ப்பிப்பவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இந் நடவடிக்கையானது தொடர்ச்சி யாக செயற்படுத்தப்படும்.
03. விண்ணப்பிப்பவர்களின் உழவு இயந்திரங்களுக்கும் இழுவைப்பெட்டிகளுக்கும் நடைமுறையாண்டிற்குரிய வாகனவரி அனுமதிப்பத்திரம், பதிவுச் சான்றிதழ், காப் புறுதி என்பன இருப்பதுடன் அதற்குரிய பிரதிகள் விண்ணப் பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

மூடிய கேள்வி பத்திரங்களை 2017.04.24 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு **தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம்(வ-து), கனகபுரம், கிளிநொச்சி** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு **021 320 8430** எனும் தொலை பேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,**
**கனகபுரம், கிளிநொச்சி.**

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

### பிரெஞ்சு மொழி

உடன் பதிவு செய்யுங்கள். அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!

0212228093 61. கச்சேரி - நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்

## வேலைவாய்ப்பு

**குறைந்த பட்ச தகைமையுடன் 4 வகையான பதவி வெற்றிடங்கள். மூந்தும் 18 பேருக்கு முன்னுரிமை.**

1. **வெளிக்கள உத்தியோகஸ்தர்** 18500 + உணவுப்படி
2. **மேற்பார்வையாளர்** - 22500 + உணவுப்படி
3. **உதவி முகாமையாளர்** - 25500 + கொமிசன் + உணவுப்படி (அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)
4. **அலுவலகப் பெண்** (சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்)

வயது எல்லை - 18 -38

**உங்கள் எதிர்காலத்துக்காக ஒரு சந்தர்ப்பம்! உடன் தொடர்பு கொள்ளவும்.**

129, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
077 998 7699, 077 884 8188, 021 300 4664

## அழகியல் டிப்ளோமா

BCBL @KU



பிரிட்டிஷ் கொலேஜிடமிருந்து
அழையுங்கள் : 021-3208342

### Diploma in Beauty Culture

மணப்பெண் அலங்காரம்,பல்வகையான விசேட முக அலங்காரம்,சாறி அலங்காரம்,நகம் மற்றும் தோல் பராமரிப்பு, மெகந்தி,விசேட சிகை அலங்கார முறைகள் என சுமார் 25 வகையான அலங்காரங்களையும் அவற்றில் பல உட்பிரிவுகளையும் உள்ளடக்கிய டிப்ளோமா பயிற்சி நெறி

**British College of Business and Languages**
No 788/4,செம்மணி வீதி,நல்லூர் (கிட்டுப்பூங்கா எதிரில்)

## வட இந்திய பத்திரிநாத், கேதாரநாத் கங்கோத்திரி, யமுனோத்திரி காசி யாத்திரை

**நாள்கள் : 20 ஆரம்பம் : 10.06.2017**

**செல்லுமிடங்கள் சுருக்கமான விவரம்**

டெல்லி, சுற்றிப்பார்த்தல் (அட்ஷயதாம் உட்பட), ரிஷிகேஸ், ஸ்ரீநகர், கௌரி குண்டம், கேதார் நாத், (சிவன் அர்த்தநாரீஸ்வரர் ஆன இடம்), கங்கோத்திரி கங்கை உற்பத்தி ஆகுமிடம், கங்காமாதா கோவில் ஜமுனோத்திரி ஆலயம் இன்னும் பல ஆலயம், இடங்களும் காணலாம்.

கேதாரநாதர், தரிசனம், **மானா**, சரஸ்வதி நதி உற்பத்தியாகுமிடம், **டிம்மிற் கோட், ஹரித்துவார்**, சுற்றிப்பார்த்தல், 10 இடங்கள், **பத்திரிநாத்** 108, வைஸ்ணவ தலங்களில் முதன்மையானது, விஷ்ணு ஆலயம், **மதுரா**, கிருஷ்ண ஜென்ம பூமி, ஆக்ரா (**தாஜ் மகால்**) பார்க்கலாம். **அலகாபாத்** (கங்கா, ஜமுனா, சரஸ்வதி) திருவேணி சங்கமம், **கயா**, காலமானவர்களுக்கு பிதிர்க் கருமம் செய்யுமிடம், **புத்தகயா**, புத்தாலயங்கள், **காசி (வாரணாசி)** விஸ்வநாதர் சிவன், உட்பட 15 இடங்கள் தரிசிக்கலாம், காசியில் 3 நாள்கள் தங்கல், **இராமேஸ்வரம், திருப்புலானி, உத்திரகோச மங்கை, நவ பாஷாணம், மதுரை**, மீனாட்சி சுந்தரேஸ்வரர், சென்னை வருகை, ஒருநாள் சொப்பிங், மறுநாள் நாடு திரும்பல்.

**வேறு எங்கும் இல்லாதவாறு 4 விமான பயணங்கள், AC வாகன வசதிகள், மூன்றுவேளை உணவு, குடிநீர் உட்பட தங்குமிடம். மிகுதி விவரங்களை முழுமையாக கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.**

**கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**
Tel: 077 768 0102, 077 736 2154

## வீடு விற்பனைக்குத் தேவை

பலாலி வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய இடங்களில் உடனடியாக வீடு விற்பனைக்குத் தேவை.

**தொடர்பு :- 077 144 9614**

## பெண் அலுவலக உதவியாளர் தேவை

கந்தர்மடம் பகுதியில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு ஆங்கிலம் மற்றும் கணினி அடிப்படை அறிவுடன் கூடிய பெண் அலுவலக உதவியாளர் தேவை.

**தொடர்பு :- 076 726 6899**

## கட்டடம் வாடகைக்கு

**யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. ஒவ்வொன்றும் 1120 சதுரஅடி கொண்டது.**

**021 205 1131**

## குவைத் நாட்டில் அதிஉயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

குவைத் நாட்டில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

Age Limit below 35

| Position | Nos | Salary(kwd) |
|---|---|---|
| Counter Sales man | 30 | 120 |
| Bell boy | 30 | 100 |
| Waiter/Waitress | 50 | 100 |
| Room Attendant | 20 | 100 |
| House keeping supervisor | 10 | 150-175 |
| Public Area cleaner | 25 | 100 |

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம் எதிர்வரும் 24 ஆம் திகதி எமது நிறுவனத்தில் வெளிநாட்டவர்களால் நேர்முகப் பரீட்சை நடைபெறும். தகுதியானவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

Relianceint consultants (Pvt) (Ltd)
No- 142, New moor street.
Colombo-12 (LL-No-2772)
011 524 4146, 077 721 5291

உ
சிவமயம்

# திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையால் தீர்க்கப்படாத நிதி சம்பந்தமான விடயங்களும் சிவாலயத்தின் கட்டட திருப்பணியும்

17.04.2017 உதயன் பத்திரிகை 5ஆம் பக்கத்தில் எம்மால் கொடுக்கப்பட்ட தகவல்களுக்கு ஆலயத் திருப்பணிச்சபையால் 18.04.2017 உதயன் பத்திரிகையின் பக்கம் 7 இல் ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் ஆணைப்படி வெளிவந்த மறுப்பறிவித்தல்.

நாம் மக்களுக்கு தெரிவித்த தகவல்கள் யாவும் உண்மையைத்தவிர வேறொன்றுமில்லை எனவும் அவற்றை நிரூபிக்கும் ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன எனவும் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

**பொது மக்களுக்கு உண்மைகளை உணர்த்துவதே எமது நோக்கமாகையால் நிர்வாகம் எங்களை பொது மேடையில் சந்திக்க தயாரா ?**

**'உண்மை எப்பொழுதும் பொய்யாகாது'**

கணவனை இழந்தவர் இரண்டு மாதத்திற்குள் இச்சிவாலயத்தின் அடிக்கல் நாட்டு வைபவத்தின் போது விஷேட பூசையில் வைக்கப்பட்ட திரவியத்துடன் கூடிய வெண்சங்கை ஆலய குருக்கள்மாரின் ஆசியுடன் அடிக்கல் கூடத்தில் பதிப்பதையும் நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்வார்களேயானால் அவர்களிடமிருந்து சமய நீதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

## இதுவும் பொய்யா ?

**அகில இலங்கை இந்து மாமன்றத்தினதும் ஏனைய இந்துசமய அமைப்புகளினதும் இது பற்றிய கருத்துக்களை வேண்டி நிற்கிறோம்.**

**ஆட்சிக்குழு அங்கத்தவர்கள், சிவகுமார் நமசிவாயம் (07127 23045), த. கணநாதலிங்கம் (077 3762755)**
**18.04.2017**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.